Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 14/00

දිනමුරසු වාරමලර් செப். 08-14, 2002

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 476




சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு


# ஆன்மீகம்

## மதப் பிரசாரம்

எந்த மதமாக இருந்தாலும் வேகம் இருப்பது தப்பு. எந்த மதமாக இருந்தாலும், அவரவர்களுடைய கொள்கைகளைக் கடைப்பிடித்து வந்தால்தான் அது நிலையாக இருக்கும். எந்த மதமும் மிகவும் வேகத்துடன் வேலை செய்தால், அதே வேகத்துடன் கீழேயும் இறங்கும். மனிதன் ஏறுகிறான் என்றால் ஒரு நாளைக்கு இறங்கித்தான் ஆக வேண்டும். அதனால் நிதானமாக இருந்தால் எல்லாம் நன்றாயிருக்கும். அவசரப் போக்கில் போனால் எந்தக் காரியமும் தவறாகத்தான் முடியும். மத மாற்றம், மதப் பிரச்சாரம் இரண்டுக்கும் வித்தியாசம் உண்டு. மதப் பிரச்சாரம் என்பது தங்களுடைய கடவுளையும் கொள்கைகளையும் பரப்புவது மாத்திரமே. ஆனால் மத மாற்றம் எனும்போது அதில் பல ஏமாற்றுக்களைச் செய்து, பேராசைகளை ஊட்டி, இங்கே எல்லாம் கிடைக்கும். அங்கே எதுவும் கிடைக்காது என்று சொல்லி மன மாற்றம் செய்து மத மாற்றம் செய்வது பெருந் தப்பு. எந்த மதமாக இருந்தாலும் தாக்கிப் பேசக் கூடாது. அது மதப்பிரச்சாரமல்ல. சாத்வீகம் இருந்தால்தான் மதப் பிரச்சாரம். பேராசையில்லாமல் ஒரு மனிதனுக்கு நல்வழியைக் காட்டுவதுதான் மதப் பிரச்சாரம்.

ரீ.குணவர்த்தன, களுவாஞ்சிக்குடி.

## வெற்றியான வாழ்வு



நாம் வெற்றியான வாழ்க்கையை வாழ்வதற்குத் தடையாக இருப்பது பாவங்களே. தனது பாவங்களை மறைப்பவன் வாழ்வில் வெற்றி அடைய மாட்டான். அவைகளை அறிக்கை செய்து விடுபவனே இரக்கம் பெறுவான்.

இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும். இயேசு கிறிஸ்துவை நம் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் போது அவர் நம்மை நல்வழிப்படுத்துவார். வெற்றியான வாழ்வை நல்கிடுவார். நம்முடைய மீறுதல்களின் நிமித்தம், அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களின் நிமித்தம், அவர் நொருக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது.

(ஏசாயா 53:5)

அதனால் இன்றே நம் பாவங்களையும், தவறுகளையும் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடம் அறிக்கை செய்வோம். அவருடைய அன்பான கரம் எங்களையும், தொடும்படியாக அவரிடம் அணுகிடுவோம்.நமக்கு சமாதானம் தரக்கூடியவரும், வெற்றியான வாழ்வை ஏற்படுத்துபவரும் நம் கல்வாரி நாயகன் அவரொருவரே.

இன்றே நம்மை ஆயத்தப்படுத்துவோம். சமாதானமானவொரு வாழ்க்கையையும், வெற்றியான வாழ்க்கையையும் பெற்றுக் கொள்ள நம்மைத் தயார்படுத்திக் கொள்வோம்.

சங்கீதா, லெபனான்.

## கோளுரைத்தல்

மனிதர்களுக்கிடையில் குழப்பத்தை உண்டாக்கும் கோள்முட்டித் திரிவது பெரும் பாவமாகும். குர்ஆன், கதீஸ் ஆதாரங்களைக் கொண்டு இது பெரும் பாவங்களில் ஒன்றாகும் எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

(நபியே! எடுத்ததற்கெல்லாம்) சத்தியம் செய்யும் எந்த நீசனையும் நீர் வழிபடாதீர்! (அவன்) சதா (புறம் பேசிக்) குற்றங்கூறிக் கோள் சொல்வதையே தொழிலாகக் கொண்டு திரிபவன். (68:10:11)

என அல்லாஹ் குர்ஆனில் கூறியுள்ளான். நபி (ஸல்) அவர்கள் இரண்டு கப்ருக்கருகாமையில் நடந்து செல்லும் போது அவர்கள் இருவரும் இப்போது வேதனை அளிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். (அவர்கள் எண்ணப்படி) அவர்கள் பெரும் பாவங்கள் செய்யவில்லை. ஒருவர் சிறுநீர் கழித்தால் சுத்தம் செய்யமாட்டார். மற்றவர் மக்களுக்கிடையில் கோள் சொல்லிக் கொண்டிருந்தார் எனக் கூறிவிட்டு ஒரு பச்சை ஈச்சைமட்டையை இரண்டாகக் கிழித்து ஒவ்வொரு கப்ரிலும் நட்டார்கள். இவையிரண்டும் காயாமல் இருக்கும் வரை வேதனை குறையக்கூடும் என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஹுதைபா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

செல்வி செய்யது புகாரி ஸஹானா, வாழைச்சேனை.

# கவிதைப் போட்டி இல.473



இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

பரிசுக்குரிய கவிதை

### மீண்டும்

யுத்தக் கொடுமையால்
பாலைவனமாய் போன
பயிர் நிலத்தில்
பட்டுப் போன உன் வாழ்வை
நட்டு வைக்கப் போறாயோ?

ர.ஜரூஷாலினி, திருமலை.

### வெடிப்புண்ட வாழ்வ

வெடிப்புண்ட நிலத்தினிலே
வீற்றிருக்கும் ஏழையிவன்
வாழ்வதுவும்
வெடிப்புண்ட நிலம் போல மாறிவிட
படிப்புண்டு தானுண்டென - இவன்
வாழ்ந்த வாழ்வை விட்டு விட்டு- இங்கு
தடிகொண்டு தேடும் பொருள் என்னவோ?

கே. சிறிகாந், யாழ்ப்பாணம்.

### மேகங்கள் இருண்டு வருமா...?

வரண்ட பூமியிலோ வெடிப்பு
வாழுகின்ற மக்களுக்கோ திகைப்பு
வரண்டுவிட்ட நாவுக்கோ
தாகத்தின் தவிப்பு
வஞ்சகம் செய்திடுமோ
மேகங்களின் பொழிப்பு....!?

ஜனாபா.சஹறுல் சலாஹூடீன், உக்குவெல.

### நாமும் ஒரு நாள் தனிமையில்....

மண் மனிதனுக்குப் புதைகுழி
மரத்திற்கோ கருவறை
மரங்கள் சாய்ந்தால்
காட்டில் இருந்து வீட்டிற்கு வரும்
ஆனால், மனிதன் சாய்ந்தால்
வீட்டில் இருந்து காட்டீக்கு போகீறான்.
அடுத்து நானோ! நீயோ!
நாமும் ஒரு நாள்
தனிமையை நோக்கி....

றஸ்மி, கண்டி.

### நம்பிக்கையோடிரு!

பசுமை தந்த வயல் வெளிகள்!
பட்டப் பாறையாகிப் போனதனால்...!
உழைத்து களைத்த ஊள்ளமொன்று!
உருக்குலைந்து போனதிங்கே!
மனம் தளர வேண்டாம் ஐயா!
நாளை மழைவரும் நிச்சயமாய்!

ஹப்புத்தளையூர், மனோ கோபாலன்.

### ஓடுவதெங்கே சொல்லுங்கள்!

வானம் பொய்த்தால் வரட்சி
வருணன் மகிழ்ந்தால் பிரவாகம்
பார்வாழும் பாவிமக்கள்
எதற்குத்தான் தப்புவது
எங்குதான் ஓடுவது!

உ.அல்- ஆஸாத், ஏறாவூர்.

### இரங்கல்

வான் மழையே
இவன் நிலைமை பாராயோ!
சிறுபோகம் பெரும்போகம்
இரண்டும் வேண்டாம்
ஏழை இவன் ஒரு வேளை
வயிறு நிறைய
பொழிந்தால் போதும்
நீ.

நாகராசா, நிரோஸ்
அக்கரைப்பற்று-07.

### ஏக்கம்

ஏர் பாய்ச்சி நீர் பாய்ச்சி உவர் நிலத்தை வென்று,
ஊர் போற்ற பார்போற்ற வாழ்ந்தோம் நாம் அன்று!
போர் இங்கு செல்வந்த பூமிகளை எல்லாம்-
சீரற்ற 'ஷெல்' வந்த பூமிகளாய் ஆக்க;
யார்வருவார் எம் வயிற்றின் பட்டினியைப் போக்க?

குமார் தில்லைநாதன், கல்முனை.

# கவிதைப் போட்டி இல.476



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 14.09.2002

கவிதைப் போட்டி இல.476
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### பிளவுக்குள் வாழ்க்கை

"கொளுத்தும் வெயிலில்
மண்ணே பிளந்து கிடக்கிறது
அப்போதும் மன உறுதியுடன்
நாம் எப்படியும் வாழ
வேண்டும் என்ற
எண்ணத்துடன் அமர்ந்திருக்கிறதோ
இந்த வரண்ட நெஞ்சம்"

வெஸ்ட்ஹோல் எஸ். புவிந்தன்.

### யோசனை!

ஒரு பக்கம் நிலம் வெடிப்பு
மறு பக்கம் மனம் துடிப்பு
மின்னல் மின்னி இடியிடித்து
ஒளிந்த மேகம் எல்லாம்
ஒன்றுகூடி இம்மண்ணில்
மீண்டும் எப்போது மழை பெய்யும்!

கிருஷ்ணன். சிவா, மஸ்கெலியா.

### வெடிக்கும்!

வானம் பொய்த்தால்
நிலம் வெடிக்கும்- சமரசப்
பேச்சுப் பொய்த்தால்- இந்த
நாடே வெடிக்கும்!

அ.சந்தியாகோ, கண்டி.

### நீர்த்தாகம்

பூப் போன்ற பூமியிலே
பொல்லாத போர் வெடித்து
பாய்ந்து வந்த நீர்வற்றி
பாறைபோல் வெடித்துள்ளதே
போர்த்தாகம் தீர்ந்துவிட்டது
நீர்த்தாகம் தீரவில்லையே.

தர்மலிங்கம் சந்திரமதி, தம்பலகாமம்.

### வறட்சி

அக்கினி தேவனின்
அகோரப் பார்வையோ!
ஐயோ போதுமப்பா
நதிகள் கூட இன்று
நமக்குத் துணையாய் இல்லையே!
வறட்சியாய் வெடித்த நிலத்தடியில்
மானிடர்க்குத் தாகம் தீர்க்கத்தானும்
தண்ணீர் வராதோ?

பா.குகதரிசினி, மிருசுவில்.

### பஞ்சம்

"நாவரண்டால் நல்ல
தமிழுக்குப் பஞ்சம்!
நஞ்சை வரண்டால்
நல்ல சோற்றுக்குப் பஞ்சம்!
ஊர் வரண்டால்
ஒற்றுமைக்குப் பஞ்சம்!
உலகம் வரண்டால்
உயிர்(கள்) வாழ்வதற்கு
பஞ்சம்!"

நா. ஜெயபாலன், பிபிலை.

# வாசக[ர்] சாலை

மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்களுக்கு,

அழகிய தமிழில் தரமான படைப்புகளை வழங்கும் இனிய முரசே, 473 இல் நீ தந்த அம்சங்கள் யாவும் சுவையானதாகவும் சிறப்பானதாகவும் அமைந்திருந்தன. ஆன்மீகம் தந்த கருத்துக்களும், ஆண்,பெண் நட்பு மனதளவில் மட்டும் சாத்தியமாகுமா? ஆக்கம் தந்த கருத்துக்களும் அருமையானதாக அமைந்திருந்தன.மேலும், 'சபிக்கப்பட்ட நிலவு' 'ஜீரணியாமை' சிறுகதைகள் நன்றாக இருந்தன. பாராட்டுக்கள். நன்றி.


மங்களா வாமதேவன், தங்களா வாமதேவன்
மட்டக்களப்பு.

என் இனிய முரசே!

நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் படு சூப்பர். உனது பத்தாவது ஆண்டிலே காலடி வைத்திருக்கும் இந்த வேளையில் நீ உன்னில் அடுக்கிவரும் நெட்டிலிருந்து, பார்த்த ஞாபகம் இல்லையோ, பாப்பா முரசு, மன்னாதி மன்னன் என்பன குறிப்பாக மிகவும் சிறப்பாக இருக்கின்றன. ஒரு குறுக்கெழுத்துப் போட்டி ஆரம்பித்தால் நன்றாக இருக்குமே! முரசின் பணி தொடர என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

எஸ்.கே. ருஸ்னி குறைஸ், நுரைச்சோலை.

### உண்மை



வாரம் ஒரு முறை வசந்தம் வீசிவரும்
பாழ்பட்டுப் போன நெஞ்சங்களின்
உள்ளக் குமுறல்களை உள்ளத்தில் பூட்டி
வைத்து நொந்து போயுள்ள மனதிற்கு
மருந்திடும் ஆசானாய்- அவர்களின்
குரலாய் அறிந்து அவனியெல்லாம்
உன் எழுத்து அறவழியில் நின்று
நீதிக்கு முரசறைந்திடும் செந்தமிழ்
முரசே- உன் பத்தாண்டு சேவையில்
பல்லாயிரக்கணக்கான வாசகர்களைக்
கட்டிவைத்துள்ள உள்ளங்கவர் கள்வன்
நீ- என்றும் உன் ஓசை நயம்
மாறாமல் உரைத்திடுவாய் உண்மைதனை.

மணிவேல் ருத்ரா, சின்ன செல்வகந்த.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தாலோ, உங்கள் முகவரிடம் திருப்பிக் கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாகச் சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்பவேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

அன்புடன் ஆசிரியருக்கு,

மலையக மக்களின் மேன்மையையும்,அவர்களது உள்ளக் குமுறல்களையும் வெளிக்கொணரும் வகையில் தினமுரசில் 'மலையூரான்' வாராந்தம் எழுதிவரும் விடயங்கள் மிகவும் சிறந்தவையாகும்.

பெ. தங்கராஜா, பண்டாரவளை.

உற்றார், உறவுகள், நண் பர்கள் பிறந்த மண்ணை பிரிந்து வெளிநாட்டில் வாழும் எமக்கு நண்பனுக்கு நண்பனாய், உறவுக்கு உறவாய், மண்வாசனையுடன் வந்து எம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்தி எமக்கு வாரா வாரம் ஆறுதல் அளிக்கும் முரசே, நீ அற்புதங்களை நிகழ்த்தத் தொடங்கி 10 ஆண்டுகள் ஓடிவிட்டன. உனது இலட்சியப் பயணம் தொடர எமது இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

குமார், சிறி, துரை, ஜெயா-கயில், சவுதி அரேபியா.

# உங்கள் பக்கம்

### ஞாயிற்றுக்கிழமையில் ஏ 9 வீதி திறக்கப்பட வேண்டும்

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட பரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் பொது மக்களுக்குக் கிடைத்த நன்மைகளில் முக்கியமான ஒன்று ஏ 9 வீதி திறக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் - கண்டி வீதி திறக்கப்பட்ட பின்னர் இன்றுவரை பல்லாயிரக்கணக்கான மக்கள் தரை வழியாகத் தென்னிலங்கையில் இருந்து யாழ். குடாநாட்டிற்கும், யாழ்ப்பாணத்திலிருந்து நாட்டின் தென்பகுதிக்கும் பயணம் செய்கிறார்கள்.

தரை வழியாக யாழ்ப்பாணம் சென்று வருவதில் சில காத்திருப்புகள், வசதியீனங்கள் காணப்பட்டாலும் கூட, தரை வழிப் பாதையூடாகப் பயணிப்பது, முன்னைய காலங்களில் மக்கள் அனுபவித்த கஷ்டங்களோடு ஒப்பிடுகையில் பெரும் பிரச்சனை என்று கூறுவதற்கில்லை. எனினும் தற்போதைய பயண வழியில் சில குறைபாடுகளைத் தவிர்க்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களாயின் மக்களுக்கு மேலும் நன்மை பயப்பதாக அது அமையும்.

ஓமந்தை சோதனைச் சாவடியில் ஏற்படும் அதிகபட்ச தாமதம் சிரமத்தை ஏற்படுத்துகின்றது. இங்கு சோதனை நடவடிக்கைகளைச் சற்றுத் துரிதப்படுத்தினாலோ, கூடுதலானவர்களைச் சோதனைப் பணியில் ஈடுபடுத்தித் தாமதங்களைத் தவிர்த்தாலோ பயணிகளுக்கு மேலும் வசதியேற்படும்.

அடுத்து முக்கியமான குறைபாடு ஞாயிற்றுக் கிழமைகளில் ஓமந்தை சோதனைச் சாவடி மூடப்படுவது. இந்தச் சோதனைச் சாவடியில் கடமையாற்றும் புலி உறுப்பினர்களின் ஓய்வைக் கருத்தில் கொண்டே ஞாயிற்றுக்கிழமைகளில் வீதி மூடப்படுவதாகப் புலிகள் தரப்பில் கூறப்படுகின்றது. புலி உறுப்பினர்களுக்கு ஓய்வு அவசியம் என்பதைப் புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்த போதிலும் அவர்கள் அந்த விடுமுறையை ஞாயிறு தவிர்த்து வேறொரு நாளில் எடுப்பார்களாயின் பயணிகளுக்கு மிகவும் வசதியாக இருக்கும். பொதுவான விடுமுறை தினமாதலால் ஞாயிற்றுக் கிழமைகளில் அதிகளவு பயணிகள் ஏ 9 வீதியைப் பயன்படுத்தும் சாத்தியமிருக்கிறது. இதனைக் கருத்தில் கொண்டு ஞாயிற்றுக் கிழமைகளில் வீதியைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்படுமாயின் வரவேற்கத் தக்கது.

எஸ். ரவீந்திரன், வவுனியா.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

# ஜனாதிபதி-பிரதமர் சந்திப்பையடுத்து 19 ஆவது அரசியலமைப்பு

# திருத்தத்துக்கான வர்த்தமானி அறிவித்தல் வெளிவருவது ஒத்திவைப்பு!

ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கும் 19ஆவது அரசியலமைப்புச் சீர்திருத்தச் சட்டங்கள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் பேச்சுக்கள் நடைபெற்றுள்ளன.

தேர்தல் நடைபெற்று ஒரு வருடத்தின் பின்னர் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரங்களை மட்டுப்படுத்தும் சட்டத்திருத்தங்களை 18 ஆவது அரசியலமைப்புச் சீர்திருத்தம் கொண்டிருக்கிறது.

இதனை எதிர்வரும் 13 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்போவதாக அரசாங்கம் ஏற்கனவே அறிவித்துள்ளது. பொதுஜன ஐக்கிய முன்னணியில் உள்ள சிலரின் ஆதரவுடன் இந்தத் திருத்த யோசனையை மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தினால் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முடியும் என அரசாங்கம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இந் நிலையில் இந்தச் சீர்திருத்த யோசனை குறித்து ஜனாதிபதியின் திருத்தப் பிரேரணைகளைச் சமர்ப்பிக்குமாறு அரசாங்கம் கேட்டிருந்தது. இதற்கென ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட காலவரையறைக்குள் அவர் ஆலோசனைகளை முன் வைக்காத போதும், இது குறித்து மேற்கொண்டு பேசுவதற்கு இணங்கியிருக்கிறார்.

இதனடிப்படையில் செவ்வாய்க்கிழமை ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் பல மணி நேரப் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன.

இன்னொரு சுற்றுப் பேச்சுவார்த்தை வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கிறது. இதனையடுத்து செவ்வாய்க்கிழமை வெளியிடப்படவிருந்த 19ஆவது அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் பிற் போடப்பட்டிருக்கிறது. ■

## கூட்டமைப்புக்கான யாப்பை வரைய

## கூட்டணியே பிரதான தடை-சாடுகிறார் சுரேஷ்

தமிழ்க் கூட்டமைப்பைத் தனியான அரசியல் கட்சியாகப் பதிவுசெய்து அதற்கான யாப்பொன்றை வரைவதில் உள்ள பிரதான தடைக்கல் தமிழர் விடுதலைக் கூட்டணியே என்று ஈ.பி.ஆர்.எல்.எப் (சுரேஷ் அணித் தலைவர்) சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சிச் சேவை ஒன்றின் அரசியல் கலந்துரையாடலில் கருத்து வெளியிட்ட சுரேஷ் பிரேமச்சந்திரன் தமிழர் விடுதலைக் கூட்டணியைக் கடுமையாகச் சாடினார்.

சிவசிதம்பரத்தின் இடத்திற்குத் தகுதியான ஒருவரை நியமிக்கக் கூட்டணி தவறிவிட்டதாகவும், கடந்த தேர்தலில் கூட்டமைப்புக்குக் கிடைத்த வாக்குகள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வாக்கு வங்கியின் பயனால் மட்டுமே கிடைத்ததென அந்தக் கட்சியின் தலைவர்கள் கருதுவதாகவும் சுரேஷ் குறிப்பிட்டார்.

கூட்டமைப்பைத் தனியான கட்சியாக அமைத்தால் தமிழர் விடுதலைக் கூட்டணி அழிந்துவிடும் என்ற பயம் கூட்டணியின் முத்த தலைவர்களிடம் காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸில் உள்ள சிலர் கூட்டமைப்பைத் தனிக்கட்சியாக உருவாக்குவதை ஆதரிப்பதாகவும், வேறு சிலர் எதிர்ப்பதாகவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டார்.

தானும், செல்வம் அடைக்கலநாதனுமே கூட்டமைப்பை உருவாக்கியவர்கள் எனத் தெரிவித்த சுரேஷ், தாங்கள் தேர்தல் அறிவிக்கப்பட முன்னரே இதற்கான முயற்சியில் இறங்கிவிட்டதாகவும், ஆனால் தேர்தல் காலத்தில் இந்தக் கூட்டமைப்பைப் பயன்படுத்தி இலாபம் பெறும் நோக்கத்தில் கூட்டணியினரும், தமிழ்க் காங்கிரஸினரும் தங்களுடன் இணைந்து கொண்டனர் என்றும் கூறினார். ●

## சம்பள உயர்வுக் கோரிக்கையை மறந்து அரச ஆதரவுப் பேரணிக்கு ஆள் திரட்டுகிறார் அமைச்சர் சந்திரசேகரன்

எதிர்வரும் 9 ஆம் திகதி அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவித்துக் கொழும்பில் நடைபெறும் ஆர்ப்பாட்டப் பேரணிக்குப் பெருமளவு மலையகத் தோட்டத் தொழிலாளர்களை அழைத்துவரும் பொறுப்பு அமைச்சர் சந்திரசேகரனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதிலும் இருந்து ஐ.தே.க. ஆதரவாளர்கள் 9 ம் திகதி கொழும்பில் கூடி அரசாங்கத்தின் செயற்திட்டங்களுக்கும், சமாதான முயற்சிகளுக்கும் தமது ஆதரவைத் தெரிவிக்கவுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணிக்கு மலையகத் தோட்டத் தொழிலாளர்களைப் பங்குகொள்ள வைக்க வேண்டும் என்று அமைச்சர் சந்திரசேகரன் ஐ.தே.க. உயர் மட்டத்தினால் கேட்கப்பட்டிருக்கிறார். இதனையடுத்து இந்தப் பேரணிக்குத் தமது தொழிற்சங்கத்தினூடாகத் தோட்டத் தொழிலாளர்களைக் கொழும்புக்கு அழைத்து வருவது குறித்துப் பல கலந்துரையாடல்களை அமைச்சர் சந்திரசேகரன் நடத்தியுள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு 180 ரூபா சம்பள உயர்வு பெற்றுக் கொடுக்கப்படும் எனக் கடந்த மாத ஆரம்பத்தில் கூறி வந்த அமைச்சர் சந்திரசேகரன் பின்னர் அது குறித்த எந்த முயற்சியிலும் ஈடுபடாது அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் பேரணிக்கு ஆள் திரட்டி வருவது குறிப்பிடத்தக்கது. ■

## பிரதேச சபைக் கட்டடம் மீது புலிகள் தாக்குதல்

புதிதாக நிர்மாணிக்கப்பட்டுக் கடந்த திங்கட்கிழமை திறக்கப்படவிருந்த வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் அலுவலகக் கட்டடம் புலிகளின் தாக்குதலால் சேதமடைந்ததாக ஈ.பி.டி.பி. குற்றஞ்சாட்டியுள்ளது.

ஈ.பி.டி.பி.யின் நிர்வாகத்தில் உள்ள இந்தப் பிரதேச சபைக்கென 80 இலட்சம் ரூபா செலவில் புதிய கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இதனைக் கடந்த திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு வடக்கு புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன மற்றும் முன்னாள் வடக்கு புனர்வாழ்வு அமைச்சரும், ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் வைபவ ரீதியாகத் திறந்து வைக்க ஏற்பாடாகியிருந்தது. இதற்கு முந்திய தினம் இரவு வாகனங்களில் வந்த புலி உறுப்பினர்கள் புதிய பிரதேச சபைக் கட்டடத்தின் கண்ணாடிகள், மின்சார உபகரணங்கள் போன்றவற்றை உடைத்துச் சேதப்படுத்தியுள்ளனர்.

முன்னதாக இந்தக் கட்டிடத் திறப்பு விழாவில் பங்குகொள்ளக் கூடாதெனப் பொது மக்கள் எச்சரிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத் தக்கது. ■

## காலாவதியான டிக்கட்டுக்களை விற்று ஏமாற்றும் அதிகாரிகள்

காலாவதியான லொத்தர் டிக்கட்டுக்களை வறியவர்களிடம் கட்டாயப்படுத்தி விற்று பொது மக்களை ஏமாற்றிய சம்பவமொன்று ஏறாவூரில் இடம்பெற்றுள்ளது. ஆகஸ்ட் 10ஆம் திகதி ஏறாவூரில் இடம்பெற்ற வைபவமொன்றில் 35 வறிய குடும்பங்களுக்கு இலவசமாகக் கூரைத் தகடுகள் வழங்கப்பட்டன. இந் நிகழ்வு ஏறாவூர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

வைபவத்தில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் பிரதியமைச்சர் பஷீர்சேகுதாவூத் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கூரைத் தகடுகள் பெற வந்தவர்களிடம் ஜூன் மாதம் 14ஆம் திகதியிடப்பட்ட கலாவதியான அதிஷ்டலாபச் சீட்டுக்கள் ஒவ்வொன்றும் 200 ரூபாவுக்கு விற்கப்பட்டன.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் நலன்புரி அமைப்பினால் வெளியிடப்பட்ட இந்தக் காலாவதியான டிக்கட்டின் பெறுமதி 10 ரூபா என்றே விலை குறிப்பிடப்பட்டிருந்த போதும், அவை அம் மக்களிடம் கட்டாயப்படுத்தி இருநூறு ரூபா வீதம் விற்கப்பட்டுள்ளது. இது தவிர ஏற்கனவே கூரைத் தகடுகள் பெறச் சிபார்சு செய்யப்பட்டவர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் கூரைத் தகடுகளை வீட்டுக்குக் கொண்டு வந்து தருவதற்கான கூலி எனக் கூறி ரூபா 250 பெறப்பட்டுள்ளது. ஆனால், கூரைத் தகடுகளைத் தாமே வேறு கூலி கொடுத்து வீட்டுக்கு ஏற்றி வந்ததாகவும், அதிலும் தாம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் ஏமாற்றப்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர். ■

## வெளிநாடு சென்றவர்களிடம் மண் மீட்பு நிதி

## சமுர்த்தி நிவாரணத்துக்கும் வரி

மத்திய கிழக்கு நாடுகளுக்குத் தொழில் வாய்ப்புக்காகச் சென்று திரும்பும் ஆண்களும், பெண்களும் தமக்கு"மண் மீட்பு நிதி" செலுத்த வேண்டும் என்று புலிகள் அறிவித்துள்ளனர்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டுப் பணிப் பெண்ணாகச் சென்று திரும்பும் ஒருவர் "மண் மீட்பு நிதி"யாக 25 ஆயிரம் ரூபாவும், ஆண்கள் 50 ஆயிரம் ரூபாவும் செலுத்த வேண்டும் என்று கிழக்கு மாகாணத் தமிழ் மக்களிடம் கட்டளை பிறப்பிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இரண்டு வருடம் முடிவடையாமல் இடைநடுவிலே திரும்புவோரிடமும் இந்தப் பண அறவீடு செய்யப்படுவதாகப் பாதிக்கப்பட்டவர்கள் கூறுகிறார்கள்.

இதனிடையே சமுர்த்தி உலர் உணவு முத்திரை பெறும் குடும்பங்களின் 6 மாதங்களுக்கான உணவு முத்திரைகளிலிருந்து இரு முத்திரைப் புள்ளிகளை, கூட்டுறவுக் கடை முகாமையாளர்கள் தனியாக வெட்டிக் கொள்கின்றனர். அவை புலிகளின் உத்தரவின் பேரில் வெட்டி எடுக்கப்படுவதாகவும், அவற்றுக்கான உணவுப் பொருட்கள் புலிகளுக்கே கொடுக்கப்படுவதாகவும் முகாமையாளர்கள் கூறுகின்றனர். ●

## குற்றச் செயல்கள் அதிகரிப்பு

கடந்த 6 மாத காலத்தில் தலைநகர் கொழும்பில் மோசமான குற்றச் செயல்கள் பெருமளவு அதிகரித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இந்தக் குற்றச் செயல்களில் 28 கொலைகளும், 10 பாலியல் வல்லுறவு சம்பவங்களும், 51 கொள்ளைகளும் அடங்குகின்றன.

ஆனால் போதைப் பொருள் பாவனை சார்ந்த குற்றச் செயல்கள் கடந்த சில மாதங்களில் ஓரளவு வீழ்ச்சி கண்டுள்ளது.

மருதானை, கிரான்ட்பாஸ் மாளிகாவத்தைப் பகுதிகளில் முன்னணிப் போதைப் பொருள் வர்த்தகர்கள் பலர் சமீப நாட்களில் கொலை செய்யப்பட்டதால் தலைநகரில் போதைப் பொருட்களுக்குப் பெருந் தட்டுப்பாடு நிலவுகிறது. இந்த விபரங்களை ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வொன்றில் கொழும்பு பிராந்தியத்திற்கான பிரதிப் பொலிஸ் மா அதிபர் போதிலியனகே வெளியிட்டுள்ளார்.

## காணாமற்போன வர்த்தகர்கள் எங்கே?

## மர்மம் நீடிக்கிறது

கொழும்பு மருதானைப் பகுதியிலிருந்து இரண்டு வாகனங்களில் மட்டக்களப்புப் பகுதிக்குச் சென்ற 6 வர்த்தகர்களை இரு வாரங்களாகக் காணவில்லை என அவர்களது உறவினர்கள் மருதானை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடைசியாக இந்த வாகனங்கள் ஓட்டமாவடிக் கறுப்புப்பாலப் பொலிஸ் காவலரணைத் தாண்டிச் சென்றுள்ளதாக அங்குள்ள பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், அதற்கப்பால் வாகனம் எங்கே சென்றது என்பது குறித்தோ, அதில் பயணம் செய்தவர்கள் என்ன ஆனார்கள் என்பது பற்றியோ இதுவரை எதுவும் தெரியாது எனப் பொலிஸார் கூறுகின்றனர்.

இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் திரும்பி வந்து விடுவதாகவும், அவ்வாறு வராது போனால் தங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் இவர்கள் தமது வீடுகளில் கூறிச் சென்றுள்ளனர்.

ஆனால் அவர்கள் வழங்கியிருந்த முகவரி போலியானது என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. கடந்த ஆகஸ்ட் 20 ஆம் திகதி ஒரு வேனில் மூன்று பேர் கொழும்பிலிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளனர். பின்னர் 24ஆம் திகதி மேலும் 3பேர் பஜிரோ வாகனம் ஒன்றில் சென்றுள்ளனர். மருதானை மற்றும் வாழைச்சேனைப் பொலிஸார் கூட்டாக விசாரணைகளை நடத்துகின்றனர்.

## படையினர் வெளியேற்றம்

கடந்த ஜூன் மாதம் வாழைச்சேனை, ஓட்டமாவடிப் பகுதிகளில் ஏற்பட்ட இன வன்முறைகளை அடுத்து, கலகத்தைத் தடுப்பதற்காக நிறுத்தப்பட்டிருந்த இராணுவ அணிகள் கடந்த வியாழன் முதல் அங்கிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளன. ஓட்டமாவடி, வாழைச்சேனை முஸ்லிம் பகுதிகளின் முக்கிய இடங்களிலும், சந்திகளிலும் பாதுகாப்பிற்காகப் படையணிகள் நிறுத்தப்பட்டிருந்தன. தற்போது இப் பகுதிகளில் தமிழ், முஸ்லிம் மக்களிடத்தில் அமைதி நிலையேற்பட்டுள்ளதால் படையினரின் விசேட பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

மகாவலிப் பிரதேசங்களிலிருந்து அமைதி காப்பதற்காக வரவழைக்கப்பட்டிருந்த இராணுவத்தினர் மீண்டும் தாம் கடமையாற்றிய பழைய நிலைகளுக்குச் செல்கின்றனர். ■

# முரசம்

## அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் பௌத்த பீடங்கள்

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

இலங்கை அரசியலில் புத்த பிக்குகள் மிகுந்த ஆதிக்கம் வகிப்பது கண்கூடு. இலங்கையில் பல்வேறு மதங்கள் இருந்தாலும் பௌத்த பிக்குகளே ஆட்சியதிகாரத்தில் தங்கள் மேலாதிக்கத்தைச் செலுத்தி வருகின்றனர். பௌத்த மதத்தின் ஸ்தாபகர் கௌதம புத்தரோ, அரசராக இருந்தும் ஆட்சியைத் துறந்து ஆன்மீகத்துக்கு வந்தவர்.

அரசாட்சியால் மதத்தை முதன்மைப்படுத்த முடியுமென்ற நம்பிக்கையிருந்திருந்தால் தனது அரசாட்சியைப் பயன்படுத்தியே புத்தர் தனது புத்த மதத்தைப் பரப்பியிருப்பார். ஆனால், அவர் அதில் நம்பிக்கையின்றி அரியணையைத் துறந்து அரசமரத்திற்கு வந்தவர்.

ஆனால் அவரது சீடர்களென்று இன்று இலங்கையில் பௌத்த மதத்தின் போதகர்களாகச் செயற்படும் பௌத்த மதகுருமாரோ, புத்தரின் வழிகாட்டலுக்கு மாறாக, அரசியலில் தலையிடுகின்றனர். இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன உருவாக்கிய இன்றைய அரசியல் யாப்பில், பௌத்த மதத்துக்கே உயர் அந்தஸ்து வழங்கியுள்ளார்.

இவ்வாறான அரசியல் செல்வாக்கையும் பாதுகாப்பையும் பெற்றுக்கொண்டுள்ள இப் பௌத்த பீடங்களுக்கு இந் நாட்டில் ஆட்சிக்கு வரும் சகல அரசாங்கங்களும், அதன் தலைவர்களும் மிகுந்த முக்கியத்துவம் வழங்கி வருகின்றனர்.

நாட்டில் மதப் பற்றையும், ஜீவகாருண்யத்தையும், அன்பையும் போதித்து ஆசையையும், வன்முறையையும், தீய் குணங்களையும் போக்கவேண்டிய இம் மதகுருமார் துரதிஷ்ட வசமாக இலங்கையின் அரசியலில் தலையிடுபவர்களாக மட்டுமன்றி அரசியலின் போக்கையே நிர்ணயிக்கும் சக்திகளாக ஆதிக்கம் வகிக்கிறார்கள்.

1958ல் பண்டா - செல்வா ஒப்பந்தம் உருவாகிய வேளையில், அவ் ஒப்பந்தத்துக்குப் பாரிய எதிர்ப்பைத் தெரிவிப்பதில் இப் பௌத்த பிக்குகள் முன்னணி வகித்தனர். பண்டாரநாயக்காவின் படுகொலைகூட பௌத்த பிக்கு ஒருவராலேயே மேற்கொள்ளப்பட்டது. அதன்பின் டட்லி-செல்வா ஒப்பந்தம் மற்றும் இன்றுவரை நடைபெற்ற சமாதான ஒப்பந்தங்கள் யாவற்றிற்கான எதிர்ப்பிலும் இப் பௌத்த பிக்குகள் பிரதான பாத்திரம் வகித்திருந்தார்கள். இலங்கையின் இனப் பிரச்சினைக்கு எந்த வகையான தீர்வை முன்வைக்க முனைந்தாலும் அதற்கு பௌத்த பீடங்களின் அங்கீகாரமானது இங்கு இன்றியமையாததாக ஆகியுள்ளது.

தற்போது இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளிலும் இவர்களின் எதிர்ப்பு இப்போது வெளித்தோன்றத் தொடங்கியுள்ளது. புலிகள் மீதான தடையை நீக்குவது, இடைக்கால நிர்வாகத்தை வழங்குவது என்பவற்றுக்கு இப் பௌத்த பீடங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. தாய்லாந்தில் பேச்சுவார்த்தை நடத்த அனுமதிக்கக் கூடாதெனப் பௌத்த நாடான தாய்லாந்தைக் கோரப்போவதாகவும் எச்சரிக்கின்றன. புலிகளின் தடையை நீக்குவதோ அல்லது இடைக்கால நிர்வாகத்தை உருவாக்குவதோ மதம் சார்ந்த விடயங்களல்ல. முற்று முழுதாக அரசியல் சார்ந்தவை. இவற்றில் எது சரி? எது பிழை? என்பவற்றுக்கு அப்பால், இந்த நாட்டின் அரசியலில் மதத்தின் தலையீடு நீக்கப்படவேண்டிய அவசியத்தை மக்கள் உணர்துகொள்ளவேண்டிய காலம் இது.

■■

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# ஹக்கீம் - பாலா சந்திப்பு மீண்டுமொரு ஒப்பந்தமா?

இலங்கை இனப் பிரச்சினையில் மீண்டும் ஒரு பேச்சுவார்த்தைக்கான பிரதானமான ஏற்பாடுகள் தயாராகிவிட்டன.

தாய்லாந்தில் எதிர்வரும் 16ம் திகதி பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கான திகதியும் நிச்சயிக்கப்பட்டுவிட்டது.

இந்தப் பேச்சுவார்த்தையில், இலங்கையின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகும் முக்கியத்துவம் அடங்கியுள்ளதை யாவரும் புரிந்துள்ளனர்.

இருப்பினும் பலரின் எதிர்பார்ப்புகள் போலல்லாது இந்தப் பேச்சுவார்த்தையின் ஆரம்பமே இப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து எவ்வித இறுதி முடிவையும் வழங்கிவிடப் போவதில்லை.

பேச்சுவார்த்தைகள் மாதம் இருமுறை மூன்று நாட்கள் வரை நிகழ்ந்தேறிச் செல்லுமென வகுக்கப்பட்டதற்கமைய இப் பேச்சுத் தொடரில் பல கட்டங்கள் கடந்த பின்னர்தான் இதன் போக்குக் குறித்த ஏதேனும் ஒரு அறிகுறி தென்படும்.

இப்போது ஆரம்பிக்கவுள்ள பேச்சுவார்த்தையானது ஒரு ஆரம்ப நிகழ்வுக்குரிய அம்சங்களையே வெளிப்படுத்துவதாயும், வெறும் பத்திரிகைப் பிரபல்யத்துக்குரிய அட்டகாசமான ஏற்பாடுகளைக் கொண்டதாகவுமே விளங்கக்கூடும்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முழுமையான நிறைவேற்றம் குறித்தும், புலிகளின் கடற் போக்குவரத்துக் குறித்தும், வடக்கு கிழக்கு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வது குறித்தும் இங்கு பேசப்படக்கூடும்.

ஆயினும் புலிகள் கோரும் இடைக்கால நிர்வாக சபை பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டாலும் அது குறித்த வடிவமோ, அதன் அதிகாரங்கள் பற்றியோ, விதிமுறைகள் பற்றியோ, அதன் பங்குதாரர் பற்றியோ இறுதி முடிவுகள் எதுவும் எடுக்கக்கூடிய சாத்தியங்கள் முதலாவது பேச்சுவார்த்தையில் இல்லை.

இதற்கு அப்பால் இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்த அடிப்படை விடயங்களை எடுத்துக் கொள்வதற்கு இருதரப்பும் தற்போது தயார் நிலையில் இல்லை.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தைப் பொறுத்தவரை தற்போதைய அரசியல் யாப்பின் ஒற்றையாட்சி முறையை மாற்றுவதற்கான விருப்பத்தை இதுவரை தெரிவிக்கவில்லை.

கடந்த ஆட்சிக் காலத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி தயாரித்த புதிய உத்தேச அரசியல் யாப்பில் ஒற்றையாட்சி முறையை இல்லாதொழிக்கும் சரத்தை ஐக்கிய தேசியக் கட்சி கடுமையாக எதிர்த்திருந்தது.

1995ல் சந்திரிகா முன்வைத்த சமஷ்டி ஆட்சி முறையிலான உத்தேச அரசியல் யாப்பையே நிராகரித்த புலிகள், ஒற்றையாட்சி முறைக்கு உடன்படமாட்டார்களென்பது தெரிந்த விடயம்.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சியிடம் புலிகளின் முன் வைக்கக்கூடிய அரசியல் தீர்வுத் திட்டமொன்று இதுவரை தயாராக இல்லை.

அதனிடம் இருக்கும் ஒரேயொரு விடயம், அதனால் கொண்டுவரப்பட்ட மாகாண சபை என்பது மட்டும்தான்.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தால் 1987ல் மாகாண சபைத் தீர்வு உருவாகும் வரையில் புலிகளில் பலியாகியிருந்த போராளிகள் சுமார் எழுநூறு பேர் வரைதான்.

மாகாண சபைகளை அன்றே நிராகரித்து, பாரிய ஒரு யுத்தத்தை நடத்தி, சுமார் 16 ஆயிரம் போராளிகள்வரை பலிகொடுத்துவிட்ட புலிகள், இப்போது முன்னையவிட இராணுவரீதியில் பலம்வாய்ந்த நிலையில் இருக்கும்போது, அரசாங்கத்தால் யுத்தத்தில் வெல்வது மிக மிகச் சிரமம் என்ற நிலை தோன்றியிருக்கும் போது, மீண்டும் மாகாண சபையை ஏற்றுக்கொள்வதென்பதை அர்த்தமற்றதாகவே கருதுவர்.

அதனால் முழுமையான ஒரு தீர்வை எட்டும்வரை தற்காலிக ஏற்பாடாகவே இம் மாகாண சபை வடிவத்தை ஒரு இடைக்கால நிர்வாக சபை மூலம் பயன்படுத்த அவர்கள் விளைந்துள்ளனர்.

இந் நிலையில் புலிகளுடன் முழுமையான தீர்வொன்றைப் பேசக் கைவசம் எத் தீர்வுத் திட்டமுமில்லா நிலையில் அரசாங்கமும் வெறும் இடைக்கால நிர்வாகத்தையிட்டு மட்டுமே கவனம் செலுத்தத் தயாராக இருக்கிறது.

புலிகளைப் பொறுத்த வரை அவர்களும் தமக்கான ஒரு அரசியல் தீர்வுத் திட்டத்தை முன்வைக்கத் தயாராக இல்லை.

அவ்வாறு முன்வைப்பதே தமிழீழக் கோரிக்கையைக் கைவிடுவதற்குத் தயார் என்ற செய்தியாக அமைந்து விடுமென்பது குறித்து அவர்கள் எச்சரிக்கையாக இருக்கிறார்கள்.

அவர்களைப் பொறுத்தவரை, பிரிந்து செல்வதைத் தவிர வேறு வழியில்லை யென்ற நிலையிலேயே தாம் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்ததாகவும், வேறு ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு ஏதுமிருப்பின் அதை அரசாங்கத் தரப்பே முன்வைக்க வேண்டுமெனவும், அதைப் பரிசீலித்த பின் உடன்பாடு காணப்பட்டாலே தாம் ஆயுதப் போராட்டத்தையும், தமிழீழக் கோரிக்கையையும் கைவிடுவதுபற்றிச் சிந்திக்கலாமெனவும் கூறுகின்றனர்.

ஆதலால், இப் பேச்சுவார்த்தையில் இறுதியான தீர்வு வடிவம் எதையும் முன்வைக்காத நிலையில், தமிழீழக் கோரிக்கையையும், ஆயுதங்களையும் கைவிடுவதற்கான உத்தரவாதத்தைக் கோரும் நிர்ப்பந்தம் தம்மீது செலுத்தப்படக்கூடுமென்பதால் அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தையென்பதில் உடனடியாக இறங்க அவர்கள் விரும்பப்போவதில்லை.

எனவே, தமது தற்போதைய நிலைக்குப் பங்கம் ஏற்படாத வகையில், தமது இராணுவத்தையும், கட்டுப்பாட்டுப் பிரதேசங்களையும் அவ்வாறே பேணிக்கொண்டு, யுத்தத்தை மட்டும் நிறுத்தி, நிர்வாகத்தைப் பொறுப்பேற்கும் தற்காலிக ஏற்பாடாகவே இவ் இடைக்கால நிர்வாக சபையை அவர்கள் விரும்புவர்.

ஆனால் ஜனாதிபதியின் நேரடி அதிகாரத்துக்குக் கீழ் இடைக்கால நிர்வாக சபை வருவதால் அதன் நிர்வாக ஒழுங்குப் பிரச்சினைகள் பற்றிய விடயங்களில் தீர்வு காணவேண்டிய அவசியம் உள்ளது.

தற்போதைய அரசியல் யாப்பின்படி, இவ் இடைக்கால நிர்வாக சபையானது ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஆளுநருக்கான ஒரு ஆலோசனைச் சபையாகவே இயங்க முடியும்.

நேரடியாக நிர்வாகம் புரிவதானால் அதற்கான அரசியல் சட்ட மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதேவேளை ஜனாதிபதி தீர்வுத் திட்டம் எதற்கும் இணக்கம் காணாத நிலையில் இடைக்கால நிர்வாகத்தைப் புலிகளுக்கு வழங்குவதற்கும், பேச்சுவார்த்தைக்கு முன்னர் புலிகள் மீதான தடையை நீக்குவதற்கும் தற்போது எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

இந்த எதிர்ப்பை அவர் புத்த மகாசங்கத்தின் ஆதரவோடு முன்வைக்க முனைகிறார்.

இவ் எதிர்ப்பானது பேச்சுவார்த்தைகளைத் தடுத்து நிறுத்தும் ஒரு கதவடைப்பாக அமையப் போவதில்லை.

ஆனால் பேச்சுவார்த்தைகளால், அல்லது அங்கு உடன்பாடு காணப்பட்ட விடயங்களால் அரசாங்கத் தரப்பு இடறுப்பட நேரும்போது, "நான் முன்னரே சொன்னேன்!" என்று அரசாங்கத்தைச் சாடும் வகையில் உயர்த்திப் பிடிப்பதற்கான அரசியல் தந்திரமாகவே இதனை அவர் பயன்படுத்துகிறார்.

தற்போது நிகழ்ந்தேறும் இனப்பிரச்சினையைக் கையாளும் செயற்பாடுகளில் குறுக்கே நிற்பதாக அல்லாமல், ஆங்காங்கே எச்சரிக்கைகளை மட்டும் உரத்துத் தெரிவித்துக்கொண்டு, இப் போக்குகள் வீழ்ச்சி காணும் நிலையில் இவற்றைத் தனது பலமான எதிர்ப்பாக முன்நிறுத்துவதே அவரது தந்திரோபாயமாகத் தெரிகிறது.

எனவே தற்போது புலித்தடை நீக்கத்துக்கும், இடைக்கால நிர்வாகத்துக்கும் எதிர்ப்புத் தெரிவித்தாலும், அவற்றை அவர் நடைமுறையில் செயற்படுத்த விழையப் போவதில்லையென்றே எதிர்பார்க்க முடியும்.

இதேவேளை இப் பேச்சுவார்த்தைகளில் முக்கியத்துவம் வாய்ந்த அடுத்த விடயமாக எழுந்துள்ளது முஸ்லிம் மக்கள் தொடர்பான விவகாரமாகும்.

வடக்கு கிழக்கில் முஸ்லிம் மக்கள் கணிசமான தொகையில் ஒரு சமுதாயமாக, தனித் தேசிய இனமெனத் தம்மை வெளிப்படுத்தியபடி வாழ்கிறார்கள்.

சென்றவாரம் நிகழ்ந்த தொலைக்காட்சி விவாதமொன்றில், முஸ்லிம் காங்கிரஸ் பிரதியமைச்சர் அதாவுல்லா, முஸ்லிம்கள் ஒரு தனித் தேசிய இனமென வலியுறுத்தியிருந்தார். அதனை அவ் விவாதத்தில் பங்குபற்றிய ஈ.பி.ஆர்.எல்.எப். (பிரிவு 1) செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரனும் அழுத்தம் திருத்தமாக ஆமோதித்திருந்தார்.

வடக்கு கிழக்கில் ஏற்கனவே அமுலாக்கப்பட்டுவிட்ட மாகாண சபைத் தீர்விலோ, அதில் மேற்கொள்ளப்பட்ட வடக்கு கிழக்கு தற்காலிக இணைப்பு என்ற விடயத்திலோ,முஸ்லிம்களை ஒரு பொருட்டாகக் கருதிக்கூடக் கலந்தாலோசிக்கப்படவில்லையென்ற மனக்குறையைத் தெரிவித்த அதாவுல்லா, தற்போது மேற்கொள்ளப்படும் அரசியல் பேச்சுவார்த்தைகளிலாவது முறைப்படி முஸ்லிம்களின் அச்சங்களும், தனித்துவங்களும், பாதுகாப்பும், இதர உரிமைகளும் கருத்தில் கொள்ளப்பட்டு அவர்களின் இணக்கத்துடனான ஒரு தீர்வாக இத் தீர்வு வடிவமைக்கப்பட வேண்டுமென்ற முஸ்லிம் தரப்பு ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

எவ்வாறாயினும் இப் பேச்சுவார்த்தையில், இடைக்கால நிர்வாக சபையிலோ, அல்லது ஒரு அரசியல் தீர்விலோ முஸ்லிம்கள் பற்றி எந்தளவு முக்கியத்துவம் செலுத்தப்படப் போகிறது என்பது இன்று முளைவிட்டிருக்கும் கேள்வியாகும்.

அண்மையில் நிகழ்ந்து ஓய்ந்த கிழக்கு மாகாண முஸ்லிம் கலவரம், முஸ்லிம்கள் குறித்த கரிசனைக்கு மேலும் வலுச் சேர்ப்பதாக அமைந்துள்ளது.

இக் கலவரத்தின் தாற்பரியமானது அரசாங்கத்தில் கூட்டுச் சேர்ந்துள்ள முஸ்லிம் காங்கிரஸை அரசாங்கத்தின் நிலையிலிருந்து விலகி நின்று சிந்திக்க வேண்டியவர்களாக ஆக்கியிருந்தது.

இது தொடர்பாக முஸ்லிம் மக்கள் மத்தியில் எழுந்த உணர்வலைகளுக்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் பாரிய அளவு முகம் கொடுக்க நேரிட்டது.

அதன் காரணமாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான அவருக்கும் புலிகள் தலைவர் பிரபாகரனுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் கடைப்பிடிக்கப்படவில்லையெனப் புலிகளைப் பகிரங்கமாகக் குற்றம் சாட்டுமளவுக்கு அவரை அது இட்டுச் சென்றது.

தற்போது, பேச்சுவார்த்தை, இடைக்கால நிர்வாக சபை என்ற விடயங்கள் அரங்கேறவுள்ள நிலையில் அதில் முஸ்லிம்களின் நலன்களை உத்தரவாதப் படுத்திக்கொள்ளும் பாரிய பொறுப்பும் ஹக்கீம் மீது சுமத்தப்பட்டுள்ளது.

இந் நிலையில்தான், ஹக்கீமுக்கு இப் பேச்சுவார்த்தையில் எந்த முகத்துடன் கலந்து கொள்வது என்ற புதிய கேள்வி உருவாகியுள்ளது.

அதாவது அவர் அரசாங்கத்தின் பிரதிநிதியென்ற வகையில் இப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதா, இல்லையேல் முஸ்லிம் காங்கிரஸ் என்ற தனிக் கட்சியாக, முஸ்லிம்களின் பிரதிநிதியென்ற வகையில் கலந்து கொள்வதா என்ற கேள்வி தோன்றியுள்ளது.

அதாவது அரசாங்கத்தின் பிரதிநிதியாக கலந்து கொள்வது அவருக்குப் பலம் வாய்ந்தாகக் அமையுமா? அல்லது தனித்துக் கலந்து கொள்வது உசிதமா? என்பது ஒரு கேள்வி.

அடுத்ததாக அவர் தனது பேரத்தை யாருடன் நடத்தப் போகிறார், அரசாங்கத்துடனா, புலிகளுடனா என்பது மறு கேள்வி.

அரசாங்கத்தின் பிரதிநிதியாக நின்று முஸ்லிம் மக்களின் அபிலாஷைகள் பற்றிய தமது முழுமையான கோரிக்கைகளை முன்வைக்க முடியுமா? என்பதுவும் கேள்விக்குரியது.

ஏனெனில் அப்படியான கோரிக்கைகளை அரசாங்கத் தரப்பில் நின்று முன்வைப்பதானால், பேச்சுவார்த்தை மேசையிலன்றி அதற்கு முன்னதாகவே அரசாங்கத்திடம் அவ் விடயங்கள் குறித்து அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டும்.

முஸ்லிம்களுக்கான அரசாங்கத்தின் உத்தரவாதங்களாகவே அவை புலிகளின் முன்னால் அரசாங்கத் தரப்பிலிருந்து வைக்கப்பட வேண்டும்.

அதற்கு அரசாங்கம் எத்துணைதூரம் தயாராக உள்ளதென்பது கேள்விக்குரியது.

இதேவேளை புலிகளைப் பொறுத்தவரை முஸ்லிம் காங்கிரஸ் தனித் தரப்பாக இப் பேச்சுவார்த்தைகளில் பங்கு பற்றுவதையே விரும்புகின்றனர்.

இதன் மூலம் புலிகளும், முஸ்லிம் காங்கிரஸும் ஒருமுகமாக நின்று அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை மேற்கொள்வதென்பதாக இவ் விடயத்தைக் கையாள அவர்கள் முனைகிறார்கள்.

முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் பேச்சுக்களில் கலந்து கொள்வதென்பது அதற்கான பலம், பலவீனங்கள் குறித்த விடயமல்ல, அதன் தனித்துவத்தைப் பேணுவது குறித்ததும், முஸ்லிம்கள் குறித்து எத்தரப்பையும் சாராமல் சுயமாகத் தமது நிலைப்பாடுகளை முன்வைக்கும் சுதந்திரம் குறித்ததுமான விடயமெனவும் ஒரு கருத்து முஸ்லிம் சமூகத்தினுள் நிலவுகிறது.

இந் நிலையிலேயே முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், இது குறித்து முடிவுசெய்வதற்கான மேலும் சில கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொள்ளும் பொருட்டு புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்திக்க லண்டன் சென்றுள்ளார்.

இச் சந்திப்பில் முஸ்லிம்களின் எதிர்பார்ப்புகளுக்ும் புலிகளின் சித்தத்துக்கும் எத்தனை நெருக்கம் ஏற்படுகிறது என்பதைப் பொறுத்து ஹக்கீம் தமக்கு எந்த முகம் உசிதமானதென்பதைத் தீர்மானிக்க வேண்டியிருக்கும்.

தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்ற தாற்பரியத்தில் முஸ்லிம்களுக்கு அங்கீகரிக்கப்பட வேண்டிய அடிப்படை உரிமைகள் பற்றியும், அவற்றைத் திருப்தி செய்யும் நடைமுறைத் தீர்வு வடிவம் என்ன என்பது பற்றியும், இவை தற்போது சிந்திக்கப்படும் இடைக்கால நிர்வாக சபையில் எவ்வாறு உத்தரவாதப் படுத்தப்படலாமென்பது பற்றியும் ஹக்கீம் என்ன கோரிக்கைகளை முன்வைக்கப் போகிறார் என்பது இன்னும் தெளிவாகவில்லை.

முஸ்லிம்களின் அபிலாஷைகள் பேணப்படவேண்டுமென்ற பொதுப்படைக் கருத்தைத் தவிர, தெளிவான எந்தவொரு தீர்வு வடிவமும் இன்னும் தற்போதைய முஸ்லிம் தலைமைத்துவத்தால் அழுத்தம் திருத்தமாக முன்வைக்கப்படவில்லை.

இந் நிலையில் அன்ரன் பாலசிங்கத்துடனான ஹக்கீமின் பேச்சுவார்த்தைகளில், ஹக்கீம் என்ன கோரிக்கைகளை முன்வைக்கப் போகிறார் என்பதும் பாலசிங்கம் அவற்றுக்கு என்ன பதிலளிக்கப் போகிறார் என்பதும் யாவரதும் ஆர்வத்துக்குரிய விடயங்களாக உள்ளன.

அதேவேளை, ஹக்கீமைப் பொறுத்தவரையில், முஸ்லிம்களின் தலைமைத்துவத்தைத் தன்வசம் தக்க வைத்துக் கொள்ளும் சாமர்த்தியத்துக்கான முதற்கட்டப் பரீட்சையாகவும் இப் பேச்சுவார்த்தை அமையப் போகிறது. ■

நரன்

# சோனியாவை நோக்கி

## ஜெ. வீசிய அரசியல் குண்டு!

இன்று இந்திய துணைக் கண்டத்தில் மிகப் பரபரப்பாகப் பேசப்படும் ஒரு விவகாரம் என்னவென்றால், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவரான சோனியாகாந்தி பற்றி, தமிழக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ள கருத்துக்கள்தான். வெளிநாட்டவரான ஒருவரைப் பிரதமராக முன்னிறுத்த வேண்டிய நிலைக்குக் காங்கிரஸ் தள்ளப்பட்டிருப்பது மிகவும் வெட்கக்கேடான சமாச்சாரம் என்று கடுமையான வார்த்தைகளால் விமர்சித்தார். வெள்ளையர்களை வெளியேற்றி இந்தியாவுக்குச் சுதந்திரம் வாங்கித் தந்த காங்கிரஸ் கட்சி இன்று அந்நியர் ஒருவரைப் பிரதமராக்க முயற்சிக்கிறது. சோனியா பிரதமராவதற்குத் தன்னுடைய ஆதரவு ஒருபோதும் கிடைக்காது என்று திட்டவட்டமாக ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

வெளிநாட்டவரான சோனியா எப்படிப் பிரதமராக முடியும் என்ற சர்ச்சை திடீரென உருவானதல்ல. ராஜீவ்காந்தி இறந்ததும் காங்கிரஸ் கட்சியில் தலைமைப் பதவியை ஏற்க சோனியா முன் வரவேண்டும் என்ற வேண்டுகோள் எழுந்த காலத்திலேயே வெளிநாட்டவர் என்ற பிரச்சினையும் தலைதூக்கி விட்டது. அது ஒரு மிகப் பெரிய விவாதப் பொருளாக உருவெடுத்த நிலையில் உச்ச நீதிமன்றம் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பை வெளியிட்டது. இந்தியக் குடியுரிமை குறித்த சர்ச்சை பின்னுக்குத் தள்ளப்பட்டது. பல்வேறு சட்டங்களில் திருத்தம் கொண்டு வருவதற்காக, பாரதிய ஜனதா அரசால் நியமிக்கப்பட்ட கமிஷன் கூட, வெளிநாட்டவர் என்ற அம்சம் குறித்து ஆராயவில்லை. ஒட்டுமொத்தத்தில் எல்லோராலும் மறக்கப்பட்ட ஒரு சம்பவத்தை மறுபடியும் பூதாகரமாகக் கிளப்பி விட்டிருக்கிறார் ஜெயலலிதா.

தற்போது அந்த விவகாரத்தில் ஒரு படி மேலே சென்றுள்ள ஜெயலலிதா, வெளிநாட்டவர் இந்தியப் பிரதமராகப் பதவி வகிப்பதைத் தடுக்கும் வகையில் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். ஆனால் எல்லோர் மனதிலும் இருக்கும் ஒரு கேள்வி என்னவென்றால் திடீரென இப் பிரச்சினையை எழுப்ப வேண்டிய நிர்ப்பந்தம் ஜெயலலிதாவுக்கு ஏன் ஏற்பட்டது? காங்கிரஸ் கட்சி மீது பல்வேறு காரணங்களுக்காக மிகவும் கோபமாக உள்ளார் ஜெயலலிதா என்பது மிக முக்கியமான காரணமாகச் சொல்லப்பட்டாலும், அது தவிரவும் வேறு சில காரணங்கள் உண்டு என்ற கருத்து முன் வைக்கப்படுகிறது. முதலில் காங்கிரஸ் மீது ஏன் கோபம் என்பதற்கான காரணங்களை ஆராயலாம்.

காவிரி நதி நீர்ப் பிரச்சினை தொடர்பாகக் கர்நாடக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காகப் புதுடில்லி சென்றிருந்த ஜெயலலிதா, பத்திரிகையாளர்களைச் சந்தித்த போது சோனியா விவகாரம் வெளிப்பட்டது. தமிழகத்துக்குத் தண்ணீர் தரமுடியாது என்று கர்நாடகத்தை ஆளும் காங்கிரஸ் அரசு திட்டவட்டமாக அறிவித்து விட்ட நிலையில் நதிநீர்ப் பங்கீடு தொடர்பான பேச்சுவார்த்தை தோல்வியைச் சந்தித்தது. கூட்டம் நடந்து கொண்டிருக்கும் போதே ஜெயலலிதா வெளிநடப்புச் செய்தார் என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். தண்ணீர் இல்லாமல் தமிழகத்தில் விவசாயம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் காங்கிரஸ் மீதான ஜெயலலிதாவின் கோபம் பன்மடங்காகப் பெருகியிருக்க வேண்டும். ஏனென்றால் காங்கிரஸ் மீதும் சோனியா மீதும் தாக்குதலைத் தொடுக்க ஒரு சரியான சந்தர்ப்பத்தை ஜெயலலிதா எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அதற்குக் காரணம் என்ன?

தமிழகக் காங்கிரஸ் கட்சியின் தலைவராக ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் நியமிக்கப்பட்ட காலத்தில் இருந்தே அ.தி.மு.க. அரசையும், ஜெயலலிதாவையும் கடுமையாக விமர்சனம் செய்து வருகிறார். அவரை காங்கிரஸ் தலைவர் பதவியில் இருந்து மாற்ற வேண்டும் என்ற ஜெயலலிதா எடுத்த முயற்சிகள் பலிக்கவில்லை. இதற்கிடையே காலம் சென்ற காங்கிரஸ் தலைவர் மூப்பனார் தொடங்கிய தமிழ் மாநில காங்கிரஸ் மறுபடியும் காங்கிரஸ் கட்சியுடன் இணைக்கும் விழாவில் கலந்து கொள்ள வந்திருந்த சோனியாகாந்தியும் ஜெயலலிதா அரசைக் கடுமையாக விமர்சித்தார். விவசாயிகளும், நெசவாளர்களும், சொல்லொணாத் துயரத்தில் தவித்துக் கொண்டிருக்கும் போது அதைத் துடைப்பதற்குத் தமிழக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சோனியா குற்றம் சாட்டினார். தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சியில் இல்லாததால் மக்கள் நலத்திட்டங்கள் ஒட்டுமொத்தமாகப் புறக்கணிக்கப்பட்டன. மீண்டும் காங்கிரஸ் ஆட்சியைக் கொண்டு வந்தால்தான் இப் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும் என்று சோனியா கட்டியம் கூறினார். தன்னைப் பற்றியும் தன்னுடைய அரசைப் பற்றியும் எழுப்பப்படும் சிறு சிறு விமர்சனங்களைக் கூடத் தாங்க முடியாத ஜெயலலிதா, இவ்வளவு பெரிய விமர்சனத்தைத் தாங்கிக் கொள்வார் என்று எதிர்பார்க்க முடியாதுதான். வெகுநாட்கள் வரை சோனியாவின் விமர்சனத்துக்குப் பதில் சொல்லாத அவர் எல்லாவற்றுக்கும் ஒட்டுமொத்தமாகத் தாக்குதல் தொடுத்துள்ளார்.

இவை வெளிப்படையாகப் பேசப்படும் காரணங்கள். இது தவிர வேறு சில காரணங்களும் உண்டு. அவை என்ன?

சோனியாவை ஜெயலலிதா எப்போது விமர்சித்தார் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். இந்திய துணைப் பிரதமர் எல்.கே.அத்வானியைச் சந்தித்த பிறகு நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதுதான் ஜெயலலிதா தன்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். ஆகவே பாரதிய ஜனதா கட்சியின் ஆசியோடுதான் ஜெயலலிதா செயற்பட்டுள்ளார் என்று காங்கிரஸ் கட்சியினர் குற்றம் சாட்டுகின்றனர். ஜெயலலிதாவுக்கு எதிரான டான்சி நிலபேர ஊழல் வழக்கில் தீர்ப்பு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. தனக்கு எதிராகத் தீர்ப்பு வராமல் இருக்க வேண்டும் என்பதற்காக மத்திய அரசின் ஆதரவைத் திரட்டுவதற்காகத்தான் ஜெயலலிதா சோனியாவை விமர்சித்தார் என்பது காங்கிரஸ் கட்சியின் வாதம்.

டில்லியில் ஜெயலலிதா பேசிய கருத்துகள் தமிழகத்தில் பிரச்சினைகளைக் கிளப்பி விட்டது. ஜெயலலிதா கொடும்பாவியை காங்கிரஸ்காரர்களும், சோனியா கொடும்பாவியை அ.தி.மு.க.வினரும் எரித்தனர். பத்திரிகையாளர்களைச் சந்தித்த காங்கிரஸ் தலைவர் இளங்கோவன் ஜெயலலிதாவுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் பேசினார். சோனியாவை விமர்சிப்பதை நிறுத்தாவிட்டால் ஜெயலலிதாவின் கடந்தகால தனிப்பட்ட வாழ்க்கையையும், பொது வாழ்க்கையையும் விமர்சிக்க வேண்டி வரும் என்று கூறினார். எதிர்காலத்தில் அ.தி.மு.க.வுடன் கூட்டணியே கிடையாது என்று அறிவித்த அவர், கூட்டணி இல்லாமல் தேர்தலைச் சந்திக்க ஜெயலலிதா தயாரா? என்று சவால் விட்டார்.

காங்கிரஸ் கட்சியைத் தொடங்கியவர்களில் வெள்ளையர்களான ஆலன் ஆக்டேவியன் ஹியூம், வில்லியம் வெட்டர்பன், அன்னிபெசன்ட் ஆகியோரும் உண்டு. காங்கிரஸ் கட்சித் தலைவர்களாக அந்நிய நாட்டைச் சேர்ந்த ஐந்து பேர் இருந்திருக்கின்றனர் என்று வரலாற்றை நினைவுபடுத்துகின்றனர் காங்கிரஸார்.

இவை ஒருபுறம். தமிழகத்தில் மீண்டும் ஒரு பெரிய பிரச்சினை தலைதூக்கியிருக்கிறது. கன்னட நடி

### கானகன்

கர் ராஜ்குமார் கடத்தல் முடிந்து சுமார் இரண்டு ஆண்டுகளாக அமைதியாக இருந்து வந்த சந்தனக் கடத்தல் வீரப்பன், கர்நாடக முன்னாள் அமைச்சர் நாகப்பாவைக் கடத்திச் சென்று விட்டான். பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கும் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் நெடுமாறனையும், அவரது கட்சியைச் சேர்ந்த கொளத்தூர் மணியையும் விடுதலை செய்ய வேண்டும் என்று வீரப்பன் நிர்ப்பந்தம் விதித்துள்ளான்.

இந்த விவகாரத்தை எப்படிச் சமாளிப்பது என்று கர்நாடக அரசு தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கிறது. ஆனால், தமிழக அரசால் எந்த அளவுக்கு கர்நாடகத்துக்கு உதவ முடியும் என்று தெரியவில்லை. தண்ணீர் தராத கர்நாடகத்துக்கு ஜெயலலிதா உதவ முன் வருவார் என்று யாரும் நம்பவில்லை.

ஆனால் கர்நாடக அமைச்சர் நாகப்பாவை, வீரப்பனிடம் இருந்து மீட்க வேண்டுமானால், அது நெடுமாறன் ஒருவரால்தான் முடியும் என்ற கருத்து நிலவுகிறது. கடந்த காலத்தில் வீரப்பனிடம் தூதுவராகச் சென்று வந்த நக்கீரன் பத்திரிகையின் ஆசிரியர் கோபால் இப்போது அப் பணியை மேற்கொள்ள முடியாது. ஏனெனில் வீரப்பனே, கோபாலை விரும்பவில்லை. ஆகவேதான் ராஜ்குமார் மீட்பு விவகாரத்தில் நெடுமாறன் தலையிட வேண்டி வந்தது. அவர்தான் வெற்றிகரமாக மீட்டுக் கொண்டு வந்தார்.

தற்போதும் தூதுவராகச் சென்று அமைச்சரை மீட்கத் தயாராக இருக்கிறார் நெடுமாறன். நீதிமன்ற காவல் நீடிப்புக்காக வியாழக்கிழமை சென்னைக்கு அழைத்து வரப்பட்ட அவர் தன்னுடைய விருப்பத்தைத் தெரிவித்தார். தன்னுடைய நோக்கம் என்பது கர்நாடகத்துக்கும் தமிழகத்துக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் பதற்றத்தைக் குறைப்பதுதானே தவிர சிறையில் இருந்து வெளியேற வேண்டும் என்பதல்ல என்று அவர் திட்டவட்டமாகத் தெரிவித்தார். ஆனால் அதற்கு ஜெயலலிதா ஒப்புதல் அளிப்பாரா? என்பதுதான் கேள்வி.

புலிகளுக்கு ஆதரவாகப் பேசியதற்காக ஜாமீனில் வெளிவர முடியாத பொடா சட்டத்தில் நெடுமாறனைக் கைது செய்துள்ள தமிழக அரசு அவருடைய கட்சியையும் தடை செய்துள்ளது. அவர் நடத்தி வந்த அலுவலகத்துக்கு சீல் வைக்கப்பட்டது. இத்துடன் ஜெயலலிதா நின்று விடவில்லை. வீரப்பனுக்கு எதிராகத் தீவிரமாகச் செயற்பட்ட கர்நாடக அதிரடிப்படை அதிகாரி கொம்பையா மாற்றப்பட்டதற்கு நெடுமாறன்தான் காரணம் என்று குற்றம் சாட்டியுள்ளார். கர்நாடக முதல்வர் கிருஷ்ணாவைச் சந்தித்து நெடுமாறன் பேசியதால் தான் கொம்பையா மாற்றப்பட்டார் என்பது ஜெயலலிதாவின் வாதம். ஆனால் பிரச்சினை தீர வேண்டுமானால் நெடுமாறனின் உதவி தேவை. ஆனால் எல்லாமே ஜெயலலிதாவின் கையில்தான் இருக்கிறது. அவர் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார் என்பது அவருக்குத்தான் வெளிச்சம். ■

---

# மகேஸ்வரன்–பிரதமர் லடாய்

இந்து கலாசார அமைச்சர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்குத் தகாத வார்த்தைகளால் ஆங்கிலத்தில் ஒரு கடிதம் எழுதியதும், அதில் தனது இராஜினாமாவை மகேஸ்வரன் கோரியதும் யாவரும் அறிந்ததே.

இந்தக் கடிதத்தை யார் எழுதியது என்று கேட்டதற்குத் தான்தான் எழுதியதாக மகேஸ்வரன் கூறியிருக்கிறார். அந்தளவுக்கு எழுதுவதற்கு உமக்கு ஆங்கில அறிவு இல்லையே எனக் கூறி, யார் எழுதியது எனப் பிரதமர் மீண்டும் வினவிய போது தனது வீட்டில் இருப்பவர்தான் எழுதியது என்று கூறினார். அவர் யார் என்று வினவிய போது மகேஸ்வரன் பிரதமரின் கையிலிருந்து அக் கடிதத்தை இழுத்தெடுக்க முற்பட்டார், இதன் பின் அவர் பஸ் ஏறிப் புறப்பட்டு விட்டார்.

அவரைச் சமாதானப்படுத்துவதற்குப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அவரது இல்லம் நாடிச் சென்றனர். ஒருவாறு சமாதானம் பிடித்து அவரைக் கொண்டுவந்து சேர்த்தனர்.

அந்த ஆங்கிலக் கடிதத்தில் கையாலாகாத அமைச்சராகத் தான் இருப்பதாகவும், யாழ்ப்பாணத்திற்குத் தரங்குறைந்த பொருட்கள் அனுப்பப்படுவதாகவும் மக்கள் சார்பில் குறைப்பட்டிருந்தார்.

முன்னைய ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட அளவுக்குக் கூட அங்கு புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள் நடைபெறவில்லை என்று அங்கலாய்த்திருந்தார்.

முன்னர் ஒரு தடவை மகேஸ்வரன் அவர்கள் பாராளுமன்றத்தில் செருப்பைக் கழற்றிக் காட்டியது பலருக்கும் ஞாபகமிருக்கக் கூடும் .

இங்குள்ள அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கும், கட்டுப்பாடில்லாத பகுதிக்கும் இடையே மண்ணெண்ணெய்க் கடத்தலில் ஒருகாலத்தில் ஈடுபட்டதாகப் பெயர் பெற்ற அவர், மண்ணெண்ணெய் மகேஸ்வரன் என்றும் அழைக்கப்பட்டவர்.

தேர்தல் காலத்தில் இவருடைய சகோதரர் மற்றும் அடியாட்களுடன் சேர்ந்து அட்டகாசங்கள், அவதூறான வார்த்தைகளுடன் வலம் வந்தார். யாழ்ப்பாணத்துப் பத்திரிகையான 'உதயன்' அவரை ஒரு வீரரைப்போல் சித்தரித்தது.

'உதயன்' பத்திரிகைக்குத் தமிழ் தேசியக் கூட்டமைப்பைவிட மகேஸ்வரனின் பாராளுமன்றப் பிரவேசம் அக்கறைக்குரியதாக இருந்தது.

உதிரிச் செயற்பாடுகளுக்குத் தார்மீக வடிவம் கொடுக்க முனைந்தது.

தமிழர் ஒருவருக்குப் புனர்வாழ்வு அமைச்சர் பதவி கொடுக்கப்படவில்லை என ஆசிரிய தலையங்கம் தீட்டியது. சங்கரி, செல்வம் போன்றவர்களையும் அதில் மிரட்டியிருந்தது.

யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்படும் அத்தியாவசியப் பொருட்களின் தரம் குறைவாக இருப்பது நீண்டகாலமாக நிலவிவரும் ஒரு பிரச்சனை. ஒருசில தனிப்பட்ட வியாபாரிகளும் இதனால் கொள்ளை லாபம்



அடித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் விமானப் பயணிகளுக்காகச் சேவையில் ஈடுபடும் வாகனங்களில், இவரது வாகனங்களும் உண்டு. ஒரு ஆளுக்கு இந்த பஸ்களில் 100 ரூபா வசூலிக்கப்படுகிறது. சாதாரணமாக 10 ரூபாவிற்கு மேல் வசூலிப்பது நியாயமற்றது. எப்போதும் தமது சம்பாத்தியத்திற்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்னும் போது விரக்தி, வேதனை, ஆத்திரம் என்பன ஏற்படுகின்றன.

புலிகளும் அவரைத் தென்னங்குற்றியில் இருத்திப் புத்திமதி கூறியதாக அறியப்படுகிறது.

இந்த எல்லா நெருக்குவாரமும் சேர்ந்துதான் இராஜினாமாக் கடித இழுபறியில் ஈடுபட வைத்தது.

முக்கியமான விடயம் என்னவென்றால், தமிழ் மக்கள் பாராளுமன்றத்திற்கோ, ஏனைய மக்கள் பிரதிநிதித்துவ மன்றங்களுக்கோ ஆட்களைத் தெரிவு செய்யும் போது வரலாற்றுணர்வுடன் அணுக வேண்டும்.

தமிழர்களின் போராட்டத்தில் 20 ஆயிரம் இளைஞர், யுவதிகளும் 50 ஆயிரம் மக்களும் மரணித்திருக்கிறார்கள்.

உயர்ந்த இலட்சியங்களுடன் போராட வந்த இளைஞர், யுவதிகளை இழிவுபடுத்துவதாகவே எமது மக்களின் பாராளுமன்றத்திற்கான சில பிரதிநிதித்துவங்கள் இருக்கின்றன.

எந்தச் சமூக உணர்வுமில்லாத லும்பன்களைத் தெரிவு செய்ததன் மூலம் போராட்டத்தில் மரணித்தவர்களின் ஆத்மா மீண்டும் சாகடிக்கப்படுகிறது.

தமிழ் மக்களின் பெருமைக்குரிய தலைவர்கள் பலர் கடந்த காலத்தில் இருந்திருக்கிறார்கள் . தந்தை செல்வா, அமிர்தலிங்கம் போன்றவர்களும், பொதுவுடைமைவாதிகளான வைத்திலிங்கம், சண்முகதாசன் போன்ற தலைவர்களும் தமிழ்ச் சமுதாயத்தில் இருந்திருக்கிறார்கள்.

சமகாலத்தில் போராட்டத்தினூடாக வந்த இளைஞர்கள் இருந்திருக்கிறார்கள்.

'ஒருவனுடைய நண்பனைப் பார்த்து அவனை அறிந்து கொள்' என்று ஒரு அரபுப் பழமொழியுண்டு.

ஒரு சமூகத்தின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதியைப் பார்த்து, அந்தச் சமூகத்தை அறிந்து கொள் என்றாகிவிடும். எனவே மக்கள் கடந்த காலத்தில் தாம் தெரிவு செய்தவர்கள் என்ன செய்தார்கள்? இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? என்பதை அவதானித்துத் தமது தெரிவை மேற்கொள்ள வேண்டும்.

சில தெரிவுகள் எமது சமூகம் நோயால் பீடிக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு அறிகுறியாகக் காணப்படுகிறது.

இந்த நோய் களையப்படவேண்டும். எமது சமூகத்தினுள் நீண்டகாலமாக நிலைத்து நிற்கும் ஜனநாயக மறுப்பு, கருத்துச் சுதந்திரமின்மை என்பனவும் இத்தகைய நோய் ஏற்படுவதற்குக் காரணமாயமைகின்றன.

**தாகூர்**

நன்மை, தீமைகளைப் பிரித்துணரமுடியாத நிலைமைகளைத் தோற்றுவிக்கின்றன.

எனவே, ஆரோக்கியமான பிரதிநிதித்துவங்கள் ஏற்படுவதற்கான சூழ்நிலை உருவாக்கப்படவேண்டும். இதன்மூலமே அபகீர்த்தி மிக்க பிரதிநிதித்துவங்கள் உருவாவதைத் தடுக்க முடியும்.

உதிரித்தனங்களைத் தமது பத்திரிகை வியாபார நோக்கங்களுக்காகப் பாராட்டுபவர்கள் சமூகத்திற்கு மோசமான வழிகாட்டலையே வழங்குகிறார்கள் என்றே கருத முடியும். ■

# NAVEEN CERAMIC

தரமான

☛ Wall Tiles, ☛ Floor Tiles

மற்றும் குளியலறை உபகரணங்களை

*Spain, Italy, Thailand, Malaysia, India, Indonesia* போன் நாடு ள ல் இருந்து நே டியா இ்கும செய்து வந போ ப்பவ் ள்



Naveen Ceramic No.307, George R.De Silva Mawatta, Kotahena, Colombo-13. Sri Lanka. Tel : 345197-8

எமது புதிய காட்சியறை
184-A, Havelock Road, Colombo-05.
Tel :01-507334

500ற்கும் மேற்பட்ட அழகிய, பல வர்ண, வடிவங்கள் உங்கள் தெரிவுக்காக எம்மிடம் உண்டு.

---

## விதுஜா ஏசியன் சொப்

**VIDUJA ASIAN SHOP**

WAAG HAUS PASSGE-8
3011 BERN (1 STOCK)
SWISS.
T.P.:-031-3113510, 031-9928267, 079-2158405

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள் சிறுவர், சிறுமிகள், பெரியவர்களுக்கான வண்ண வண்ண ஆடைகள், தொலைபேசி அட்டைகள், பழைய புதிய வீடியோ பிரதிகள் வாடகை சகல விதமான புகைப் படங்கள் எடுக்கவும் இன்றே நாடுங்கள்.
விதுஜா ஏசியன் சொப்

---

## வெள்ளவத்தை

(கொழும்பு தெற்கு)

**Eric Rajapakse** Opticians

நீங்கள் அடுத்த முறை மூக்குக்கண்ணாடி அல்லது கண்டாக்ட் லென்ஸ் வாங்கும்போது மூக்குக்கண்ணாடி தயாரிப்பில் விற்பன்னர்களும் கண்டாக்ட் லென்ஸ் தயாரிப்பில் கைதேர்ந்தவர்களுமான எம்மை நாடுங்கள்.

இல.539, காலி வீதி, வெள்ளவத்தை,
(ரொக்ஸி பெற்றோல் நிலையத்திற்கு எதிரில்)

தொலைபேசி: 01-362971,553871

பிரதி வியாழக்கிழமைகளில் முன் அனுமதியுடன் கண் வைத்திய நிபுணர்களைச் சந்திக்கலாம்

---

## Roopam Textile

புதிதாய் இறக்குமதி செய்யப்பட்ட திருமணப் புடவைகள், சல்வார்கமீஸ், பிளவுஸ் துணிகள், பெண்களுக்கான தைத்த ஆடைகள், ஆண்களுக்கான தைத்த ஆடைகள் மற்றும் சிறுவர் ஆடைகளுக்கு,

**Roopam Textile**
507, காலி வீதி, வெள்ளவத்தை.
Tel : 074-513172

*நேரில் பார்வையிட்டு நம்பிக்கை கொள்ளுங்கள்.*

---


# விளம்பரப் பகுதி

---

## Wedding PHOTOGRAPHER



27/23A, Madampitiya Road, Colombo - 15.
Hotline: 077 321345, Tele: 527933
Your Satisfaction Is My Success




---

## வீடே அழகாகி உள்ளது

வீட்டுக்குத் தேவையான அனைத்து பொருட்களும் ரெலிமாக்கட்டிங் மூலம்...

வானொலிப் பெட்டி
தொலைக்காட்சிப்பெட்டி
வீடியோ, டெக்
குளிர்சாதனம்-மின்குமிழ்
காஸ் அடுப்பு-மின் அடுப்பு
ஜெனரேட்டர்- என்ஜின் லயட்









SISIL | SAMSUNG
SONY | LG
Panasonic | Candy
SANYO | SHARP
SINGER | PHILIPS

- குறைக்கப்பட்ட விலைகள்
- இலவச போக்குவரத்து
- இலகு தவணைக் கொடுப்பனவு
- உறுதியான விலை

தொலைபேசி: (வெலிசறை-074-819890,939342)
(நீர்கொழும்பு-074-872628)


## ரெலி மாக்கட்டிங்

**TM Tele Marketing**
CONSUMER ELECTRONICS

750, நீர்கொழும்பு வீதி, வெலிசறை.
கிளை: 138, றோயல் சினிமா கட்டிடம்,
கிறீன்ஸ் வீதி, நீர்கொழும்பு.
*website: www.viplanka.com/tele*
*(நீர்கொழும்பு பஸ் தரிப்பிட நிலையத்திற்குப் பின்னால்)*

---

## 31ஆவது நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்



### சின்னையா சின்னத்தம்பி

**திருநகர், கிளிநொச்சி**

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 08.07.1935 | 09.08.2002 |

அன்னார் அம்பிகாவதியின் பாசமிகு கணவரும், இராசேந்திரம் - (அழகு, கிளிநொச்சி), சந்திரா (ஜேர்மனி), ரவீந்திரன்(ரவி, ஜேர்மனி), உதயகுமார் (உதயன், சுவிஸ்), மகேந்திரராஜா (ராஜன், சுவிஸ்), விஜயகுமாரி(விஜயா, லண்டன்), சுபாஜினி (கனடா), சுபாநந்தினி (கனடா), மதிவேந்தன்(கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், தேவராஜா (ஜேர்மனி), புஸ்பாமாலா (புஸ்பா, கிளிநொச்சி), பிறேமாவதி (பிறேமா, ஜேர்மனி), ஜெயராணி (சுவிஸ்), வான்மதி (மதி, சுவிஸ்), நடராசா (லண்டன்), ஜெயராசா (கொழும்பு), ஜெனி (கனடா) ஆகியோரின் மாமனாரும், மாலதி (கிளிநொச்சி), ரமேஸ், ஸ்ரெலா, சுதா (ஜேர்மனி), கஜனி, நிலோ, நிஜான் (ஜேர்மனி), விஜி, சுவி, சுதர்ஷன் (சுவிஸ்), அஜிஷன் (சுவிஸ்), ஜெனிபா, சிந்து, துஷி, சாரு (லண்டன்), அனேஜா, அனேஜன் (கனடா) ஆகியோரின் பேரனு மாவார்.

09/08/2002 அன்று இறைவனடி சேர்ந்த எமது தந்தையாரின் இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்டு எம்மை ஆறுதல்படுத்தியவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபத்தைத் தெரிவித்தவர்கட்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் 08/09/2002 ஞாயிற்றுக்கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். குறிப்பு- சுவிஸில், அன்னாரின் மகன் உதயகுமார் (உதயன்) அவர்களின் இல்லத்தில் 14/09/2002 சனிக்கிழமை அன்று நடைபெற இருக்கும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் கலந்துகொண்டு பிரார்த்திக்குமாறு அழைக்கின்றோம்.

*தகவல்: மகன் உதயகுமார் (உதயன் - சுவிஸ்)*
*தொடர்புகளுக்கு (உதயன் சுவிஸ்) தொ.பே:-0041264816743*

---

கண் வைத்திய நிபுணர் மூலம் கண் பரிசோதனை செய்து விரும்பிய வகையிலான பிறேம்களைக் கொண்ட மூக்குக் கண்ணாடிகளை குறைந்த செலவில் பெற்றுக் கொள்ள ஒரே நிறுவனம்



விழி உங்களிடம்
அதன் ஒளி
எங்களிடம்

## அப்பலோ ஒப்ரிசியன்

(ஹட்டன் நஷனல் வங்கி முன்னால்)
317 பி, காலி வீதி
வெள்ளவத்தை,
கொழும்பு- 6.
தொலைபேசி: 074-516609

## APPOLO OPTICALS

No.298A,
George R.De Silva Mw,
(Khairaz Complex)
Kotahena, Colombo-13.
T.P: 074-610459

---

## மலையாள மாந்திரீகம்





மலையாள மாந்திரீகத்தை இலங்கையில் திட்டவட்டமாகக் கற்றவர் டாக்டர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை, எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கு மட்டுமே இடமுண்டு எண்ணியவன்-எண்ணியவளைத் திருமணம் முடிப்பதற்குச் சிற்சில தடைகளா, திருமணமே நடக்காதா என்ற ஏக்கமா, காதல் தோல்வியாகிவிட்டதா, கணவன்-மனைவி ஒற்றுமை குறைகிறதா, கையில் பணம் தங்கவில்லையா, பணவருவாய் குறைவா, கொடுத்த கடன் திரும்பி வரவேண்டுமா, குடும்ப வாழ்க்கை இனியவையாக அமையவேண்டுமா, லக்சுமி கடாட்சம் பெறவேண்டுமா, வெளிநாட்டுப் பயணத்தில் தங்கு தடை ஏற்படுகின்றதா, தான் பெற்றபிள்ளை தன் பேச்சைக் கேட்கவில்லையா, பெருவாழ்வு-குபேர வாழ்வு பெறவேண்டுமா, குழந்தைப்பேறு கிட்டவில்லை எனக் கவலையா, கல்வியில் சித்தி பெறவேண்டுமா, கடந்த 33 வருடமாக ஸ்ரீ துர்க்கையின் அருட் கடாட்சத்தால் 100க்கு 100% வெற்றி பெற்றவர்கள் எமது பதிவேடு மூலம் தெரிந்து கொள்ளலாம், வெளிநாட்டவர்களுக்கு கடல் கடந்து செயல்பட கூடிய வண்ணம் அதிவிசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவு மூலம் உடனுக்குடன் அனுப்புவதால் வெற்றியும் உடனுக்குடன் கிடைக்கிறது. இது ஒரு பிரமாண்டமான அங்கீகாரம் பெற்றதும் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தில் மாந்திரீகப் பிரிவாக அதி உன்னத சேவையின் நிமித்தம் வெற்றி கிட்டுவது மிக மிகச் சுலபம், மாந்திரீக வேலைகள் வெற்றிக்கு அச்சொட்டான திட்டவட்டமான சரிவரும் திகதியும் கொடுப்பது என்றால் அது எமது திருவருளே, அதுமட்டுமல்ல காண்ட அடிப்படையில் ஜாதகங் களையும் கைரேகைகளையும் தெட்டத் தெளிவாக எழுதி அறிந்து கொள்ளலாம். இன்னும், அனைத்து உலக நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் பிரச்சனைகளை உடனுக்குடன் மாந்திரீக சக்தியால் தீர்வு கண்டமையால், எண்ணற்ற வாடிக்கை யாளர்களின் நற்சாட்சிப் பத்திரங்களை எமது நிருவாக பதிவேட்டில் காணலாம்.

**வெளிநாட்டவர்களுக்கென அதி தொழிநுட்பம் வாய்ந்த 24 மணித்தியால தொலைபேசிச் சேவை உண்டு.**
T.P: 00941 342463 , 00941 470615, தேவைகளுக்கு:-

39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பீ.கே. சாமி (J.D.G.A.N)JP

**உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி**
Dr.P.K.Saamy J.D.G.A. NI JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika Uchchada Peedam.

**கொழும்பில்**
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

**நுவரெலியாவில்**
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.


வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 342463
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-342463, 431137,470615- Fax: 344831
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.

---

## ஓராண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 25 06 1925



இறைவன் அடியில் 07 09 2001

### அமரர் திரு வேலாப்போடி சீனித்தம்பி (ஜே.பி)

*ப.நோ.கூ.ச. முன்னாள் பொது முகாமையாளரும், ஏறாவூர்- 05, ஸ்ரீ மது மலர்க்கா வீரபத்திரர் ஆலயத் தலைவரும்*

ஓராண்டு ஓடி வந்தது- அப்பு
நீயோ கனவுலகில் கலந்தாயே - அப்பு
உன் நினைவலைகள் எம்மை
தினமும் வாட்டுதே- அப்பு
காலங்கள் ஓடினாலும் உந்தன்
நினைவுகள் மாறாதே- அப்பு
அப்பு என்ற தலைவன்
இல்லாமல் கலங்குகின்றோம் - அப்பு
அப்பு, அப்பு என்று இனி
யாரை அழைப்போம் - அப்பு?
அப்பு உங்கள் ஆத்மா சாந்திக்காக வேண்டி நிற்கும்
மனைவி - சீ. அம்பிகாவதி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

*தகவல்- திரு.திருமதி:- அமிர்தலிங்கம், குறிஞ்சி-சுவிஸ்*
*சீ. தவசோதி - ஜேர்மனி, சீ. ரூபசாந்தன் - சுவிஸ்*

# 2001. செப்டம்பர். 11...

அமெரிக்க இரட்டைக்கோபுரங்கள் த்கர்க்கப்பட்டு- தரைமட்டமாகி ஒரு வருடம் உருண்டோடி விட்டது. அதற்குள் தான் உலகில் எத்தனை மாற்றங்கள்.

பின்லாடன், அல்கைடா ,தலிபான் என்ற பெயர்கள் உலகின் எல்லாக் குஞ்சு குருமனுக்கும் தெரிந்த பெயர்களாக மாறிவிட்டிருந்தன.

அமெரிக்காவின் எப்.பி.ஐ., சி.ஐ.ஏ. போன்ற உளவு நிறுவனங்கள் மற்றும் அமெரிக்காவின் நினைத்துப் பார்க்க முடியாத பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றிய எமது கற்பனைகளையெல்லாம் அடியோடு மாற்றியமைத்தது அந்தத் தாக்குதல் என்றே கூறலாம். ஏனெனில் அமெரிக்காவின் பாதுகாப்புத் தலைமையகமான பென்ரகன் கட்டடம் கூட அந்தத் தாக்குதலிலிருந்து தப்பவில்லை. வெள்ளை மாளிகை ஏதோ அதிஸ்டவசமாகத் தப்பியது என்றே கூறவேண்டும்.

இரட்டைக் கோபுரங்களினுள் தற்கொலையாளிகள் செலுத்தி வந்த விமானங்கள் நுழைந்த காட்சி உலக தொலைக் காட்சிகளில் பல நூறு தடவை காண்பிக்கப்பட்டன.

இத்தாக்குதல் நடந்து அடுத்த இரு மாதங்களுக்குள்ளேயே ஆப்கானிஸ்தானுக்குள் நுழைந்த அமெரிக்க, பிரித்தானிய படைகள் மிகப் பெரிய யுத்தத்தின் பின் தலிபானின் கட்டுப்பாட்டிலிருந்த ஆப்கானிஸ்தானை மீட்டன. தற்போது அங்கு ஒரு ஜனநாயக அரசு தாபிக்கப்பட்டுள்ளது. ஆனால் அல்கைடாவின் தலைவர் பின்லாடனோ, தலிபானின் தலைவர் ஓமாரோ இன்னும் கைதுசெய்யப்படவில்லை.

ஆப்கானிஸ்தானினுள் புகுந்த அமெரிக்கப் படைகள் இன்னும் வெளியேறவில்லை.

செப்டெம்பர் 11 தாக்குதலில் அதிர்ச்சி அடைந்து போன அமெரிக்கர்கள் இன்னும் அந்த அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. இரட்டைக் கோபுரங்களில் சிக்கி மரணித்த 5000க்கு மேற்பட்டோரின் மரணங்களின் சோகம் இன்னும் அமெரிக்காவை ஆக்கிரமித்துத்தான் இருக்கிறது. இது ஒரு அமெரிக்கச் சோகம்.

அவலமான மனிதர்களால் உண்டாக்கப்படும் மரணங்களின் வேதனையை அறியாத சமூகம் ஒரேயடியாகப் பாரிய அளவில் அதனை எதிர்நோக்கவேண்டி வந்தது.

1970 களின் நடுப்பகுதியில் வியட்நாமில் ஆக்கிரமிப்பு யுத்தத்தில் ஈடுபட்ட அமெரிக்கப் படையினருக்குக் கிடைத்த அனுபவங்கள். அமெரிக்க மக்களை யுத்தத்திற்கெதிராகக் கிளர்ந்தெழ வைத்தது.

அது வியட்நாமின் சுதந்திரத்திற்கு அமெரிக்கர்களின் பங்களிப்பாக இருந்தது.

வியட்நாமிய மக்களுக்கு இலட்சியப்பற்றுள்ள, சமூகம் பொருளாதாரம், கலாசாரம் பற்றிய ஆழ்ந்த ஈடுபாடுகொண்ட சமூகத்தை முன்னோக்கிய திசையில் வழிநடத்துகின்ற தலைமை இருந்தது.


அவர்களுடைய சுதந்திரத்திற்கான போராட்டம் கூட நேர்த்தியான மக்கள் பங்களிப்புடனானதாக இருந்தது.

ஆனால், இந்த அடிப்படைவாதிகள் அப்படியில்லை. இவர்கள் மனித நாகரிகத்திற்கு, முன்னேற்றத்திற்கு எதிரானவர்களாக இருந்தார்கள். இஸ்லாத்தின் பெயரில் அவர்கள் சொந்த மக்களையே அடிமைப்படுத்தினார்கள்.

இதுவே அவர்களின் தோல்விக்கு அடிப்படையாக இருந்தது.

ஆனால் அமெரிக்கா மத்திய கிழக்கிலும், லத்தீன் அமெரிக்காவிலும், ஆசியாவிலும் தான் இழைத்த குற்றங்களை எப்போதும் மீள்பரிசீலனை செய்தது கிடையாது . அதற்கான நிர்ப்பந்தம் அமெரிக்க அரசுகளுக்கு மக்களிடமிருந்தே வரவேண்டும்.

2001 செப்டெம்பர் 11க்குப் பின் தமது தேசத்தின் விடுதலைக்கோ அல்லது எதிர்ப்பைக் காட்டுவதற்கோ மனிதமுகம் சிறிதுமில்லாத குரூரத்தனமான பயங்கரவாதத்தைப் பாவிப்பவர்கள் மேற்குலகில் செயற்பட முடியாதவாறு தடைசெய்யப்பட்டனர். மேற்குலகின் ஜனநாயகக் கட்டமைப்பு இத்தகைய குழுக்கள் நிதி திரட்டுவதற்கும், சர்வதேச தொடர்புசாதன வசதிகளைப் பெறுவதற்கும், அரசியல் அடைக்கலம் பெறுவதற்கும் வாய்ப்பானதாக இருந்தது.



பயங்கரவாதம் தொடர்பான புதிய உலகளாவிய முன்னெடுப்புக்கள் உலகின் பல்வேறு பகுதிகளில் நியாயமான உரிமைப் போராட்டங்களுக்கு ஒரு பின்னடைவை, நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அதேபோல் ஒருநாட்டில் நிலவும் அரசு எத்தகைய கொடூரமானதாக இருப்பினும் அந்த அரசுக்கெதிரான போராட்டமே பயங்கரவாதமாக சித்தரிக்கப்படும் நிலை இன்று அதிகரித்துக் காணப்படுகிறது. சட்டபூர்வமானதோ, அற்றதோ அரசின் பயங்கரவாதம் இங்கு கண்டுகொள்ளாமல் விடப்படுகிறது. சிலியின் முன்னாள் இராணுவ ஆட்சியாளர் பினோச்சே நடத்திய பாசிச ஆட்சி அமெரிக்காவாலோ அல்லது மேற்குலகாலோ அப்போது கண்டுகொள்ளாமல் விடப்பட்டது. ஆனால் அவர் அண்மையில் பிரிட்டனுக்கு விஜயம் செய்தபோது அவருடைய இருண்ட ஆட்சிக் காலத்தில் கைதுசெய்யப்பட்டுக் காணாமல் போன ஸ்பெயின் பிரஜைகள் தொடர்பான விசாரணைக்காக அவர் கைது செய்யப்பட்டார்.

பின்லாடனும் சோவியத் இராணுவம் ஆப்கானிஸ்தானுக்குள் பிரசன்னமாக இருந்த காலத்தில் அமெரிக்காவின் நண்பராகவே இருந்துள்ளார். வெள்ளைமாளிகை வரை சென்றுவந்துள்ளார். அரசியலில் நிரந்தர நண்பனுமில்லை, பகைவனுமில்லை என்பது பயங்கரவாதத்திற்கும் பொருந்தும் போலும்.

ஏனெனில் அடிப்படைவாதங்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான கருவியாகவே அங்கு உபயோகிக்கப்படுகின்றன. விசுவாசம் என்பது அங்கு ஏமாற்றாகவே இருக்கிறது.

எமது அண்டை நாடு இந்தியா இந்த மாதிரியான விடயங்களில் சரியான முன்னுதாரணத்தைச் சில சந்தர்ப்பங்களில் காட்டியுள்ளது. 1970 களின் முற் பகுதியில் பாக்கிஸ்தான் இராணுவ ஆட்சியாளர்கள் கிழக்குப் பாக்கிஸ்தான் மக்கள் மீது அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்ட போது இந்திரா காந்தி தலைமையிலான இந்திய அரசு கிழக்குப் பாக்கிஸ்தானின் சுதந்திரத்திற்குப் போராடியவர்களை ஆதரித்து நின்றது.

1983 இல் இலங்கைத் தமிழர்களுக்கெதிராக இன வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டபோது இந்திய அரசு இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக நின்றது.

ஆனால் 1980களின் முற்பகுதியில் லெபனானிலிருந்த பாலஸ்தீன அகதி முகாம்கள் மீது தாக்குதல் நடத்தி 3500 பேருக்கு மேல் படுகொலைசெய்த எரியல் சறோனின் அரசு பாலஸ்தீனப் பிரதேசங்களில் நடத்தும் தாக்குதல்களை படுகொலைகளை உலகம் பெரிதாகக் கண்டுகொள்ளாமல் இருப்பது செப்டம்பர் 11க்குப் பிந்திய நிலையாகும். மத்திய கிழக்கிலும் மேற்காசியாவிலும் உள்ள நாடுகள் பல தம்மீதும் தாக்குதல் நடக்குமோ என்று அச்சமுற்றுள்ளன. ஈவிரக்கமற்ற வன் முறையில் ஈடுபட்ட சில குழுக்கள் தமது மேற்குலகத் தளங்கள் பறி போகும் நிலையில் சமாதான வழிகளை நாடியுள்ளன. அரசுகளும் வன் முறைகளைக் குறைப்பதற்கான வழிவகைகளைத் தேடும் நிர்ப்பந்தத்தில் உள்ளன. இல்லையேல் நிதி உதவிகள் கிடைக்காதென்ற நிலை.

ஆக செப்டம்பர் 11ற்குப் பின் நன்மையும் தீமையும் கலந்து வருகின்றன. ஆனால் இது ஒரு விகாரமான தோற்றப்பாடுதான். இயல்பானதோற்றம் அல்ல.

## அதிரடி அய்யாத்துரை



மத்தளத்துக்குத்தான் ரெண்டு பக்கத் தாலயும் இடியெண்டால் எங்கட மகேஸ்வரனுக்கு மூண்டு பக்கத்தாலயு மெல்லே இடியாக் கிடக்கு. ஒருபக்கம் புலிகள் ஓலைப்பாயில படுக்க வைச்சுக் கணக்குவழக்குக் கேட்டு, பொது நிகழ்ச்சி களில அமைச்சரெண்டு தலை காட்டக் கூடாதெண்டு அன்புக் கட்டளை விதிக்கினம். மற்றப்பக்கம் கூட்ட மைப்பார் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைமையைத் தட்டிப் பறிச்சிட்டு அமைச்சரெண்டும் பாராமல் எட்டி உதையினம். கடைசியாக் கட்சிக்கயுமெல்லே தன்னைச் செல்லாக் காசாக்கிப் போட்டினமெண்டு பிரதமற்ற மூஞ்சிக்கு முன்னால ராஜினாமாக் கடிதத்தத் தூக்கிக் காட்டிப் போட்டு வந்திருக்கிறார். வந்த வீச்சுக்கு பி.பி.சிக்குப் பேட்டிகுடுக்கப் போனால் அங்கயும், நீர் வெறும் வியாபாரிதானேயெண்டு வெந்த புண்ணில வேல் பாச்சிறா, ஆனந்தியக்கா. ஏதோ வாங்கின காசுக்கு வாலாட்டுறதுக்கு இப்ப ஒரேயொரு பேப்பர்தான் மிஞ்சிக் கிடக்குது யாழ்ப்பாணத்தில. இந்த விறுத்தத்திலதான் கொஞ்ச நாளுக்கு முந்தி முன்னாள் அமைச்சரப் பகிரங்க விவாதத்துக்குக் கூப்பிட்டாராக்கும். அத்திவாரமேயில்லாமல் நூலில பறக்கிற காத்தாடி, கட்டிடத்தப்பாத்து, நானோ நீயோ உயரமெண்டு கேட்டுதாம். எத்தின நாளைக்கு உந்த வீராப்பெண்டது இப்ப தெரிஞ்சு போச்சுங்கோ.

அமிரண்ணைக்கு பிறந்தநாள் கொண்டாடக் கூட்டணித் தலைமை என்ன பாடுபடவேண்டியதாப் போச்சுது பாத்தியளோ. யாழ்ப்பாணத்துக் கூட்டத்தக் கப்சிப்பெண்டு ஆரவாரம் காட்டாமல் நடத்தி முடிக்க ஓடராம். அதால இலங்கையில விழாவெடுத்தால் வில்லங்கமெண்டிட்டு, கடல் கடந்துபோய் லண்டனில கூட்டம் போடப் பறந்திச்சினமாம். அங்கயும்கூட அந்தக் கூட்டத்துக்கு யாரும் போகக் கூடாதெண்டு துண்டுப் பிரசுரம் வெளிவந்ததில ஒரு நூறு தலைகளையும் எண்ணக் கிடைக்கேல்லையாம் மண்டபத்தில. இதுக்குள்ள, ரெண்டெழுத்தாருக்கெதிராக் கடும் விமர்சனம் செய்யிற இந்தியப் பத்திரிகையாளர் ராமநாமத்தாரைப் பிரதம பேச்சாளராப் போட்ட துணிச்சலுக்கு இப்ப பதில் சொல்லவேற வேண்டிக் கிடக்காம். இரகசியமாத் தொடர்புகொண்டு ஆளையாள் குற்றம் சாட்டிறதில மும்மரமாயிருக்கினமாம். ம்... அமிரண்ணை இருந்திருந்தால் தானே தற்கொலை செய்துகொண்டிருப்பாரெண்டினம் விசுவாசிகள்.

இங்கால எத்தினையோ கூத்து நடக்க, எதையும் பாராமல் தானும் தன்ர காரியமுமெண்ட கணக்கா ஒரு 18 பாஸ்போட்டுகள வாரி அள்ளிச் சேத்துக் கொண்டு இந்தியன் எம்பஸியிலபோய் விசாக் கேட்டு நிண்டாராம் வெள்ளிமலையார். இந்தப் பெரும் பொட்டலத்தக் கண்டு திடுக்கிட்டுப்போன எம்பஸிக்காரர் உப்பிடியெல்லாம் அள்ளித் குடுக்க இதொண்டும் கோயில் சுண்டலில்லையெண்டு திருப்பியனுப்பிட்டினமாம். தான் ஒரு எம்.பி, தன்னை இந்தியத் தூதரகம் அவமதிச்சுப் போட்டு தெண்டு அங்கயே வைச்சுத் துள்ளி மிதிச்சுச் சத்தம் போட்டாராம். துள்ளத்துள்ள அப்பிடியே அரவணைச்சு அவரை வீதியில கொண்டந்து விட்டிட்டுப் போச்சினமாம் உள்ளயிருந்த சல்வார்க்காரர். எரிப்பது கொடும்பாவி, எடுக்க நிப்பது வீசாவெண்டால் நல்ல கதைதான் போ, தேவையா இதெல்லாம்..?

எங்கட முரளிதரன் யாழ்ப்பாணத்துக்கு ட்டீம் கொண்டுபோய் விளையாடின விளையாட்டு வெறும் விளையாட்டெண்டதோட நிக்கயில்ல, அங்கத்த மக்கள் பற்றி எல்லோரையும் திரும்பிப் பாக்க வைச்சிருக்கு. தான் இருபது வருஷத்துக்கு முந்தி வந்த யாழ்ப்பாணமில்ல இப்ப இருக்கிற யாழ்ப்பாணமெண்டு மனவருத்தப்பட்டதோட, இந்த மக்க ளுக்கு பழைய வாழ்க்கை திரும்பவேணுமெண்டும் ஆதங்கப்பட்டுச் சொல்லியிருக்கிறார். உலக சாதனையாளனா ஒரு தமிழனப் பாத்த சந்தோஷத்தில சனம் முரளியக் கட்டிக் கொஞ்சினது உச்சி குளிர வைச்சிட்டுது போங்கோ! வேதனையில் வாடிற மக்கள நினைச்சு யாழ்ப்பாணம் போன முரளிக்குத் தேங்ஸ்!

போனமுறைதான் எங்கட வினாயகத்தாரும் பி.எம்.டபிள்யு வையும் பற்றிச் சொல்லியிருந்தனான். அதுக்குள்ள தன்ர பி.எம்.டபிள்யு காரோட சேந்து நிண்டு படமெடுத்துப் பேப்பரில போட்டிட்டார். மக்க ளுக்கு முழுசா அகதி நிவாரணம் கிடைக்கேல்ல, நாட்டுக்கு இன்னும் சமாதானம் கிடைக்கேல்லை, இடிபாடுகளக் கட்ட ஒரு செங்கல்தன்னும் இன்னும் பதிக்கேல்லை, அதுக்கிடையில பாராளுமன்றத்தப் பாவிச்சு இப்பிடியொரு ஆடம்பரக் கார வாங்கிப்போட்டதாத் தம்பட்டமடிக்கிறது அவருக்கு வேணுமெண்டால் பெருமையாயிருக்கலாம். சனத்துக்கு வயிறு பத்திக்கிட்டு எரியுதுங்கோ!

கொஞ்ச நாளுக்கு முந்தித்தான் ஜனாதிபதியின்ர ஹேன்ட் பேக்குக்குள்ள என்னயிருக்கெண்டு தேடிச்சினம். இப்ப அனுருத்தயின்ர பெட்டகத்துக்க என்னவெண்டு தேடினம். அவரிட்ட ஏதோ நாலு கோடி கிடக்குதாமெண்டு ஆரவாரப் படுகினம். எனக்கெண்டால் ஆக நாலு கோடிதானோ கிடக்கெண்டு ஆச்சரியமாக் கிடக்கு. எங்கட அமைச்சர் மகேசனாரிட்டையே ரெண்டெழுத்தார் 5 கோடி வெறும் கப்பமாக் கேட்டிருக்கினமெண்டு கதையாக் கிடக்கக்க, அனுருத்தவிட்ட இந்தளவு சொத்திருக்கிறதில ஆச்சரியம் என்னவுங்கோ? வெளி நாட்டாரின்ர காலில விழுந்து கடன்கேட்டுக் கெஞ்சிறதவிட உள்நாட்டு அமைச்சர்மார் ஒவ்வொருத்தரின்ர பெட்டகங்களையும் கவிட்டுக் கொட்டினால் போதும்போல கிடக்கு!

கர்நாடக முன்னாள் அமைச்சர் நாகப்பாவைக் கடத்திய வீரப்பன் அவரை செய்ய வேண்டுமானால் புலிகளுக்கு ஆதரவாகப் பேசியதற்காக சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ. நெடுமாறனை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தான். தமிழ் உணர்வு பொங்கும் வீரப்பனின் வெளிப்படையான கோரிக்கைகளுக்குக் கீழே அவனது நெருங்கிய சகாவான 'சம்பு' என்றழைக்கப்படும் சம்பத்தை விடுதலை செய்யும் நோக்கம் மறைந்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.



# உண்மையில் நெடுமாறனை விடுவிப்பதுதான்

# வீரப்பனின் நோக்கமா...?

ஆடியோ கேசட் ஒன்றை வீரப்பனுக்கு ரஜனி அனுப்பினாராம். அதில் நீயும் ஆன்மீகவாதி; நானும் ஆன்மீகவாதி. இந்தச் செயலில் நீ ஈடுபடலாமா?

**யார் இந்தச் சம்பு?**

வீரப்பனை முதன்முதலில் சந்தித்து வெளியுலகுக்குக் கொண்டு வந்தது நிருபர் சிவசுப்பிரமணியம். அவரைக் காட்டுக்குள் அழைத்துப் போய் வீரப்பனிடம் முதலில் அறிமுகப்படுத்தி வைத்ததே கொளத்தூர் மணிதான் என்று ஏற்கனவே கூறியிருக்கிறது பொலிஸ் தரப்பு. அந்தக் கொளத்தூர் மணியையே முதன்முதலாக வீரப்பன் அழைப்பின்பேரில் காட்டுக்குள் கூட்டிப்போனது இந்த 'சம்பு' என்கிற சம்பத்தான் என்கிறார்கள்! ஆதிவாசி போல் தோற்றம், சிவந்த நிறம், அதிகம் பேசாத சுபாவம், அருகில் பேசிக்கொண்டிருப்பவர்களை அதிகம் பார்க்காமல் சுற்றுப்புறத்தையே கண்களால் கவனித்துக் கொண்டிருப்பவன், படிப்பு சொல்லும்படியில்லாவிட்டாலும், காடு முழுக்க இவனுக்கு அத்துப்படியாம். காட்டுக்குள் யார் போவதென்றாலும் முதலில் நாட்டுக்குள் இருக்கும் இந்த சம்புவைச் சந்தித்தே ஆக வேண்டும். வெளியாட்களுக்கு வீரப்பன் தூது விடுவது, வெளியாட்களைக் காட்டுக்குள் கூட்டிக்கொண்டு போவது, வீரப்பனுக்குண்டான உணவு, உடை இதர பொருள்களைச் சப்ளை செய்வது என எல்லாவற்றையும் கவனித்துக்கொள்வது இவன்தானாம்.

ஆரம்ப காலத்தில் கொளத்தூர் மணியின் தோட்டத்தில் பண்ணை வேலையில் ஈடுபட்டிருந்ததுதான் வீரப்பனின் குடும்பம். அதனால் வீரப்பன், வீரப்பனின் அண்ணன் மாதையன், தம்பி அர்ச்சுனன் உட்பட அனைவருமே கொளத்தூர் மணியின் மீது தீவிர விசுவாசம் வைத்திருக்கின்றனர். காட்டிற்குள் வீரப்பன் தலைமறைவாகிவிட்ட ஆரம்ப காலத்தில் மீண்டும் கொளத்தூர் மணியைச் சந்திக்க ஆசைப்பட்டிருக்கிறான். அப்போது காட்டுக்குள் ரூட் போட்டுக் கொடுத்தவன் சம்புதான் என்கிறது விவரமறிந்தவர்கள் வட்டாரம். அதன் பிறகு தொடர்ந்து கொளத்தூர் மணியை மட்டுமல்ல, சிவசுப்பிரமணியம், நக்கீரன் கோபால், வீரப்பன் குடும்பம், நெடுமாறனையெல்லாம் காட்டுக்குள் அழைத்துப் போய்த் திரும்பக் கூட்டி வந்து விட்டதில் சம்புவுக்குத்தான் நிறையப் பங்கிருக்கிறது என்கிறார்கள்.

சம்பு இல்லாமல் சமீப நாட்களில் மிகவும் கையொடிந்த நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டான் வீரப்பன் என்கிறார்கள். பல முக்கியமான அசைன்மெண்டுகளை அரவம் காட்டாமல் முடித்து விடுவானாம் சம்பு. உதாரணத்திற்குச் சிலவற்றைச் சொல்கிறார்கள். ராஜ்குமார் கடத்தப்பட்டபோது ஆடியோ கேசட் ஒன்றை வீரப்பனுக்கு ரஜனி அனுப்பினாராம். அதில் நீயும் ஆன்மீகவாதி; நானும் ஆன்மீகவாதி. இந்தச் செயலில் நீ ஈடுபடலாமா? ராஜ்குமாரை விட்டுவிடு. அதற்குப் பதிலாக என்ன வேண்டுமோ கேள். நானே ஏற்பாடு செய்கிறேன், என்று அதில் பதிவு செய்யப்பட்டிருந்ததாம். இது தமிழகத்தின் முக்கிய வி.ஐ.பி.மூலம் கொடுக்கப்பட்டு, தமிழ் இயக்கத் தலைவர் ஒருவருக்குக் கைமாறி, முத்துக்குமார் என்பவரிடம் வந்து, அவர், அந்தக் கேசட்டைச் சேர்ப்பித்தது இந்த 'சம்பு'விடம் தானாம்!

அதேபோல் வீரப்பனின் பிடியிலிருந்து ராஜ்குமார் விடுவிக்கப்பட்ட நேரத்தில், முத்துக்குமார் வீரப்பனை இலங்கைக்கு அழைத்துச் சென்று விடும்படி புலிகளின் அரசியல் தொடர்பாளர் தமிழ்ச்செல்வனிடம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். அதற்குத் தமிழ்ச்செல்வன் சம்மதிக்கவில்லை. "வீரப்பனை நாங்கள் இலங்கைக்கு அழைத்துப் போவது சாத்தியமேயில்லை. வேண்டுமானால் அவரை நீங்களே கொண்டு வந்து அங்கே விட்டுவிடுங்கள்" என்று கோரிக்கை வைத்தாராம். இந்தப் பேச்சுவார்த்தை விவரங்களும் ஒரு மினி ஆடியோ கேசட் மூலமாகவே பதிவு செய்யப்பட்டு, சம்புவின் மூலமாகக் காட்டுக்குள் கொண்டு போகப்பட்டிருக்கிறது என்கிறார்கள். இப்படிப் பலவகையிலும் வீரப்பனுக்கு நிழலாக இருந்தவன்தான் சம்பு.

வீரப்பனை இலங்கைக்கு அழைத்துச் சென்று விடும்படி புலிகளின் அரசியல் தொடர்பாளர் தமிழ்ச் செல்வனிடம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். அதற்குத் தமிழ்ச்செல்வன் சம்மதிக்கவில்லை. "வீரப்பனை நாங்கள் இலங்கைக்கு அழைத்துப்போவது சாத்தியமேயில்லை. வேண்டுமானால் அவரை நீங்களே கொண்டு வந்து அங்கே விட்டுவிடுங்கள்" என்று கோரிக்கை வைத்தாராம்.

வீரப்பனுக்குத் தொடர்பிருப்பதாக யார் யாரையெல்லாமோ கைது செய்து சிறையில் அடைத்த கர்நாடக-தமிழக அதிரடிப்படை பொலிஸார், ஏனோ ரொம்ப காலம் வரை சம்புவை மட்டும் பெரிதாகக் கண்டுகொள்ளவேயில்லை. சில மாதங்களுக்கு முன் வீரப்பனின் உறவினர்களான மாதையன் குடும்பத்தாரிடமும், அர்ச்சுனன் குடும்பத்தாரிடமும் இருந்த, வீரப்பனால் கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்படும் லட்சக்கணக்கான ரூபாயைத் தமிழக அதிரடிப்படை பொலிஸார் கைப்பற்றிய போதுதான் இவனும் முதன் முதலாகப் பொலிஸாரிடம் வகையாக மாட்டியிருக்கிறான். மாதையனின் மருமகன் முனுசாமி மீது, "வீரப்பனிடம் பணம் வாங்கினார்" என்று கேஸ் போட்டு சேலம் சிறையில் தள்ளிய அதேவேளையில், சம்புவைப் பிடித்துக் கர்நாடகப் பொலிஸாரிடம் ஏனோ ஒப்படைத்து விட்டனராம் கொளத்தூர் பொலிஸார். முனுசாமி மீது போடப்பட்ட வழக்கிலும் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டிருக்கும் சம்புவின் மீது கர்நாடகாவில் உள்ள கொள்ளேகால் கோர்ட்டில் இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அங்கேயே அவன் சிறையிலும் அடைக்கப்பட்டிருக்கிறான்.

சம்புவின் தொடர்பு துண்டிக்கப்பட்ட பின் மிகவும் சிக்கலான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது காட்டுக்குள் இருக்கும் வீரப்பன் குழு. சரியான நேரத்தில் காட்டுக்குள் உணவுப் பொருள்கள் வருவதில்லை. மருந்து மாத்திரைகள் கிடைப்பதில்லை. தனக்குப் பிரதானமான தொடர்புகளில் இரண்டில் ஒன்று (இன்னொன்று வீரப்பனின் மாமனாராம்) துண்டிக்கப்பட்ட நிலையில் மிகவும் அல்லாடியிருக்கிறான் வீரப்பன். யாரைக் கடத்தினால் தனது உயிர்த் தோழனை விடுவிக்க முடியும் என்று எண்ணியிருக்கிறான். கடைசியில் ஏற்கனவே தன் திட்டத்தில் இருந்த நாகப்பாவைக் கடத்தியிருக்கிறான் என்கிறார்கள். நாகப்பா கொள்ளேகால் பகுதியைச் சார்ந்தவர். சம்பு இருப்பதும் கொள்ளேகால் சிறையில். எனவே சுலபமாகச் சம்புவை விடுவித்து விடலாம் என்பதே வீரப்பனின் திட்டமாம்!

ராஜ்குமார் கடத்தலின்போது சிறையில் உள்ள தமிழர்களை விடுவிப்பது உட்பட ஆயிரம் கோரிக்கைகளை வைத்தாலும் அண்டர் கிரவுண்டில் ஆழமாக வைத்த கோரிக்கை பணம்தான்! இப்போது வீரப்பனுக்குப் பணம் ஒரு பொருட்டே இல்லை! ஏகப்பட்ட பணம் கைவசம் இருக்கிறது. அதனால் இந்த முறை இரகசியக் கோரிக்கையாகப் பணம், பொருள் எதையும் வைக்காமல் சம்புவின் விடுதலையை மட்டுமே கேட்கிறான் வீரப்பன் என்கிறார்கள்.

வீரப்பனோடு அதிகம் தொடர்புபடுத்திப் பேசப்படாதவன் சம்பு. தவிர பத்திரிகை, மீடியாக்களிலும் இவன் பெயர் பெரிதாக அடிபட்டதில்லை. இந் நிலையில், வீரப்பனின் இந்தக் கோரிக்கையை வெளிப்படுத்தினால், விஷயம் சிக்கலாகிவிடும். இரகசியமாக விடுவிக்க முடியாமல் போய்விடலாம். எனவே செய்தியை வெளியிடத் தயங்குகிறது கர்நாடக அரசு என்கிறார்கள். சம்புவின் விடுதலையை மட்டுமே விலையாக வீரப்பன் கேட்கும் பட்சத்தில் கர்நாடக அரசுக்குப் பெரிய சிக்கல் எதுவும் இருக்காது. ஆனால், சம்புவின் மீது கொளத்தூரில் சில வழக்குகள் பதிவாகி இருக்கின்றன. அப்படி இருக்கும் பட்சத்தில், தமிழக அரசு சம்புவை வீரப்பனிடம் சேர்ப்பதில் ஏதாவது முட்டுக்கட்டை போட்டு விடாமல் என்ன செய்வது என்ற யோசனையும் கர்நாடக தரப்பில் நீடிக்கிறதாம்.

இதற்கிடையில் வீரப்பனிடமிருந்து இரண்டாவது கேசட்டும் வந்துவிட்டது. அதில் நான்கு கோரிக்கைகள் மட்டுமே வைத்திருக்கிறான் என்று மீடியாக்களுக்குச் சொல்லப்பட்டாலும் இந்தக் கேசட்டில் அவனது இரகசிய நிபந்தனை இருக்கிறது என்கிறார்கள்! இரண்டு அரசுகளும் என்ன செய்யப் போகின்றன என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ■

# பார்த்த ஞாபகம் இல்லையோ...? 15



கே. ஆர். இராமசாமி - இவர் தி.மு.க.வின் ஆரம்பகால உறுப்பினர். அதன் அரசியல் கூட்டங்களில் கனல் கக்கும் பேச்சாளர். எம்.ஜி.ஆர். போன்றவர்களுக்கு முன்பிருந்தே அக் கட்சியின் உறுதி மிக்க ஒருவராக இருந்து அறிஞர் அண்ணாவின் அன்புக்குப் பாத்திரமானவர். இவர் நடிப்பிலும், இசையிலும் வல்லவராக இருந்தபடியினால் 'நடிப்பிசைப் புலவர்' என்று பட்டம் பெற்றார். கட்சிக் கொள்கை வழிநின்று திரைப்படங்களில் நடித்த அவரின் முக்கிய படங்களாகக் கருதப்படுபவை, 'வேலைக்காரி'யும் 'சொர்க்கவாசலும்' ஆகும். இரு படங்களின் கதை, வசனம் அறிஞர் அண்ணாவினுடையதே.

'சொர்க்கவாசலுக்கு பாடல்கள் உடுமலை நாராயணகவி. இசை (காலஞ்சென்ற) சி.ஆர்.சுப்பராமன். அவருக்கு உதவி. இன்று பிரிந்து பணியாற்றும் விஸ்வநாதனும், ராமமூர்த்தியும் ஆவர். மன்னர் ஆட்சியை ஒழித்து மக்களாட்சியைத் தோற்றுவிப்பது கதையின் கரு. இதில், இராமசாமி "எங்கே சொர்க்கம்... ஆகும் நெறி எது ஆகா நெறி எது..." என்ற பாடலை உச்சஸ்தாயியில் பாடியிருப்பது பலரையும் கவர்ந்தது.

"நிலவே, நிலவே ஆடவா நீயன்புடனே ஓடி வா" என்று அன்பொழுக அவர் பாடியது கேட்பவர்களை நெகிழ வைத்தது. பின்னாளில் வெளிவந்த 'சுகம் எங்கே' என்ற படத்தில் சாவித்திரியுடன் ஜோடி சேர்ந்து நடித்தார். இதற்குக் கதை, வசனம் அமைத்தோர் ஏ. கே. வேலன், கவிஞர் கண்ணதாசன் ஆகியோர். "செந்தமிழ் நாட்டுச் சோலையிலே சிந்து பாடித்திரியும் பூங்குயிலே..." என்று அவர் ஜிக்கியுடன் பாடிய பாடலும், "கண்ணில் தோன்றும் காட்சியாவும் கண்ணா உனது காட்சியே..." என்று ஜிக்கி இராமசாமியுடன் சேர்ந்து பாடிய பாடலும் அக் காலத்து வாலிபர்களால் முணுமுணுக்கப்பட்டவை என்றால் பாருங்களேன். ■



கிருஷ்ணகுமாரி - இவர் பிரபல நடிகை சௌகார் ஜானகியின் சகோதரி. 'சிவகங்கா' என்ற படத்தில் அவர் தோன்றும் ஒரு காட்சியிது. என்றாலும் படம் வெளிவந்ததாகச் செய்தியில்லை. அப்பொழுது "பூங்கொடியோடு பூங்கொடியான புன்னகை மோகினி" என்று வர்ணிக்கப்பட்ட இவர் ஒரு சில தமிழ்ப் படங்களிலும், பல தெலுங்குப் படங்களிலும் தோன்றியுள்ளார். அவர் கதாநாயகியாக நடித்த தமிழ்ப் படம் 'புதுயுகம்'. இதில், கதாநாயகனாக 'மந்திரி குமாரி' புகழ் எஸ். ஏ. நடராஜனும் மற்றும் பொன்முடி புகழ் பி. வி. நரசிம்மபாரதி, குணச்சித்திர நடிகர் எஸ். வி. சுப்பையா ஆகியோரும் நடித்தனர். இப் படத்தில் முக்கியமான அம்சம் (காலஞ்சென்ற) ஜி. இராமநாதன் அமைத்த இசைதான். ஏ. மருதகாசி எழுதிய ஒரு பாடல் "தவறே புரிந்த பின்னாலே வருந்திப் பயனேது . . . ?". இதை ஜிக்கி பாடினார். அக் காலத்தில் ஒரு 'ஹிட்' ஆன பாடல்; கதைவசனம் எழுதியவர் கவி கா. மு. ஷெரிப். கிருஷ்ணகுமாரியினால் தமிழ்ப் படங்களில் அக்கா சௌகார் ஜானகியைப் போல் புகழ்பெற முடியாவிட்டாலும், தெலுங்குப் படங்களில் ஓரளவு நிலையான ஸ்தானத்தில் இருந்தார். ●



பிரேம்நஸீர் - மலையாளப் படவுலகில் அக் காலத்தில் திக்குரிசி,சத்யன் போன்று பெரும் பெயரும் புகழும் பெற்ற நடிகர் இவர். நூற்றுக் கணக்கான படங்களில் நடித்த பெருமை இவருக்கே உரியது. உலகில் அதிக படங்களில் கதாநாயகனாகத் தோன்றியமைக்காக கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் கிடைத்தது. இவர் நடித்து பிரபலமாக விளங்கிய தமிழில் வெளிவந்த படம் 'பசியின் கொடுமை'. இதில் திக்குரிசியும் நடித்திருந்தார். இப் பகுதியில் ஏற்கனவே குறிப்பிட்ட லலிதா, பத்மினி, ராகினி சகோதரிகளின் ஒன்றுவிட்ட சகோதரி அம்பிகாவும் இதே படத்தில் ராகினியுடன் சேர்ந்து நடனமாடியுள்ளார். 'பசியின் கொடுமை' படத்தில் இடம்பெற்ற பல பாடல்கள் மிக இனிமையானவை. சில கம்பதாசன் எழுதியவை. உதாரணமாக,

* "மோஹினியே, என் மோஹினியே என் பிரேம ராகினியே..."
* "நீ சென்று ஓதுகாற்றே நேரான காதலுடன் மேவுமவரோடு..."
* "தொல்லை தரும் வாழ்வில் ஏங்கியே நெஞ்சம் துண்டு துண்டானபின் வாழ்வதேன்..." (அண்ணல் தங்கோ இயற்றியது)

இப்பொழுது படத்தைப் பாருங்கள். அதில் காணப்படும் பெண் அதே அம்பிகாதான். இருவர் அச்சொட்டாகக் காணப்படுகிறார்கள் அல்லவா? வலது புறத்தில் காணப்படுபவர் பிரேம்நஸீர்; அடுத்தவர் அவரது சகோதரர் பிரேம்நவாஸ். இவர் நடித்த 'பரோபகாரம்' படத்திற்கான பூஜை வாஹினியில் நடைபெற்றபோது, பிரேம்நஸீர் படத்தை ஆரம்பித்து வைத்தார். இப் படம் வெளிவந்ததாகத் தகவலில்லை. "பரோபகாரம்" என்று இதற்கு முன்னரே தெலுங்கில் பிரபல நடிகர் முக்கமாலா நடித்து தமிழில் மொழியாக்கப்பட்டு வெளிவந்தது. இப்படம் ஏற்கனவே வெளிவந்ததும் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

# ஆறுதல்



→ ஐரோப்பாவைப் பாரிய வெள்ளம் தாக்குவதற்கு முன்னர் அங்கு சில மாதங்களாகக் கடும் கோடை நிலவியது. பொதுவாக குளிர் நாடுகள் என மாத்திரமே அறியப்பட்டு வந்த வட ஐரோப்பிய நாடுகள் பலவும் கடந்த ஜூன், ஜூலை மாதங்களில் அசாதாரண வெப்பத்தை எதிர்கொண்டன. ஹங்கேரியில் 100 வருடங்களின் பின்னர் ஏற்பட்ட உஷ்ணமான காலநிலை கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் காணப்பட்டது. வெப்பம் தாங்க முடியாத பயணி ஒருவர் ஹங்கேரி நாட்டின் தலைநகரான புடாபெஸ்டில் வீதியோரமாக உள்ள வித்தியாசமான நீர்க்குழாயில் நனைத்துத் தன் உடல் சூட்டைத் தணிக்க முயற்சிக்கிறார்.

# டூப் நடிகர்

↓ திரைப்படங்களில் ஆபத்தான காட்சிகளைப் பெரும்பாலும் 'டூப்' நடிகர்களைக் கொண்டுதான் படமாக்குவார்கள். இத்தகைய 'டூப்' நடிகர்கள் பற்றி இரசிகர்களுக்கு எதுவும் தெரியாது. தங்களது ஹீரோதான் இப்படிச் சுற்றிச் சுழன்று அடித்து நொருக்குகிறார் என்றே அனேகமான ரசிகர்கள் விசில் அடித்துக் கைதட்டிப் பார்க்கிறார்கள். அமெரிக்காவில் இவ்வாறு ஆபத்தான காட்சிகளில் நடிக்கும் 'டூப்' நடிகர்களுக்கெனத் தனியாக விருது வழங்கப்படுகின்றது. 2002ஆம் ஆண்டுக்கான ஹொலிவூட்டின் சிறந்த 'டூப்' நடிகரை தெரிவு செய்து விருது வழங்கும் நிகழ்ச்சியில் விருது பெற வந்த ஒரு நடிகர் உடலில் தீ வைத்துக் கொண்டு மேடைக்கு வந்தார். இதே போன்ற ஒரு ஆபத்தான காட்சியில் நடித்தமைக்காகவே அவருக்கு விருது வழங்கப்பட்டது. ஹீரோவுக்குக் கிடைக்காத கௌரவம் இந்த 'டூப்' நடிகருக்கு மேடையில் கிடைத்தது.




# வலியுடன்



↑ இவர் ஒரு வித்தியாசமான கால்பந்து இரசிகர். அண்மையில் நடந்து முடிந்த உலகக் கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டிகளை இவர் இரும்பு ஆணிகள் பதிக்கப்பட்ட பலகையின் மேல் சாய்ந்து கொண்டுதான் இரசித்தார். இங்கிலாந்து அணியின் தீவிர ஆதரவாளரான இவர் பிரேஸில் அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டிகளை 1050 ஆணிகள் பதிக்கப்பட்ட பலகையில் சாய்ந்தவாறே பார்வையிட்டார்.

அந்தப் போட்டியில் தனது நாட்டு அணி தோல்வி அடைந்தால் அதனால் ஏற்படும் வேதனையை உணராமல் இருக்கவே தான் அதனை விட அதிக வலியை உணர்ந்த வண்ணம் போட்டியைப் பார்வையிட்டதாக இவர் கூறினார். லண்டனில் யோக் வீதியில் தனது ஆணிக் கட்டிலை வைத்து அதிலிருந்தவாறே போட்டிகளை காண்கிறார்.



# பாதுகாப்பு

→ பல தசாப்தங்களுக்குப் பின்னர் ஐரோப்பாவை மிக மோசமான வெள்ளம் சமீபத்தில் தாக்கியது. இந்த வெள்ளப் பெருக்கினால் மிகவும் பாதிக்கப்பட்ட நாடு செக் குடியரசு. அந்த நாட்டில் உள்ள ஏராளமான பண்ணை நிலங்கள், வீடுகள், நகரங்கள் எனப் பலதும் நீரில் மூழ்கிப் பாரிய சேதம் ஏற்பட்டிருக்கிறது. செக் குடியரசில் உள்ள "விம்கேல்" என்ற மிருகக் காட்சிச்சாலையை வெள்ளம் சூழ்ந்தபோது நீரில் தாக்குப்பிடிக்க முடியாத ஏராளமான மிருகங்கள் பரிதாபகரமாக உயிரிழந்தன. அருகிவரும் சில மிருகங்களை மட்டும் வேறு இடங்களுக்கு மாற்றிய அதிகாரிகளினால் அனைத்து மிருகங்களையும் காப்பாற்ற முடியவில்லை. மிருகக் காட்சிச்சாலையை வெள்ளம் சூழ்ந்தபோது அங்கு அகப்பட்ட காண்டாமிருகம் ஒன்றைப் பாதுகாக்க வேறு வழியின்றி அதன் வயிற்றைத் துணியினால் கட்டி மரத்தில் தொங்க விட்டார்கள். வெள்ள நீர் காண்டாமிருகத்தின் கால்களுக்குக் கீழாக ஓடுகிறது.

# சங்கவியைத் துரத்தும் நடிகர்

கொஞ்சம் அழகாகிவிட்ட சங்கவிக்குப் புதிய தொந்தரவு ஒன்று ஆரம்பித்துள்ளது. சங்கவியின் பின்னாலேயே ஒரு நடிகர் சுற்ற ஆரம்பித்திருக்கிறாராம். (இவரும் கர்நாடகத்தைச் சேர்ந்தவர்தான்). இத்தனைக்கும் அந்தப் பால் வடியும் முகம் கொண்ட இளம் நடிகருக்கு ஏற்கனவே கல்யாணம் ஆகி அழகான பெண் குழந்தையும் இருக்கிறது.

முன்பு சிம்ரனுடன் கூடக் கொஞ்சக் காலம் சுற்றினார். ஆனால், அவர் கைகழுவி விட்டது பழைய கதை. இப்போது சங்கவி மீது அந்த காதல் தேச நடிகருக்குத் திடீர் மோகம் பிறந்து விட்டதாம்.

சங்கவிக்கு இதில் விருப்பம் இல்லையென்றாலும் கூட அவரால் அந்த நடிகரின் தொடர்தலைத் தவிர்க்க முடியவில்லையாம். இதனால் அவரைத் தடுக்காமல் விட்டு விட்டாராம். இருவரும் அடிக்கடி ஒரு குறிப்பிட்ட ஹோட்டலில் தென்படுகிறார்களாம்.

சங்கவியின் ஷூட்டிங் ஸ்பாட்டுக்கு அடிக்கடி வந்து விடுகிறாராம் அந்த நடிகர் (அவர் கையில்தான் படமே இல்லையே).

அப்ப... சீக்கிரமே இன்னொரு வீட்டிலேயும் குழப்பமா?



சரத்குமார்-தேவயாணி
படம்: சமஸ்தானம்

## செக்ஸ் குயின் இஷா!

முன்பு மும்பைப் படங்களில் ஏதாவது செக்ஸ் டான்ஸ் ஒன்று வேண்டுமானால் கூப்பிடு ஹெலனை என்பார்கள்! இப்போது அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டுவிட்டார் போலிருக்கிறது இஷாகோபிகா. 'கம்பெனி' படத்தில் அவர் ஆடிக் காட்டிய அபாரத் திறமையைப் பார்த்து விட்டு எல்லா புரடியூசர்களும் தங்கள் படத்தில் எப்படியோ ஒரு செக்ஸ் டான்ஸ் சீனைப் புகுத்தி அதில் இஷா கோபிகரையும் புகுத்தி விடுகிறார்கள்! இஷாவும் சளைக்காமல் வாய்ப்புகளை வாரிச் சுருட்டி திறமை காட்டி வருகிறார். அத்தோடு சேர்ந்து வாழ்விலும் சரியான ஒரு நபரை-பரியான ஷாவை-ப்பிடித்து விட்டார்! இருவருக்கும் ஒரு பெரிய ஒற்றுமை என்ன தெரியுமா? இஷா முதலில் இந்தர் குமார் என்பவரைக் காதலித்து நொந்தவர். பிரியான்ஷூ திருமணமாகி மனைவி மாரினிஷர்மாவைப் பிரிந்தவர். நொந்ததும் வெந்ததும் ஜோடி சேர்ந்ததில் என்ன ஆச்சரியம்?!

## காதோடு சொல்லுகி...

கலை நிகழ்ச்சிக்கா... யில் வெளிநாடு போ... திரக் கூட்டத்தில், நிக... மறுநாள் இரண்டு ந... மட்டும் திடீரெனக் ... போய்விட்டார்களா... பார்த்தபின் தெரி... இருவரும் சத்தமில்லா... காலி செய்து விட்டு ... டலில் தங்கி இருக்... 'தந்திர'மான ஜோடிக...

நான்கு எழுத்து... கொண்ட கறுப்பு கா... தினமும் ஷூட்டிங் ஸ்... போதையில்தான் இருக்... வுக்கு மீறி எல்லாம் ... தால் அதை எப்படிச் ... வது என்று பலவாறு ... குழம்பியதில் இனி கு... டிக்கும் செலவு செய்வது ... வெடுத்திருக்கிறார். சில... குட்டிகள் கிடைத்தால் ... பிடிப்பதுக்குப் பாதியி...



சிம்ரன்

## 'அந்த' மாதிரிப் பெண்ணுடன் ஹோட்டலில் சிக்கினார் ராதாரவி

நெற்றியில் எப்போதும் தனது மண்டை சைசுக்கு குங்குமம் பூசிக் கொண்டு ஆன்மீகச் சக்கரவர்த்தியாகக் காணப்படும் நடிகர் மற்றும் அ.தி.மு.க எம்.எல்.ஏ.யான ராதாரவி தூத்துக்குடியில் ஒரு லாட்ஜில் பெண்ணுடன் பிடிபட்டார்.

தூத்துக்குடிக்கு அ.தி.மு.க. பொதுக் கூட்டத்தில் பேசுவதற்காக வந்த அவர் ஹோட்டல் 'சுகத்தில்' தங்கினார். இந்த ஹோட்டலின் உரிமையாளர் ஜெகசுந்தா போயஸ் தோட்டத்துக்கு நன்கு அறிமுகமானவர். ஜெயலலிதா தூத்துக்குடி வந்தபோது அவர் தங்குவதற்காக ஹோட்டலில் 2 அறைகளைக் கட்டிக் கொடுத்தவர் இவர். இந்த விவரம் தெரியாத ராதாரவி தூத்துக்குடியில் ஒரு அழகு நிலையத்தில் பணிபுரியும் 'அந்த மாதிரி' பெண்ணை அழைத்துக் கொண்டு லாட்ஜுக்கு வந்துள்ளார்.

அவரும் இந்தப் பெண்ணும் 'குஜால்' செய்து கொண்டிருக்க அதை அறிந்த லாட்ஜ் ஊழியர்கள் ராதாரவியின் அறைக் கதவைத் தட்டினர்.

கோபத்துடன் வெளியே வந்த ராதாரவியிடம் "உடனே அந்தப் பெண்ணை வெளியில் அனுப்புங்கள்" என ஊழியர்கள் கூற அவர்களைத் திட்டி விரட்டியுள்ளார் ராதாரவி.

எப்படியோ ஹோட்டல் நிர்வாகம் ராதாரவியையும், அந்தப் பெண்ணையும் ஹோட்டலை விட்டு வெளியேற்றியிருக்கிறது.

சம்பவம் நடந்த போது ராதாரவி 'புல் மப்பில்' இருந்ததாகத் தெரிகிறது. அத்தோடு ராதாரவி அடங்கவில்லை என்பதுதான் சுவாரஸ்யம்.

மாலையில் நடந்த பொதுக் கூட்டத்தில் சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் ஹோட்டல் சுகம் மற்றும் அதன் உரிமையாளரைத் தாக்கிப் பேசியுள்ளார்.

அ.தி.மு.க. கட்சிக் கூட்டத்தில் ஏன் ஒரு ஹோட்டலைத் திட்டிப் பேசுகிறார் ராதாரவி என்று தெரியாமல் தொண்டர்கள் குழம்பி விட்டனர்.

## தீண்டித் தீண்டித் தீயை மூட்டுகிறாய்

கோல்ட் மைன் பிக்சர்ஸ் தயாரித்து வரும் படம் 'பாலா'. சமூகத்திற்கு விரோதமான செயலைச் செய்து வருபவர் அப்பா என்பதைத் தெரிந்து கொண்ட ஆர்த்தி மனவேதனை அடைகிறாள். தனது காதலனை அவசரமாக வரவழைத்து அவனிடம் தனிமையில் பேச ஒரு 'போட்'டில் நடுக்கடலுக்கு அழைத்துச் செல்கிறாள். கடலின் அமைதியான சூழலில் காதலனையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டேயிருக்கிறாள். "என்ன? அதிசயமா என்னை விழுங்கிவிடுவதுபோல் பார்த்துகிட்டேயிருக்கியே.." என்று காதலன் பாலா கேட்க, "ஏய்! நீ ரொம்ப அழகா இருக்கே" என்று ஆர்த்தி சொல்கிறாள். "ஐயோ! புதுசா ஏதாச்சும் சொல்லேன்," என்று பாலா சொல்ல "எனக்கு இன்னைக்கு பொறந்த நாள்" என்று சொல்ல, "என்ன இத போய் இவ்வளவு நிதானமா நடுக்கடலில் வந்து சொல்ற. எனக்கு பிடிக்கல" என்று சொல்லிக் கொண்டே கடலில் குதித்து விடுகிறான். அதிர்ந்துபோன ஆர்த்தி "பாலா... பாலா..." என்று கத்தி அழுது கொண்டு தவிக்க, நனைந்தவாறு பின்னே வந்து நிற்கிறான் பாலா. அவனைப் பார்த்ததும் கட்டித் தழுவிக்கொள்ள, கடலில் மூழ்கி எடுத்து வந்த முத்துச் சிப்பியைப் பிறந்த நாள் பரிசாகக் கொடுக்க...

"தீண்டி தீண்டி தீயை மூட்டுகிறாய். தூண்டி தூண்டி தேனை ஊற்றுகிறாய்..." என்ற பாடல் பாடி இருவரும் ஆடுகின்றனர்.

இதில் காதலன் பாலாவாக ஷாம், ஆர்த்தியாக மீராஜாஸ்மின், அப்பாவாக ரகுவரன் நடித்தார்கள்.



[illegible]
படம்: யுனிவர்சிட்டி

## தவறி விழுந்த விக்ரம்...

'தூள்' படத்... ஷூட்டிங்கின் போ... சண்டைக் காட்சியில் அடி உயரத்தில் இரு... விழுந்துவிட்டாராம் நடி... விக்ரம். என்னவோ ஏதோ ... பதற வேண்டாம். காயத்துக்கு முதலுதவி எடுத்துக்கொண்டு உடனடி... அதே காட்சியை முடித்து... கொடுத்தார் விக்ரம் என்பதுதான் செய்தி.

## செப்டம்பர் 05 இல் 'ரன்' ரிலீஸ்...

அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்த மாதவன்-மீரா ஜாஸ்மின் நடித்த... 'ரன்' படம் செப்டம்பர் 5 ஆம் தேதி திரைக்கு வருகிறது.

'ரன்' படம் பற்றி ஏ. எம் ரத்னம் கூறுகையில், "மாதவனைக் ... நாயகனாகப் பார்த்து வந்த மக்கள் 'ரன்' படத்தின் மூலம் வித்தியாச... மாதவனைப் பார்ப்பார்கள்" என்றார்.

## ஸ்ருதிகாவை நோக்கி கா...

பத்தாம் வகுப்பு இறுதியாண்டுத் தேர்வுக்குச் சில மாதங்... நேரம். அந்தப் பள்ளி மங்கையின் வீட்டுக் கதவு தட்டப்படுகிற... கதவு திறக்கப்பட்டதும் நடிகைக்கான புதுமுக அழைப்பு... பருவ மங்கை "எனக்குப் படிப்புத்தான் முக்கியம். நடிப்பில... கிறார். இத்தனைக்கும் அந்தப் பெண் பிரபலமான குடும்ப... வழிவந்தவர். பெயருக்கு முன்னால் தேங்காய் வைத்திருந்த... நடிப்பு ஆசை இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆ... நடந்தது ஒன்று. ஆனால் அந்த அறிமுக இயக்குனர்... அழகைப் பற்றி மகுடி வாசித்தார். குறிப்பாக அவரது ... வாசித்தார். "உங்களது கண்களுக்காகத்தான் நடிக்கக் ... ஊதினார். கடைசியில் அந்தப் பள்ளி மாணவி பூட்சிப் ... படத்தில் அறிமுகமானார். படத்திற்கான ஷூட்டிங்கின் ... என்ற விதத்தில் நெருக்கம் அதிகமானது. ஆரம்பத்தில் பு... போகப் போக பாராட்டுப் பத்திரத்தைப் பலமாக வாசித்த ... முகச்சிட்டு மகுடிக்கு மயங்கிய பாம்பாகச் சொக்கிப் போனது.

படம் ஆரம்பித்த புதிதில் "இந்தப் படம் தான் எனக்கு முத...

# சினி விசிட்

கொடுத்து விட்டு எஸ்கேப் ஆகிறார். இதற்காக நான்கு நபர்களைச் சேர்த்து வைத்திருக்கிறார். அண்மையில் ஒரு படப்பிடிப்பில் மதிய வேளையில் 'சொக்க வைக்கும்' 'சோனியா' நடிகையை.... இருவருக்கும் சோர்வு தட்டியதில் படப்பிடிப்புப் பாதியிலேயே 'பேக்அப்'.

**பி**ரகாசமான மும்பை நடிகையைத் தவிர்க்க ஆரம்பித்திருக்கிறார்கள் முன்னணி இளம் ஹீரோக்கள். படப் பிடிப்பில் தொப்பையம்மா கொடுத்த தொந்தரவுகள்தான் இந்த முடிவுக்குக் காரணமாம். இளம் நடிகர்களின் இந்த முடிவினால் பாதிக்கப்பட்ட நடிகை, தான் அந்த ஹீரோக்களின் படங்களைத் தவிர்க்க ஆரம்பித்து விட்டதாகச் சொல்ல ஆரம்பித்திருக்கிறாராம். எப்படியோ நஷ்டம் நடிகைக்குத்தான்!

**மோ**சடிப் பெண்மணியை இரண்டாம் தாரமாகக் கல்யாணம் செய்து கொண்டு முழி பிதுங்கிப் போயிருக்கும் மீடில் ஏஜ் ஹீரோவைக் காவல் துறை வலை வீசித் தேடிக் கொண்டிருக்கிறது. புதுப் படத்துக்கு லொகேஷன் பார்க்கப் போவதாகச் சொல்லிவிட்டுக் கிளம்பிய அவர், தலைமறைவாகி விட்டாராம். அவர் எப்போது ஊர் திரும்பினாலும் கையில் விலங்கு மாட்டும் முடிவோடு அவர் இருப்பிடத்தைக் கண்காணித்து வருகிறதாம் காவல் துறை. இந்த வயதில் இப்படியொரு வாழ்க்கை தேவையா அவருக்கு?

**வ**ந்த புதிதில் நடிப்பை விடப் பணம் சேர்ப்பதில் குறியாக இருந்தார் ஜோதிமயமான நடிகை. இப்போது அளவுக்கு அதிகமாக பணம் சேர்த்துவிட்டதால் இப்போது யாரிடமும் பேசுவதில்லை, ஒத்தும் போவதில்லை. அவரை வைத்துப் படம் பார்த்த தண்பிகள் இப்போது ஜெமினி நாயகியைப் பெருமையாகச் சொல்லி அவருக்குக் கால்ஷீட் பெற்றுக் கொடுத்தும், ஜோ நடிகையை 'வேஸ்ட்' என்று கூறி பொழப்புக்கு வேட்டு வைத்தும் வருகின்றனர்.

## நடிகர்கள் வயதானால்

மும்பை சினிமா வட்டாரங்களில் தமாஷாய் ஒரு பேச்சு அடிபடுகிறது. இளம் நடிகையாய் சினிமா உலகில் புகும் பெண்கள் கதாநாயகிகளாய் வலம் வருகிறார்கள். பின்பு வயது ஏற ஏற அவர்களுக்கு அக்கா ரோல், பின் அம்மா ரோல், அப்படியும் விடாப்பிடியாய் நீடித்தால் பாட்டி ரோல் கூட செய்கிறார்கள். அவர்கள் சினிமாவை விட்டுப் போவதில்லை. ஆனால் கதாநாயக நடிகர்களுக்கு வயது ஏற ஏற அவர்கள் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் அரசியல்வாதிகளாய் மாறி விடுகிறார்களாம்! அப்படி போடு!

## முகப்பில்

திவ்யா
உன்னி



## அபிராமியின் ஆசை

சிங்கப்பூர், மலேசியாவில் நடந்த 'ஸ்டார் நைட்' நிகழ்ச்சியின் போது தன் குரலை மேடையில் அரங்கேற்றிப் பெருமை அடைந்தார் நடிகை அபிராமி. ஆனாலும், அவரின் தாகம் தணியவில்லையாம். ஏதாவது ஒரு படத்தில் சொந்தக் குரலில் பாடியே தீருவது என்று அடம்பிடிக்கிறார். நிறைவேறுமா அவரின் ஆசை?

## ...தல் வலை

...ளே இடைவெளி இருந்த ...க்கு

...ப அது எனப் புரிய அந்தப் ...ல் நாட்டமில்லை" என மறுக் ...ன சித்திர நடிகரின் வாரிசு ...த நடிகரின் பேத்தி என்பதால் ...ஆனால், நினைத்தது ஒன்று ...ன் விடவில்லை. மங்கையின் ...த கண்களைப் பற்றி கவிதை ...ச் சுகித்திருக்கிறேன்" எனப் பிடில் ...ப் புகழ்ந்த ஜோடியாக 'ஸ்ரீ ... போது நடிகை இயக்குனர் ...யபடி ஆரம்பித்த இயக்குனர் ... ஆரம்பித்தார். அந்த அறி

...தையும், கடைசியுமான படம்



அரவிந்த்-அஞ்சனா
படம்: காதல் சாம்ராஜ்யம்

இயக்குனர் வற்புறுத்தியதால் ஒத்துக் கொண்டேன். இனி எனக்குப் படிப்புத்தான் முக்கியம்' என ஸ்டேட்மெண்ட் விட்ட நடிகை இப்போது இயக்குனரின் சிபாரிசின் பெயரில் இரண்டாவது படத்திலும் நடிக்கத் தொடங்கி விட்டார். கவி நிறுவனம் தயாரிக்கும் 'புகைப்படத் தொகுப்பில்' நாயகியாக நடிக்கும் இவர் இன்னும் தனது அறிமுக இயக்குனரிடம் தனிப்பட்ட முறையில் நடிப்பிற்கான சிறப்புப் பயிற்சி பயின்று வருகிறாராம். ஏற்கனவே குமார் இயக்குனர் தேவ நடிகையை இப்படிப் புகழ்ந்து பேசித்தான் கவிரேறிக் குதிக்க வைத்தார். இப்போது இந்த மலர் வாசக இயக்குனரும் காதல் வலையை வலுவாக வீசி வருகிறார். ஸ்ருதி தப்புமா?

## முகம் சுளிக்க வைத்த சிம்ரனின் போஸ்டர்

'குஷி' படம் முடிந்ததும் குஷியோடு ஆரம்பிக்கப்பட்ட படம் 'நியூ'. இதில் அஜித் நடிப்பதாகப் போஸ்டர் ஒட்டப்பட்டுப் பூஜையும் போடப்பட்டது. கடைசியில் ஏற்பட்ட கசமுசாவினால் அஜித் கழன்று கொண்டார். பின்னர் இயக்குனர் எஸ்.ஜே.சூர்யாவே ஹீரோவாக நடிப்பதாகச் செய்தி வந்தது. மீண்டும் ஒரு திருப்பம். சூர்யாவுடன் நாயகி வேஷம் கட்ட யாரும் முன்வராததால் அஜித் மீண்டும் முன்னால் சென்று நின்றார். சிந்துபாத் கதையாக நீண்டு கொண்டிருந்த இந்தக் கதையில் கடைசியாக சூர்யாவே ஹீரோவாக நடிக்கிறார் என்று விளம்பரப்படுத்தப்பட்டுப் பூஜையும் போடப்பட்டுவிட்டது. நாயகியாக பரபரப்பு நாயகி சிம்ரன். இந்தப் படத்தின் பூஜை போஸ்டரிலும் இண்டர்நேஷனல் பரபரப்பைச் செய்திருந்தார் நாயகி. அது புது நாயகனுடன் உதட்டோடு உதடு ஒட்டி 'போஸ்' கொடுத்திருந்தார். அந்த போஸ்டர்கள் சென்னை முழுவதும் ஒட்டப்பட்டன. தன்னை யாருமே நாயகனாக ஏற்றுக் கொள்ளாத ஆத்திரத்தில் நாயகன் சூர்யாவும், சமூகத்தின் மேல் மற்றும் குறிப்பிட்ட சிலர் மேல் உள்ள கோபத்தால் சிம்ரனும் அப்படிப் 'போஸ்' கொடுத்திருக்கிறார்கள் என்கிறார்கள் விவரமறிந்தவர்கள். ஆனால் அந்தப் போஸ்டர்கள் சென்னை வாசிகளை ரொம்பவே முகம் சுளிக்க வைத்தது என்பதை யாரும் மறக்க முடியாது.



விஜய்-பிரியங்கா சோப்ரா
படம்: தமிழன்

## 'ரோஜாக் கூட்டம்' புகழ் ஸ்ரீகாந்தை சூழும் தெலுங்கு தயாரிப்பாளர்கள்

ஆஸ்கார் ஃபிலிம்ஸ் நிறுவனத்துக்கு, ஸ்ரீகாந்தை வைத்து சரண் ஒரு படத்தை இயக்குகிறார் அல்லவா? அந்தப் படத்துக்கு 'ஜேஜே' என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. சரண் படங்களின் டைட்டில் சம்திங் டிஃபரண்ட்தான்!

'ரோஜாக்கூட்டம்' தெலுங்கு டப்பிங் மாபெரும் வெற்றியடைந்திருக்கிறது. அதைத் தொடர்ந்து தெலுங்கு தயாரிப்பாளர்கள் ஸ்ரீகாந்தை முற்றுகையிட ஒரே ஒரு படத்தை மட்டும் ஒப்புக் கொண்டிருக்கிறார்.

## மினி சினி

* குஷ்பூ இப்போது இரண்டாவது முறையாகக் கர்ப்பமாக இருக்கிறார். ஆனாலும் தேடி வரும் படங்களை ஒப்புக் கொண்டு வருகிறார். எட்டு மாதங்கள் வரை நடிக்கும் முடிவில் இருக்கிறார்.

* கார்த்திக் எந்நேரமும் தொப்பி அணிந்து காட்சியளிக்கிறார். காரணம் என்னவாம்? அதிகமாக மாத்திரை சாப்பிட்டதன் பக்க விளைவாக முடி உதிர ஆரம்பித்ததுதான். விக் இருக்கக் கவலை ஏன்?

* தெலுங்குக்குப் போயிருக்கும் ஸ்ரீகாந்துக்கு அங்கே என்ன பெயர் தெரியுமா? ஸ்ரீராம்! ஏன் பெயர் மாற்றம்? அங்கே ஏற்கனவே ஸ்ரீகாந்த் என்ற பெயரில் ஒரு ஹீரோ இருக்கிறார்.

* 'மின்னலே' படத்துக்குப் பின் அப்பாஸும், மாதவனும் மனஸ்தாபம் ஏற்பட்டுப் பேசாமல் இருந்தனர். அண்மையில் நடந்த கலை நிகழ்ச்சியில் இருவரும் மீண்டும் நண்பர்களாகிவிட்டனர்.

* கலைப்புலி தாணு தயாரிக்கும் படத்தில் நீண்ட காலத்துக்குப் பிறகு இணைகிறது ஜோதிகா- சூர்யா ஜோடி. 'இதன் மூலம் மீண்டும் ஒரு ரவுண்டு வருவேன்" என்கிறார் ஜோதிகா. (என்ன ரோலில் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்)

## 'பாபா'வுக்குப் பின் ரஜனி

ரஜனியும், படக்குழுவினரும் எதிர்பார்த்த அளவு 'பாபா' வெற்றி பெறவில்லை என்பதற்கான காரணம் ரசிகர்கள் எதிர்பார்த்த அளவில் 'பாபா'வில் ஒன்றுமில்லை என்பதுதான்.

படம் ரிலீஸாகி இரண்டு வாரங்களுக்குள்ளேயே டிக்கட் விலையில் சரிவு ஆரம்பித்து விட்டதாகத் தமிழகச் செய்தித்தாள்கள் குறிப்பிட்டிருந்தன. பொருளாதார ரீதியில் 'பாபா'வுக்குச் செலவு செய்யப்பட்ட தொகையை அது எட்டி விடும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் வெறுமனே பொருளாதார நோக்கத்துக்கு அப்பால் 'ரஜனி' படம் என்ற வகையில் 'பாபா'வில் என்ன ஸ்பெஷல் இருக்கிறது என்ற கேள்விக்குத்தான் யாரிடமும் சரியான பதிலில்லை.

'பாபா'வின் விநியோக உரிமையைப் பெற்ற சில முதலீட்டாளர்கள் ரஜனியைச் சந்திக்க வேண்டும் என்று கூறியதாகவும், ரஜனி அதற்கு மறுப்புத் தெரிவித்ததாகவும் கூறப்படுகின்றது.

ரஜனி தனது அடுத்த படம் குறித்து ஆலோசனை செய்து வருவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

'பாபா'வுக்குப் பின் ரஜனி என்ன செய்வார் என்று முன்பு கேட்கப்பட்ட கேள்விக்குப் பெரும்பாலும் அரசியலா, ஆன்மீகமா என்ற விவாதம்தான் பதிலாகத் தரப்பட்டு வந்தது. உண்மையில் 'பாபா'வுக்குப் பின் குறுகிய இடைவெளியில் ரஜனி இன்னொரு படத்தில் நடித்து, 'பாபா' வில் ஏற்பட்ட சில சரிவுகளை நிவர்த்தி செய்து, சாதனை ஒன்றுடன் விடைபெறவே விரும்புவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# பூ வரலாறு

மொட்டாய் தவம் கிடந்து கிடந்து
மெல்ல மலர வரம் பெற்ற
ஒரு காலை

முதுகில் வருடப்பட்டு
மெல்ல திருடப்பட்டேன்

திருடும் மென்மையில்
நானே என்னை திருட்டுக் கொடுத்தேன்.

கறுத்த ஒளிக்கீற்றுகளாம்-
திருடியவளின் கூந்தலிடை
கால் புதைக்கப்பட்டேன்

மெல்ல மெல்ல சிறைப்பட்டேன்
சிறையின் மட்டிற் சுதந்திரப்பட்டேன்

திருடியவள்
உச்ச ஆனந்தத்தில்
எனக்குக் கீழ் தன்னுடல் பணித்தாள்

உலகத்தை என் முன்
ஊர்வலத்தால் அறிவித்தாள்

சுதந்திரச் சிறையில் சிக்கிய எனக்காய்
உரசிய காற்று ஜாமீன் கேட்டது.

அவள் கொண்டையிலிருந்து
அவளையே ஆட்சி செய்த பெருமையால்

'ஏனிந்த உரசல்' என்று
தலைசாய்த்து காற்றை எதிர்த்தேன்.

ஆனால்,
ஆரம்ப ஆனந்தம்- பின்
அவஸ்தையானது

தண்டனை- என்
தலைக்கேறியது

வாசனை அறியாத
சூரியக் கதிர்கள்
என்னுள் நீர் பருகின

வர்ணம் புரியாத கரும்புகை- என்
வர்ணத்தை மறைத்தது

இப்படி
மூச்சுடையக் கிடக்கையில்
காற்றின் கருணையால்- நான்
விடுதலைப் பட்டேன்.

ஆனால்,
பழிவாங்கும் காற்று- என்னை
தார் வீதியில் அல்லவா
வீசிவிட்டது.

காலெனும் காலனெனை
மிதிக்க வருகையில்
அழக் கண்களின்றி
அறிவு கெட்டேன்

கணத்தின் அணுநகர முன்னே
என்னை
தன்கையால் அள்ளிக் கொண்டான்
ஒருவன்

எனை சூடிய
பூவையின் காதலன்- நல்ல
பூக் காதலன்

கை அணைப்பில்
பாதி உயிர் தந்தவன்
தன் கண்ணீர் சொட்டில்
மீதி உயிரும் தந்தான்

பின் பத்திரமாய்- எனை
தன் வீடு சேர்த்தான்
வீட்டில் எனக்கு
சின்னப் பட்டு விரிப்பில்
மெத்தை தந்தான்

நாட்கள் கடந்தன
நாளுக்கு நாள் நான் கண்ணீரில்
உயிர்த்தேன்
நாளுக்கு நாள் அவன் கண்ணீரில்
மரித்தான்.

மெல்ல மெல்ல- நான்
உணர்ந்து கொண்டேன்
'மானிட வர்க்கத்தில்-
காதல் வாழ்கின்றது
காதல் சின்னங்கள் வாழ்கின்றன
காதலர் மட்டும் தினம் சாகின்றார்கள்'

**இருபாலை, அரிந்தமன்.**

# காத்திருப்பு!

என்னவனே!
என் உணர்வெனும் கடலில்
அலையாக ஒன்றிப் போயிருக்கும்
என்னுயிரானவனே!
நான் உனக்கு வரையும்
ஒவ்வொரு மடலும் சிந்தையில்
எழுதும் சிற்பங்களல்ல.
என் ஆத்மாவில் உணர்வை ஓடவிடும்
உயிர் மூச்சிலிருந்து வரும்
முத்தான பவளங்கள்!

உறவென்று நீயும் கிடைத்தாய்
புதையலாக!
காதலின் சந்நிதியில்
புதுமையும் பிறந்தது!
என் வாழ்க்கையில்
எனக்குக் கிடைத்த அதிக
சந்தோஷமானதும் மறக்கமுடியாததுமான
சம்பவம் உன்னுடன் நான்
காதல் கொண்ட அந்த
பொன்னான நாள்!
தூர நின்று நீ தரும்
ஆறுதல்களில் காதலைச் சுமந்தவளாகக்
காத்திருக்கின்றேன்
காலமது கனியும் வரை
என்னவன் கரம் பற்ற!

**நிஹானா மிஷ்காத், கல்ஹின்னை.**

# எங்கே எனது ஜீவிதம்

இன்னுமென்னை
என்ன செய்யச் சொல்கிறாய்...?
வாழ்க்கையின் வேள்வியில்
எனது வாலிபத்தை
தீயிட்டுக் கொழுத்தி
ஆகாயமெங்கிலும்
வட்டமிட்டுப் பறந்தாய்...!
ஒரு வானம் பாடி போல்...

மெல்லச் சிணுங்குதலினால்...
வசீகரப் புன்னகையினால் ...என்
கனவுகளைக் களவாடி
நாளை என்ற நாளை
அவ நம்பிக்கையில்
புலரச் செய்தாய்

நிச்சயமற்ற வாழ்வுக்கு
வலுக்கட்டாயப்படுத்தினாய்!
ஒடிந்த இறக்கையோடு...!

கவலையுடன் - நீ
நீண்டகாலம்
ஜீவிதம் செய்ய முடியாது
என்பதற்காக.
எனது சந்தோசங்களையும்
புன்னகையையும்
சோகத்துடன் துவட்டிவிட்டு
பொங்கியெழும்
கண்ணீரைப் பரிசளித்தாய்....!

ஆத்திரமும் ஆவேசமும்
கன்னக் குழிக்குள்
கவிதை வாசித்தன.

சுவாசிக்கச் சிரமப்பட்டு
மரணப் போராட்டத்தோடு
எனது கடதாசிகள்...உனது
பூர்வீகம் அடைந்த போதெல்லாம்
வேதனை நிறைந்த
புலம்பலோடு
தூக்கி வீசினாய்

வாழ்வும் சாவும்
உன்னோடுதானென்ற
வாக்குறுதிகளைத் தொலைத்து
மனிதாபிமானத்தையும்
மனித நேயத்தையும்
தூக்கு மரத்தில்
தொங்க விட்டாய்

**முகம்மது ஹாரீத், அட்டாளைச்சேனை.**

# தாலிக் கொடி வாங்க வேண்டும்

ஒற்றையாய் நீயில்லை
ஓ... வென்றழுவதற்கு
பாதையதோ தெரியும் போது
பயமெதற்குப் பைங்கிளியே

காதலது வந்து விட்டால்
கடும் புயலோடு இடிவரலாம்
தளராத மனமிருந்தால்
தடைகளை நாம் உடைத்திடலாம்.

கையோடு கை சேர
என் கையதுவோ...தவமிருக்க
மெய்யது வாட... என்
மென்மையே நீ... அழலாமா?

ஆராரோ பாடிடவா... இல்லை
ஆசைதீரக் கொஞ்சிடவா
நீர்வீழ்ச்சிக் கூந்தலுக்குள்
நீந்தி மீன்பிடிக்க நான் வரவா?

சித்திரமே... என் சினேகிதமே...
அச்சமதை அவிழ்த்துவிட்டு
'இச்' சொன்று தந்தென்னை
இனிமையாக்கி வழியனுப்பு.
அவசரமாய் நான் சென்று,
தண்டு கழுத்திற்கு
தாலிக் கொடியொன்று வாங்க வேண்டும்.

**- ஒலுவிலூர், ஷிபான்.**

# தேன் கிண்ணம்

சிந்தையை...
சிறைப்பிடித்துக் கொண்டவளே...
சிநேகமாகத்தானே...
சில வார்த்தைகள் பேசச் சொன்னேன்.
வெளிச்சத்தின் விடியல்களையெல்லாம்
விரட்டி விட்டு...

இருட்டு வந்து
இதயத்தில்
இருந்து விட்டுப் போகவா
வனிதையுன்னை
வழி வகுக்கச் சொன்னேன்?

வானத்து வட்ட நிலவாய்த்தானே
வரச் சொன்னேன்
முரண்டு பிடித்ததால்
முட் பாதையிலே...
முகம் தொலைந்து போனதனால்
முகவரி தொலைந்த...
அஞ்சலாய் அவஸ்தைப் படுத்தவா

# அக்கினிப் புஸ்பங்கள்

அழைப்பு விடுத்தேன்?

தென்றலாய் வந்து
தேகமெங்கும் ஸ்பரிசிக்கவே
விருப்பமுடன் விண்ணப்பித்தேன்.
வக்கிர வார்த்தைகள் தொகுத்து
அர்ச்சனைப் பூக்களைக் கூட
அக்கினிப் புஸ்பங்களாய்
உருமாற்றிப் போவதற்கா
உயிரை கொடுத்தேன் உன்னிடம்?

வாலிப தோட்டத்தில்
காதல் குதிரைக்கு
கடிவாளம் கட்டத்தான்- உனை
களமிறங்கச் சொன்னேன்.
கனவுகளை எல்லாம்
கசக்கி காயப்படுத்திவிட்டு
நிஜங்களை மட்டும்
நிராகரித்துக் கொண்டதேன்?.

வந்து போகும்
வானவில் உணர்ச்சிகளாய்- உனை
வரச் சொல்லவில்லை
வானமாய் என்னுடனே...
வாழ்க்கைப் படத்தான்
வரச் சொல்கிறேன்.

**எஸ்.மனோஹரன், ஸ்ரீபாத கல்விக் கலாசாலை.**

# பேனா நண்பர்கள்



பெயர்: க.ஜீவானந்தன்
வயது: --
முகவரி:
இல. 01, 1 ம் ஒழுங்கை,
ஆனந்தபுரி,
திருகோணமலை.
பொழுது போக்கு:
பத்திரிகை, ஓவியம்.



பெயர்:
நா.பி. ஸிஃபிலி
வயது: 22
முகவரி:
பிரதான வீதி,
மூதூர்-01.
பொழுது போக்கு:
பத்திரிகை, ரி.வி.



பெயர்:
இ.குமார்
வயது: --
முகவரி:
த.பெ.இ. 12828,
டோகா, கட்டார்.
பொழுது போக்கு:
பத்திரிகை வாசித்தல்,
தொலைக்காட்சி.

# நினைத்து, நினைத்து சிரிக்க

மூன்று பேர் எமனுடைய தீர்ப்புக்காகக் காத்திருந்தார்கள். சொர்க்கத்துக்கா நரகத்துக்கா என்று தீர்மானம் ஆகிற இடம்.

முதல் ஆசாமியை அழைத்தார் எமன். அவன் கல்யாணமாகாத பிரமச்சாரி. "இவன் ஒரு தந்திரசாலி. பூலோகத்தில் எந்தக் கஷ்டமும் அனுபவிக்காமல் இங்கு வந்து விட்டான். இவனை நரகத்தில் போடு" என்று உத்தரவிட்டார் எமன். அடுத்த ஆசாமி கல்யாணம் செய்து பிள்ளை குட்டிகள் பெற்றுச் சிரமப்பட்டு நொந்த சம்சாரி.

அவனைப் பார்த்து அனுதாபத்துடன் "பாவம் இவன் பூமியில் குடும்பத்தோடு ரொம்பவும் சிரமப்பட்டவன். அவன் இங்கேயாவது சிரமம் நீங்கி சந்தோஷமாக இருக்கட்டும். இவனைச் சொர்க்கத்தில் சேர்" என்றார் எமன். இதைக் கேட்டு அடுத்தாற் போல் நின்ற ஆசாமிக்கு ஒரு உற்சாகம். அவர் இரண்டு பெண்சாதி கட்டி நிறையத் துன்பம் அனுபவித்தவர். "நமக்கு சொர்க்கத்திலேயே 'ஸ்பெஷல் கிளாஸ்' கிடைக்கும்"என்று உற்சாகத்துடன் எமன் முன்னால் போய் நின்றார்.

எமன் அவன் மீது சீறி விழுந்து, "அடே முட்டாள்! ஒரு தடவை கல்யாணம் செய்து கொண்டு கஷ்டப்பட்ட பிறகும் புத்தி இல்லாமல் இரண்டாம் முறையும் கல்யாணம் செய்திருக்கிறியே. உன்னையெல்லாம் தண்டிக்க இங்கே இடமே இல்லை. நரகலோகம் கூடப் போதாது. நீ மறுபடியும் பூலோகத்துக்குப் போய் அந்த இரண்டு சம்சாரத்துடன் கூடவே குடும்பம் நடத்து" என்று விரட்டி விட்டாராம்.

எழுதப் படிக்கத் தெரியாத ஒரு சர்தார்ஜீ, தனது நண்பனிடம் போய், "நண்பா... எனக்கு ஒரு வெள்ளைத்தாள் வேண்டும்" என்று கேட்டார்.

"எதற்கு ?" என்று கேட்டான் நண்பன். " என் காதலிக்கு நான் காதல் கடிதம் எழுத வேண்டும்" என்றார் சர்தார்ஜீ.

"உனக்குத்தான் எழுதப் படிக்கத் தெரியாதே?" என்று நண்பன் கேட்க, அதற்கு நம்ம ஜீ, "அதனால் என்ன? என் காதலிக்கும் எழுதப் படிக்கத் தெரியாதே" என்று சொன்னாராம்.

ஒரு சிறந்த பேச்சாளியிடம், "கல்லூரிச் சொற்பொழிவாளருக்கும், (புரொபஸர்) மேடைச் சொற்பொழிவாளருக்கும் என்ன வேறுபாடு?" என்று கேட்டாங்க. அதுக்கு அவர் சொன்ன பதில், "மற்றவர்கள் தூங்கும் போது பேசுகிறவர் கல்லூரிப் பேராசிரியர். தூக்கத்தில் பேசுபவர் மேடைப் பேச்சாளி"

ஒருத்தர் "உடம்பக்குச் சுகமில்லை" என்று டாக்டரிடம் போனார். டாக்டர் கேட்ட 'பீஸைக்' கொடுத்துவிட்டு மருந்துச் சீட்டை வாங்கி வந்தார்.

மருந்துச் சீட்டை, மருந்துக் கடையில் கொண்டு போய்க் காட்டி மருந்தும் வாங்கி வந்தார்.

ஆனா, ஏனோ மருந்தைச் சாப்பிடாமல் மேஜையில் போட்டு வைத்தார்.

இதைப் பார்த்த நண்பர் கேட்டார்.

"ஏன் சார், வீண் செலவுதானே எதற்காக டாக்டரிடம்,போய் பணம் செலவு பண்ணினீங்க?"

"டாக்டர் வாழணும் இல்லையா?"

"அப்புறம் ஏன் மருந்து வாங்கினீங்க?"

"மருந்துக் கடைக்காரன் வாழணும் இல்லையா?"


"சரி வாங்கின மருந்தை ஏன் சாப்பிடாம வச்சுட்டீங்க?"

"நான் வாழணும் இல்லையா?"

**கவிதை நெஞ்சங்களுக்கு!**

இவ்வாரச் சிறப்புக் கவிதைகளாக தமிழ்நாட்டுக் கவிஞர்கள் இருவரின் கவிதைகளை இங்கு தருகிறோம்.

# சிறப்புக் கவிதை



## பயப்படுகிறார்கள் கண்களிடம்

கவனி
கண்களைக் கவனி.
இரக்கப் படாதே;
சோர்வடையாதே;

என்ன நினைப்பார்களோ
என்று தலை தாழ்த்தாதே.
கண்களைக் கவனி.

எத்தனை முறைதான்
தங்களிடமிருந்து
பிடுங்கிப் பிடுங்கி
எறிவார்களென்று
பார்ப்போம்.

இமையாது
கழுத்தைத் திருப்பாது
கரு விழி மையத்தில்
கதிர்களைப் பாய்ச்சு,

ஆண்களோ
பெண்களோ
அந்நியரோ
நம்மவரோ
முகங்களா முக்கியம்?

கண்களைக் கவ்வு.
பயப்படுகிறார்கள்
கண்களிடம்.

தம் சொந்தக் கண்களுக்கே
பயப்படுகிறார்கள்.

பார்வைகள் எங்கெங்கோ...
பேச்சுகள் எதனெதனிடமோ.

பொய் தியானங்களின்
இமைத் திரைகள்
தப்பித் தவறி
மோதும் பார்வைகள்
சிதறி ஒடுங்கி
புகலாய் ஓர் அந்நியம் தேடும்.

நம்பிக்கையின்மையா?
பிடிபட்டு விடும்
தலைமறை வாழ்வச்சமா?

பதிலுக்கு
தம்மைப்
பார்க்காததை மட்டும்
பார்ப்பதன் திட்டம் என்ன?

அழகானவை
என் கண்களைப் போலவே
உன் கண்களும்.

குரூரங்கள்
இனிமைகள்
பரிதாபங்கள்
சாகசங்கள்
ஒன்றாய் கலங்கிவிட்ட அழகு
அதன் சின்னப் பள்ளங்களுள்
அருவியாய் விழும்
பிரபஞ்சம்.
பள்ளங்கள் வழிய
திக்கெங்கும் கிளைக்கும் நதிகள்.

ஒரு மிடறு அள்ளிப் பருகத்
துணிவற்ற
தாகத்தால் வெறியண்ட
விலங்குகளின் இடப் பெயர்ச்சியோ
முடிவில்லாமல்,

இங்கே வா
என் விருந்தாளியே!

ஒரு வார்த்தை பேச வேண்டாம்.
எல்லா அறிமுகங்களும்
எதையும் சொல்லாதவை.

குறுகுறுப்பின்றி வெறுமனே
பார்த்துக் கொண்டிருப்போம்
சுடர்கள் பொருத.

கண்கள் எரிந்து, கசிந்து,
கண்ணீர் மல்கும் வரை,
நம் புராதன மொழி,
நம் புராதன இதயம்,
மீளும் வரை.

**- மனுஷ்யபுத்திரன்**

## ஆகா! வாழ்க்கை!

ஆசைப்பட்டுத்
தின்ன முனைந்த
புழுவில்
தன்னைத் தின்னும் மரணம்
காத்திருக்கிறது என்பதை
அறியுமா மீன்?

பறிக்கப்படும் வரை
பிரேதத்துக்குத்தான் சாந்தப்படுகிறோம்
என்பதை
அறியுமா பூ?

மலைவாயில் அல்லது
அலைவாயில்
விழப் போகிறோம் என்பதை
அறியுமா இந்த நிலா?

அலையில், மலையில்
உதிக்கிறது நிலா!
நதியில் கடலில்
நீந்துகிறது மீன்!
செடியில் மரத்தில்
சிரிக்கிறது பூ!

**-ரவீந்திர பாரதி**

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## வேலைக்குப் போகிற அம்மாவா நீங்கள்?


**வே**லைக்குப் போகிற எல்லா அம்மாக்களுக்கும் ஒரு குற்ற உணர்வு உண்டு.

ஹவுஸ் வைஃப் மாதிரிக் குழந்தைகளைக் கூட இருந்து கவனிக்க முடியவில்லையே என்ற ஏக்கம் அது. குழந்தைக்காக வேலையை விட முடியாத தர்மசங்கடம், குடும்ப சூழ்நிலை எத்தனையோ பெண்களுக்கு. அவர்களுக்கெல்லாம் ஒரு விஷயம்...

குழந்தைகளுடன் நீங்கள் செலவிடுகிற நேரம் எவ்வளவு மணித்துளிகள் என்பதல்ல முக்கியம். எப்படிச் செலவழிக்கிறீர்கள் என்பதுதான் முக்கியம். உங்களுக்காகத்தான் பின் வரும் விஷயங்கள்...

★ இருபத்திநான்கு மணி நேரமும் அம்மாவின் அருகாமையிலும், அரவணைப்பிலும் வளரும் குழந்தைகள், அது இல்லாமல், அதாவது வேலைக்குப் போகும் பெண்களின் குழந்தைகளைவிட புத்திசாலித்தனத்திலோ, வேறு விஷயங்களிலோ உயர்ந்து போய் விடவில்லை. வளரும் சூழல் வேறு என்றாலும், இருவரும் ஒரே மாதிரியான அறிவுத் திறனோடுதான் இருக்கிறார்கள் என்கிறது ஒரு ஆராய்ச்சி. அதனால் வேலைக்குப் போகும் அம்மாக்களே! முதலில் இந்தக் குற்ற உணர்வைத் தவிருங்கள்.

★ குறிப்பிட்ட வயதாகும் வரை நீங்கள் வேலைக்குச் செல்லும் போது குழந்தைகள் அழும். பெரும்பாலான அம்மாக்கள் குழந்தைகளை ஏமாற்றிவிட்டு ஓடுவார்கள். அது தவறு. கிளம்புவதற்குச் சில நிமிடங்கள் முன்பாகக் குழந்தையிடம் அன்பாக, ஆசையாகச் சில வார்த்தைகள் பேசுங்கள், கொஞ்சுங்கள், குழந்தையைத் தூங்க வைத்துவிட்டோ, ஒளிந்த படியோ வேலைக்குப் போகாதீர்கள். அது நீங்கள் அவர்களை ஏமாற்றுகிறீர்



கள் என்ற எண்ணத்தை ஏற்படுத்திவிடும்.

★ வேலையிடத்தில் நீங்கள் பிஸியாக இருக்கலாம். அதற்காக என்றாவது ஒரு நாள் குழந்தைகள் உங்கள் அலுவலகத்துக்கு வருவதையோ, அடிக்கடி உங்களுடன் ஃபோன் பேசுவதையோ தடுக்காதீர்கள். அம்மாவின் அலுவலகம் போவதும், அம்மாவுடன் ஃபோன் பேசுவதும் அவர்களைப் பொறுத்த வரை மகிழ்ச்சியான விஷயங்கள்.

★ குழந்தைகளுக்கு நேரம் ஒதுக்குவது உங்கள் கைகளில்தான் உள்ளது. வேலைக்குக் கிளம்பும் முன்பும், வேலையிலிருந்து திரும்பிய பிறகும் குழந்தைகளுக்கெனச் சில மணி நேரத்தை ஒதுக்கி விடுங்கள். நீங்கள் வந்ததும் உங்களிடம் சொல்லக் குழந்தைகள் நிறைய விஷயங்களை வைத்திருக்கும். அவற்றைப் பொறுமையாகக் கேளுங்கள். அந்த நேரத்திலும் அலுவலக ஃபைல்களைப் பார்ப்பது, அலுவலக நண்பர்களோடு அரட்டையடிப்பது போன்றவை வேண்டாம் பிளீஸ்...

★ உங்களுக்கு வேலையிடத்தில் உள்ள வேலைப் பளு காரணமாக வீட்டுக்கு வந்ததும் உட்கார மாட்டோமா என்று தோன்றும். ஆனால் உங்கள் பிள்ளைகளுக்கு அம்மா கையால் சாப்பாடு சாப்பிட ஏக்கமாக இருக்கும். அந்த விஷயத்தில் குழந்தைகளை ஏமாற்றாதீர்கள். ஒருவேளை உங்களால் சமைக்க முடியாவிட்டாலும் குழந்தைகளை வெளியே சாப்பிட அழைத்துச் செல்லுங்கள். சேர்ந்து சாப்பிடுங்கள்.

★ குழந்தைகளுக்குச் சின்னச் சின்ன வேலைகளைப் பகிர்ந்து கொடுங்கள்.

★ அது அவர்களுக்குப் பிடித்ததாகவும் இருக்க வேண்டும். உங்களுக்கும் வீட்டு வேலைகளைப் பற்றி டென்ஷன் குறையும். குழந்தைகளும் பிஸியாக இருப்பார்கள்.

★ நீங்கள் வேலைக்குச் செல்வதால் குழந்தைகளுக்குக் கிடைக்கும் சாதகங்களை எடுத்துச் சொல்லுங்கள். அவர்கள் ஆசைப்படுவதை வாங்கிக் கொடுத்து மகிழ்வியுங்கள்.

★ விடுமுறை நாட்களை உங்களது ஓய்வுக்காக ஒதுக்காதீர்கள். அன்றைய பொழுது முழுவதும் உங்கள் பிள்ளைகளுக்கு மட்டுமே என்று தீர்மானம் செய்து கொள்ளுங்கள். அவர்களது தேவைகளைக் கவனிப்பது, சாப்பாடு கொடுப்பது, வெளியே கூட்டிச் செல்வது என அந்த நாட்களை அவர்களது நாட்களாக மாற்றுங்கள்.

★ குழந்தைகளுக்கு ஏதேனும் ஒரு கலையிலோ, விளையாட்டிலோ ஆர்வத்தை ஏற்படுத்துங்கள். முடிந்தால் முறைப்படி அதற்கான வகுப்புகளில் அவர்களைச் சேர்த்து விடுங்கள். நீங்கள் இல்லாத நேரத்தை அவர்கள் அந்த விஷயங்களுக்குச் செலவிட முடியும். உங்கள் அருகாமை இல்லாத குறையும் அவர்களுக்கு அவ்வளவாகத் தெரியாது.

★ வருடத்துக்கு ஒரு முறையாவது குழந்தைகளை வெளியூர் எங்கேயாவது அழைத்துச் செல்லுங்கள்.

★ ஷாப்பிங் செல்லும் போது குழந்தைகளை அழைத்துச் செல்வதைச் சுமையாக நினைக்காமல், அவர்களையும் அழைத்துச் செல்லுங்கள்.

★ உங்கள் அலுவலகத்தில் நடக்கும் விழாக்களுக்கு, அலுவலக நண்பர்கள் வீட்டு விசேஷங்களுக்குக் குழந்தைகளை அழைத்துச் செல்லுங்கள்.




செல்வாஸின் 7

சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place (Near H.N.B)
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்** Ai

பெயர்:.........................
முகவரி:.........................
.........................
தொழில்:.........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 14- 09-2002

அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

**இந்த வாரம் யாருக்கு சல்வார்?**
**நீர்கொழும்பு வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்

ப. ராதிகா
8/1, நம்ளின் மாவத்தை, குடாப்பாடு, நீர்கொழும்பு.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


## இருதயத்தை மாற்றிக்கொண்டு பள்ளி சென்ற மாணவி

**பி**ரிட்டனைச் சேர்ந்த 9 வயதுச் சிறுமியான அபெய் கடுமையான இருதய நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார்.

இவரது பிஞ்சு இருதயத்தை அபூர்வமான ஒருவகைத் தொற்று தாக்கியிருந்தது. கடந்த மார்ச் மாதம் உடல் நிலை மோசமானதால் மருத்துவமனையில் அனும்திக்கப்பட்டார். அங்கு சுமார் 3 வார காலம் உயிர் காக்கும் கருவியின் உதவியுடன் சிறுமிக்குச் சிகிச்சையளிக்கப்பட்டது. பின்னர் இந்தச் சிறுமிக்கு இருதய மாற்றுச் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. பூரண குணமடைந்த அபெய் சில மாதகால இடைவெளியின் பின்னர் பாடசாலை சென்று, தான் கல்வி கற்ற அதே வகுப்பில் இணைந்து கொண்டார். இவருக்குச் சக மாணவர்களால் ஆரவாரமான வரவேற்பளிக்கப்பட்டது. பொதுவாக இருதய மாற்றுச் சத்திர சிகிச்சை செய்து கொண்டவர்களால் பல மாதங்களுக்குப் பின்னரே இயல்பு நிலைக்குத் திரும்ப முடியும். அபெய் இருதயத்தை மாற்றிக்கொண்டு அதே வகுப்பில் இணைந்து கொண்டார்.

இருதய மாற்றுச் சத்திர சிகிச்சை செய்து கொண்டவர்களில் மிகச் சிலரே மாற்று இருதயத்துடன் தமது வழமையான தொழிலை, கல்வியைத் தொடர்கிறார்கள். இத்தகைய சிகிச்சையின் பின்னர் பெரும்பாலும் ஓய்வில் இருக்குமாறே ஆலோசனை வழங்கப்படுவதுண்டு.

## ஏட்டிக்குப் போட்டி

உலகப் புகழ்பெற்ற டெனிஸ் வீரர் அன்ரோ அகாசியை முதலில் மணந்தவர் பிரபல ஹொலிவுட் நடிகை ப்ருக் ஷீல்ட். இவர் அகாசியுடன் வாழ்ந்த காலத்தில் குழந்தை பெற்றுக்கொள்ளவில்லை. ப்ருக் ஷீல்ட் நடிப்பில் பிஸியாக இருந்ததாலும், அன்ரோ அகாசி டெனிஸ் விளையாட்டில் பிஸியாக இருந்ததாலும் குழந்தை பெற்றுக்கொள்வதைத் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்து இறுதியில் விவாகரத்துப் பெற்றுப் பிரிந்தனர்.

அகாசியை விட்டுப் பிரிந்த பின்னர் கிரீஸ் ஷென்ஸி என்ற திரைப்படக் கதாசிரியரை மணந்தார் ப்ருக் ஷீல்ட். டெனிஸ் வீராங்கனை ஸ்டெபி கிராபை மணமுடித்தார் அகாசி.

தனது இரண்டாவது கணவரான கிரீஸ் ஷென்ஸியுடனும் குழந்தை பெற்றுக் கொள்ளும் ஐடியா இல்லாமலே வாழ்ந்தார் ப்ருக் ஷீல்ட்.

ஆனால், ஸ்டெபி கிராபுக்கும், அகாசிக்கும் சமீபத்தில் அழகான ஆண் குழந்தை ஒன்று பிறந்தது.



தனது முன்னாள் கணவனுக்குப் பிள்ளை பிறந்திருப்பதை அறிந்த ப்ருக் ஷீல்ட் இனியும் குழந்தை பெற்றுக் கொள்ளும் எண்ணத்தைத் தள்ளி வைப்பதில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்.

நடிப்பைச் சிலகாலம் ஒதுக்கிவிட்டுக் குழந்தை ஒன்றைப் பெற்றுக் கொள்ளப் போவதாகக் கூறும் ப்ருக் ஷீல்ட் மகப்பேறு, குழந்தை வளர்ப்புத் தொடர்பான புத்தகங்களைப் படித்து வருகிறார்.

## அழகியின் மடியில் சாவது இறுதி ஆசை!

**ஜெ**ர்மனியின் பெர்லின் நகரில் வசிக்கும் ரால்ப் ஈடன் என்ற தள்ளாத வயது பாட்டனார் தீவிர உல்லாசப் பிரியர். ஏராளமான சொத்துக்களைச் சேர்த்த இவரின் ஒரே பொழுது போக்கு விதம் விதமான பெண்களுடன் கட்டிலைப் பகிர்ந்து கொள்வதுதான். வாழ்வின் அந்திம காலத்திலும் மனிதருக்குப் புத்தி வந்ததாகத் தெரியவில்லை. இளமைக் காலத்து அதே ஆசை, இந்தத் தள்ளாத வயதிலும் மனிதரைத் துள்ள வைத்திருக்கிறது.

ரால்ப் ஈடன் தனது கடைசி ஆசையை வெளியிட்டிருக்கிறார். அதன்படி அவர் ஒரு அழகியின் மடியில் சாய்ந்து கொண்டு உயிர் விட வேண்டும். தனது மரணம் நிகழும் நாளில் 30 வயதுக்குக் குறைந்த ஒரு அழகியுடன் உல்லாசம் அனுபவித்துவிட்டு, அவளது மடியிலேயே உயிர் பிரிவதை விரும்புகிறாராம்.தன் கடைசி ஆசையை நிறைவேற்றி வைக்க உதவும் அழகிக்கு ஒரு கோடியே 22 லட்சம் மார்க் பெறுமதியான சொத்துக்களை வழங்கப் போவதாக உறுதியளித்துள்ளார்.

இந்த நபரின் இறுதி ஆசையை நிறைவேற்ற இப்போதே பல அழகிகள் போட்டி போடுகிறார்கள்.

## ஆயிரக் கணக்கானோர் கலந்து கொண்ட குரங்கின் இறுதி ஊர்வலம்

**இ**ந்தியாவின் ஆந்திர பிரதேசத்தில் உள்ள திம்மாகனிப்பிலி என்ற இடத்தில் அமைந்திருக்கும் அநுமார் கோவில் ஒன்றுக்கு அருகில் உள்ள காட்டிலிருந்து வந்த குரங்கிற்கு ராஜயோகம் அடித்தது.

சில காலத்திற்கு முன்னர் இந்த அநுமார் கோவிலுக்கு வந்த குரங்கை பூசகர் பிடித்துக் கூண்டுக்குள் அடைத்து வைத்து விட்டார். ஊர் மக்கள் திரண்டு வந்து இது அநுமாரின் ஆத்மா எனக்கூறி வழிபட ஆரம்பித்தனர். தினசரி ஆயிரம் பேர்வரை இந்தக் கோவிலுக்கு வந்து, வயதுபோன குரங்கிற்கு உணவூட்டிப் பூஜை செய்து வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

கூண்டுக்குள் அடைபட்டுக் கிடந்தாலும் அதிகபட்ச மக்கள் நடமாட்டம் காரணமாகவும் விரைவிலேயே நோய் வாய்ப்பட்டது குரங்கு.

இதற்கிடையில் மிருகப் பாதுகாப்பு அமைப்பான கருணைச் சங்கம் என்ற அமைப்ப இந்தக் குரங்கை விடுவிக்குமாறு நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தது. நீதிமன்றத் தீர்ப்பின்படி அருகில் உள்ள மிருக வைத்திய நிலையத்தில் குரங்கை ஒப்படைக்குமாறு கூறப்பட்டது.


ஆனால், கோவிலை விட்டுக் குரங்கை வெளியில் கொண்டு செல்வதையோ, மருத்துவ சிகிச்சை வழங்கப்படுவதையோ ஊர் மக்கள் விரும்பவில்லை. கருணைச் சங்க அதிகாரிகள் தாக்கப்பட்டனர்.

இறுதியில் கடந்த சனியன்று இந்தக் குரங்கு உயிரிழந்தது. இதன் மரணச் சடங்குகள் இந்து மதச் சம்பிரதாயங்களின் அடிப்படையில் நடைபெற்றன. இதில் சுமார் 5 ஆயிரம் பேர்வரை கலந்து கொண்டனர்.



அன்ன மூட்டிய தெய்வ மணிக்கையின்
ஆணை காட்டில் அனலை விழுங்குவோம்;
கன்னத் தேமுத்தம் கொண்டு களிப்பினும்
கையைத் தள்ளும்பொற் கைகளைப்
பாடுவோம்!

சுப்பிரமணிய பாரதியார்-



## பாப்பா முரசு சிறுகதை

# ‘ஆணவத்தால் அழிவு’

பட்டுத் துணிகளை விற்பனை செய்து வந்தான் சிங்கலால் என்ற வியாபாரி. உலகில் உள்ள அத்தனை விதப் பட்டு துணிகளும் சிங்கலாலிடம் இருக்கும். எனவே பட்டு வியாபார உலகில் சிங்கலால் பெயர் முன்னணியில் இருந்தது.

இவனுக்கு மனைவியும் ஒரு மகளும் இருந்தனர். மனைவி மந்தாகினி, மகள் பெயர் சம்பா. சம்பா அழகியாக இருந்தாள். அத்துடன் கர்வமும் அதிகம்.

சிங்கலாலும் மனைவி மந்தாகினியும் ஒரே மகள் என்பதால் அதிக செல்லம் கொடுத்து வளர்த்ததும் கர்வத்துக்கு ஒரு காரணமாக அமைந்தது. அவள் எது வேண்டும் என்றாலும் உடனே கிடைத்தாக வேண்டும். இல்லை என்றால் வீட்டில் பெரும் ரகளையே செய்து விடுவாள்.

எனவே சம்பா எதைக் கேட்டாலும் உடனே பெற்றுக் கொடுப்பான் தந்தை சிங்கலால். கணவனின் இந்தச் செயலைக் கண்டு மனைவி மந்தாகினிக்கு வருத்தம் தான். "மகளுக்கு இவ்வளவு செல்லம் தேவையில்லை!" என்றாள். சம்பா, தன்னை உலக அழகி என்றே நினைத்து வந்தாள். தோழிகள், தன் அழகைப் புகழ்ந்து பேச வேண்டும் என்று விரும்பினாள். புகழாதவர்களைத் துன்புறுத்துவாள் சம்பா. எனவே தோழிகளுக்குச் சம்பாவைப் பார்த்தாலே வெறுப்புத்தான்.

அவள் தன்னை ராஜகுமாரி என்றே நினைத்தாள். எப்படியாவது இந்த நாட்டு ராஜகுமாரி ஆக வேண்டும் என்று கூறிக் கொண்டே இருப்பாள்.

பக்கத்துக் காட்டில் ஒரு மந்திரக் கிழவி இருந்தாள். அவளைப் பற்றி கேள்விப் பட்ட சம்பா காட்டுக்குப் புறப்பட்டாள். மந்திரக் கிழவியைக் கண்டு பயந்து போனாள் சம்பா. கிழவி சிரித்த போது மேலும் பயப்பட்டாள் சம்பா.

"நீ எதற்காக வந்தாய்?" கிழவியின் குரல் இடி இடிப்பது போல் ஒலித்தது. சம்பாவின் பயம் அதிகரித்தது. அவள் பேச முடியாமல் தடுமாறினாள்.

அதைக் கண்ட கிழவி சிரித்தாள். சிரிப்பும் பயங்கரமாக இருந்தது. "பயப் படாமல் கூறு. எதற்காக வந்தாய்?" சம்பா, தான் வந்ததன் நோக்கம் பற்றிக் கூறத் தயாரானாள்.

"பாட்டி! எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும். நான் இந்த நாட்டு ராஜகுமாரி ஆக வேண்டும். அதற்காக நீங்க வரம் தர வேண்டும்" என்றாள் அவள். அதைக் கேட்ட மந்திரக் கிழவி யோசித்தாள். "நீ நினைப்பது தவறு, என்னால் வரம் தர முடியாது. சாபம் இடத்தான் முடியும். தேவை என்றால் உனக்குச் சில மந்திர வித்தைகளைக் கற்றுத் தருகிறேன்" என்றாள் மந்திரக் கிழவி.

"நான் சொல்லும் மந்திரத்தை அப்படியே சொன்னால் நீ எது நினைத்தாலும் அப்படியே நடக்கும்" என்று கிழவி சொன்ன போது சம்பா பெரும் மகிழ்ச்சி அடைந்தாள். அவள் நேராக அரண்மனைக்கு ஓடினாள். வித்தை கற்றுத் தந்த தனக்கு ஒரு நன்றி கூடக் கூறாமல் போனாளே சம்பா? என்று கவலைப்பட்டாள் மந்திரக் கிழவி. "இப்படிப் பட்ட கர்வமும் பேராசையும் கொண்ட ஒருத்தியை இதுவரை பார்த்தது இல்லை!" என்று நினைத்தாள் மந்திரக் கிழவி.

அரண்மனையை நோக்கி ஓடிய சம்பாவைக் காவலர்கள் தடுத்து நிறுத்தினர். ஆத்திரம் அடைந்த சம்பா "மடப் பயல்களே, நீங்க எருமைகள் ஆகட்டும்" என்று சாபமிட்டாள் காவலர்கள் எருமைகள் ஆனார்கள்.

அவள் உள்ளே பாய்ந்தாள். மன்னன் முன் தோன்றினாள். " யார் நீ?" மன்னன் கேட்டான். அவள் சிரித்தாள். மந்திரக் கிழவியின் அதே சிரிப்பு! " நான் இந்த நாட்டு ராஜகுமாரி" என்றாள் அவள்.

அதைக் கேட்ட அரசனுக்கு ஆத்திரம் வந்தது. "யாரங்கே, இவளைக் கட்டிச் சிறையில் போடு!" என்று கட்டளையிட்டான். சம்பா மேலும் சிரித்தாள் பைத்தியக்காரத்தனமாக.

அவளைப் பிடிப்பதற்காக ஓடிவந்த சிப்பாய்களைத் தவளைகளாக்கினாள் சம்பா. அதைக் கண்டு பயந்து போனான் அரசன்." மன்னா! உடனே உன் மகன் என்னை மணக்க வேண்டும்" என்று கட்டளையிட்டாள் சம்பா.

இவளை எதிர்த்தால் ஆபத்துத்தான் என்று உணர்ந்த அரசன் உடனே திருமணத்துக்கான ஏற்பாடுகள் செய்தான். நினைத்தபடியே சம்பா இளவரசி ஆனாள். அவள் பெற்றோர், "மகள் எங்கு போனாள்!" என்று அறியாமல் தவித்தனர். பல இடங்களில் தேடினான் சிங்கலால். ஆனால், அவள் அகப்படவில்லை.

சிங்கலால், காணாமல் போன சம்பாவுக்காக ஒரு பட்டுச் சட்டை தைத்து வைத்திருந்தான். ஆனால், அவளைப் பற்றிய எந்தத் தகவலும் இல்லை. அவன் எங்கு சென்றாலும் மகளுக்கான பட்டுச் சட்டையுடன்தான் போவான். அன்று விதவிதமான பட்டுச் சட்டைகளுடன் அரண்மனைக்குப் புறப்பட்டான் சிங்கலால்.

அரண்மனைக்குச் சென்ற சிங்கலால் இளவரசியாக இருப்பது தன் மகள் சம்பா என்ற உண்மையை அறியவில்லை. அவளும், மகளை இழந்த சோகத்தில் உருமாறிப் போயிருந்த தந்தையை அடையாளம் காணத் தவறிவிட்டாள்.

சிங்கலால் பட்டுச் சட்டையை ஒவ்வொன்றாக இளவரசிக்குக் காட்டினான். பலமணிநேரம் பார்த்தும் அவளுக்கு ஒரு சட்டை கூடப் பிடிக்கவில்லை. அவளுக்கு ஆத்திரம் வந்தது. "யோவ் வேறு துணி கிடையாதா?" என்றாள் இளவரசியாக இருந்த சம்பா.

அதைக் கேட்ட சிங்கலால் சற்றுத் தயங்கினான். "யோவ் என்னய்யா தயக்கம்? நான் கேட்கிறேன் இருக்கா, இல்லையா?" என்று அதட்டினாள்.

"இருக்கிறது இளவரசி... ஆனால்...." என்று சிங்கலால் சொன்னபோது "என்ன தயக்கம்... நான் யார் தெரியுமா?" என்று மீண்டும் எச்சரித்தாள். "இளவரசி, ஒரு சட்டைதான் இருக்கிறது" என்று கூறிக்கொண்டே தன் மகளுக்காகத் தைத்த அந்தச் சிறப்புச் சட்டையை வெளியே எடுத்தான்.

அந்தச் சட்டை அருமையாக இருந்தது. இளவரசிக்கு மிகவும் பிடித்து விட்டது. "ஆகா... அற்புதமான பட்டுச் சட்டை விலை என்ன?" என்றாள்.

"இளவரசி மன்னிக்க வேண்டும்... இதனை விற்க மாட்டேன். என் ஒரே மகளுக்காகத் தைத்த சட்டை இது. கோடிகோடியாகத் தந்தாலும் இதைத் தரமாட்டேன். என் மகளுக்கு கொடுக்கப் பாதுகாத்து வைத்து இருக்கிறேன்." என்று சொன்ன சிங்கலாலைப் பார்த்துப் பற்களைக் கடித்தாள் இளவரசி.

"ஓகோ... இதனை உன் மகளுக்காகவா வைத்திருக்கிறாய்? இதோ சாபமிடுகிறேன்... உன் மகள் தவளை ஆகி விடுவாள்!" என்றாள். அடுத்த நிமிடம் இளவரசியாக இருந்த சம்பா பெரிய தவளையாகி விட்டாள். அது அழுது கொண்டே தரையில் குதித்துச் சிங்கலாலின் கால்களைச் சுற்றி வந்தது.

குழந்தைகளே! பார்த்தீர்களா? கர்வத்தின் விளைவு! ஆணவம் என்பது அழிவின் அறிகுறி. எனவே உங்களுக்குள் ஆணவம் என்ற கொடிய நோயின் கிருமிகள் அண்டவிடாமல் கவனமாக இருக்க வேண்டும்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **14.09.2002.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **461**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 458

பரிசுக்குரியவர்:
**மோ. மதுஷிகா**
கார்மெல் பாத்திமா கல்லூரி தேசிய பாடசாலை, கல்முனை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| **எம்.எஸ்.துஷியந்தன்,** தர்மதுத கல்லூரி, பதுளை. | **கிருபை நாதன் விமல்ராஜ்,** பெரியநீலாவணை 1, மத்திய வீதி, கல்முனை. |
| **உ. திருக்கோகுலன்,** ரட்னகர பிளேஸ், தெஹிவளை. | **எஸ். மஆத்,** கிழக்கு வீதி, அக்கரைப்பற்று-01. |
| **முஹம்மத் றபீத் நளீம்,** ஸ்பீல் வீதி, புத்தளம். | **எம்.அர்ஜுன்,** கா/கித்துல்முல்லை மகா வித்., கலகா. |
| **யோகராஜ் வை. சுகுமார்,** சென்மேரிஸ் மத்திய கல்லூரி, பொகவந்தலாவ. | **எஸ்.உஷா நந்தினி,** அல் பராகா சர்வதேச பாடசாலை, பண்டாரவளை. |
| **எஸ். காயத்திரி,** எலகந்த, ஹெந்தளை. | **எஸ். இபாஸ் அலி மௌலானா,** இக்ரல் சர்வதேச பா., கொள்ளுப்பிட்டி. |

## விடுகதைகளும் விடைகளும்

1. ஆழ்கடலில் இருப்பவன் அதிரடி ஒளி கொண்டவன் அவன் யார்?
2. ஒன்றாக இருந்தவர்களை வெந்நீரில் போட்டு இரண்டாக பிரித்தனர் அவர்கள் யார்?
3. தலைக்குள் கண் இருப்பது இவனுக்கு மட்டுமே அவன் யார்?
4. ஆயிரம் கண்கள் கொண்டவள் அமரவும் வைப்பாள் அசரவும் வைப்பாள் அவள் யார்?
5. தலையைச் சீவினால் தாளில் நடப்பான் அவன் யார்?
6. சருகுச் சேலைக்காரி சமையலுக்கு முக்கியமானவள் அவள் யார்?
7. ஒற்றைக் காதன் ஒல்லியானவன் மானம் காக்கும் பணியில் மகத்தானவன் அவன் யார்?
8. இவன் உடம்பை முறுக்கினால் ஒரு பிரயைம் போல் தெரியும் அவன் யார்?
9. கறுப்பர்களுக்கு நடுவே வெள்ளையன் கலங்குகிறான் அது என்ன?
10. சின்னஞ்சிறு வீட்டில் தற்கொலை படையினர் பலர் அவர்கள் யார்?

### விடைகள்.

10. தீப்பெட்டி- தீக்குச்சிகள்.
9. [illegible]
8. [illegible]
7. [illegible]
6. வெங்காயம்
5. [illegible]
4. [illegible]
3. [illegible]
2. [illegible]
1. [illegible]

## அதிசய உலகம்



### குழாய் மீன்!

படத்தில் இருப்பவர்தான் குழாய் மீன். ஏன் இந்தப் பெயர் தெரியுமா? இவர் உடம்பைப் பாருங்க... அப்படியே ஸ்லிம்மா... குழாய் மாதிரி இல்ல... அதனால் தான் இந்தப் பெயர். இவர், கடல் குதிரைகள் இருக்குது இல்லையா அவற்றின் சொந்தக்காரர். அதாவது அவரது இனத்தைச் சேர்ந்தவர். இந்தக் குழாய் மீன்களில் மட்டும் அப்பா மீன்கள்தான் அடைகாக்கும். மம்மி மீன்கள் முட்டை இட்டு.... இந்த டாடி மீன்களின் வயிற்றுப் பகுதியில் பை போன்ற அமைப்பு இருக்கும், அதற்குள் முட்டைகளை வச்சிட்டு ஜாலியா சுற்ற ஆரம்பிச்சிடுவார். ஆனா... இந்த டாடி குழாய் மீன்கள் பதினேழு முதல் இருபத்தி ஒரு நாட்கள் வரை அப்படியே அமர்ந்து அடை காக்கும். நாட்கள் முடிந்ததும் மெதுவாக டாடி மீனின் பையிலிருந்து வெளியே வருவார் குஞ்சு குழாய் மீன்கள். இவைகள் அளவைத் தவிர அப்படியே பெற்றோரை ஒத்திருக்கும். ஹவ் ஸ்வீட் நோ!

## வெற்றி யாருக்கு?

விலங்குகளில் பெண் மிருகங்களை விட ஆண் மிருகங்களே வலிமையானவை என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் இதற்கு விதிவிலக்கான விலங்கு, பெரிய கொம்பு ஆடு ஆகும். இந்த இன ஆடுகளுக்குள் சண்டை வந்து விட்டால் மணிக்கணக்கில் மோதல் நடக்கும். அதுவும் ஆண்- பெண் பெரிய கொம்பு ஆடுகளுக்கு இடையே நடக்கும் சண்டை மிகப் பயங்கரமாக இருக்கும். இப்படி சண்டை நடக்கும் பட்சத்தில் இறுதியில் வெற்றி பெறுவதென்னவோ பெண் ஆடுகள்தான்.

## சுறா மீன்கள்

கடலில் சுறா மீன்கள் இருப்பதும் அவை மிகவும் ஆபத்தானவை என்பதும் உங்களுக்குத் தெரியும். சுறா மீன்கள் பற்றி நீங்கள் அறியாத பல விசயங்கள உண்டு. சுறா மீன்கள் 24 மணி நேரமும் நீந்திக் கொண்டேதான் இருக்கும். அவை ஒரே இடத்தில் இருப்பதில்லை. ஏன் தெரியுமா? சுறா மீன்களின் உடல் அமைப்புப்படி அவை நீந்திக்கொண்டே இருந்தால்தான் அவற்றால் தண்ணீரை வாய் வழியாக உள்ளிழுத்து சுவாசிக்க முடியும். சுறா மீன்கள் ஒரே இடத்தில் நின்றுகொண்டிருந்தாலோ பாறை இடுக்குகளில் சிக்கிக் கொண்டாலோ உயிரிழந்துவிடும். இந்த மீன்களுக்கு காதும் மூக்கும் மிகவும் கூர்மையானவை. பல மீட்டர்களுக்கு அப்பால் சிறிதளவு இரத்தம் கடலில் சிந்தினாலும் அவற்றை மோப்பம் பிடித்து அந்த இடத்திற்குச் செல்ல சுறா மீன்களினால் முடியும். தவிர தூரத்திற்கு அப்பால் கேட்கும் சத்தங்களைக் கூட அவற்றால் உணர முடியும்.


## இந்த வாரப் புதிர்



1 வது பகுதியிலிருக்கும் டிசைனை மூன்று நேர்கோடுகளால் இணைத்தால், 2 ஆவது பகுதியிலிருக்கும் முக்கோணம் போல் எத்தனை முக்கோணம் கிடைக்கும்.

## அறிவுத் தேடல்

சென்றவாரப் புதிரின் விடை:



# வெட்டியான்

**காத்தநகர் முகைதீன் சாலி, திருகோணமலை.**



"அம்மா நான் இனி ஸ்கூலுக்குப் போக மாட்டன்" பாக்கியம் அதிர்ந்து போனாள். அண்மையில் ஓ.எல். பரீட்சையில் சித்தியடைந்திருந்த கதிரவன் இவ்வாறு கூறிய போது இவளால் தாங்க முடியவில்லை. எந்த நோக்கத்திற்காகத் தன் கணவன் கஷ்டப்பட்டு இந்தக் குடும்ப வண்டியை ஓட்டுகிறானோ அந்த நோக்கத்திற்கே இவன் உலை வைத்த போது இவளால் எப்படித் தாங்க முடியும்.

"ஏம்பா என்னாச்சு உனக்கு?" பாக்கியம் அமைதியாகக் கேட்கிறாள்.

"என்ன ஆகணும், எல்லாரும் ஸ்கூல்ல என்னக் கேவலமா பாக்கிறாங்க, ஒவ்வொருத்தனும் என் அப்பா டொக்டர், என் அப்பா மாஸ்டர், என் அப்பா முதலாளின்னு பெருமையா சொல்றானுங்க, ஏன்? என் அப்பா றோட்டு கூட்றவன் எண்டு கூடத் தைரியமா சொல்றானுக. ஆனா, என் அப்பா தொழில நான் எப்படிச் சொல்றது? இப்படி அவமானப்பட்டுட்டு என்னால தொடர்ந்து படிக்க முடியாது."

நாலெழுத்து படித்தவுடன் தைரியமாகப் பேசக் கற்றுக் கொண்ட தன் மகனை நினைத்துப் பாக்கியம் பெருமைப் பட்டாலும், படிப்பை நிறுத்தப் போகிறேன் என்று மகன் சொன்னதை அவளால் நியாயப்படுத்த முடியாது போயிற்று. மகன் சிறுவனாயிருந்த போது அழுக்குக் காற்சட்டையுடன் அப்பாவுடன் சேர்ந்து சவக்குழி வெட்டிய அந்தக் கசப்பான நினைவுகள் இப்போது பாக்கியத்தின் நினைவலைகளை நெருடிச் செல்கிறது. பாக்கியத்திற்கு மகன் மீது என்னதான் பெத்த பாசம் இருந்தாலும், தன் கணவனின் தொழிலைத் தன் மகனே கேவலமாகப் பேசிவிட்டானே என்ற வருத்தம் நெஞ்சின் ஒரு ஓரத்தில் நெருஞ்சி முள்ளாய் தைத்துக் கொண்டிருந்தது. இந்த விடயம் முனிசாமிக்குத் தெரிந்தால் மிகவும் வருத்தப்படுவான் என்று அவளுக்குத் தெரியும். கதிரவனை எப்படியாவது சமாதானப்படுத்திப் பாடசாலைக்கு அனுப்ப வேண்டுமென்ற எண்ணத்தில் அவனைச் சமாதானப் படுத்துகிறாள்.

"ஏம்பா, அப்பா என்ன தொழில் செஞ்சாலும் உனக்கு ஒரு குறையும் வைக்கலேயே... நேரத்திற்குச் சாப்பாடு, நேரத்திற்குப் பணம், தேவைக்கதிகமா உடுப்பு எல்லாந் தந்து உன்ன ராசா மாதிரித்தான வெச்சிருக்காரு... இன்னும் கொஞ்சக் காலத்தில ஏ.எல். சோதினை வருகுதெண்டு நீ தானப்பா சொன்னே... அதுவரைக்கும் மனசில எதையும் வெச்சிருக்காம படிப்பில கவனத்தச் செலுத்துப்பா..."

கதிரவன் எரிக்கும் கண்களுடன் தாயை நோக்குகிறான். "என்னால முடியாதம்மா... ஒரு வெட்டியானுக்கு மகனா யிருக்கிறத விடச் செத்துப் போயிர்றது எவ்வளவோ மேல்"

கதிரவன் கூறவும், பாக்கியத்தின் இதயத்தில் எரிமலை வெடித்தது. குப்பத்தில் கிடந்த குண்டுமணியை சுவர்க்கத்தில் வைத்ததன் தாக்கம் புரிந்தது. எந்த வார்த்தை தன் மகனின் வாயிலிருந்து வரக்கூடாதென நினைத்திருந்தாளோ அந்த வார்த்தையை அவன் சொன்ன போது பாக்கியம் கொதித்துப் போனாள். அவளால் தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் போகவே கதிரவனை ஓங்கி அறைகிறாள். பாக்கியம் கதிரவனை அடிக்கவும் முனிசாமி குடிசைக்குள் நுழையவும் சரியாயிருந்தது. முனிசாமி எந்தச் சந்தர்ப்பத்திலும் கதிரவனைக் கை நீட்டி அடித்ததில்லை. பாக்கியம் அடித்ததைக்கூட அவனால் தாங்க முடியாது போயிற்று.

"பாக்கியம் என்ன காரியம் பண்ணிட்ட... தோளுக்கு மேல வளர்ந்திட்ட புள்ளய கை நீட்டி அடிக்கிறியே கேவலமாயில்ல?"

"இல்லங்க கேவலமாயில்ல... நாம பெத்த புள்ளயே உங்களக் கேவலமா பேசுறப்போ அவன அடிச்சதில எனக்கு வருத்தமேயில்ல"

முனிசாமியால் நம்ப முடியவில்லை. "நம்ம கதிரவனா என்னக் கேவலமாப் பேசிட்டான். நான் நம்ப மாட்டன்; ஏம்பா நீ என்ன அப்படிப் பேசினியா?"

தன் மகன் மீது வைத்திருக்கும் அசையாத நம்பிக்கையில் முனிசாமி கேட்கிறான்.

"ஆமா, நீங்க செய்யிற இந்த வெட்டியான் தொழிலத்தான் சொல்றன், உங்களால எனக்கு ஸ்கூல்ல தல காட்ட முடியல அதனால நான் படிப்பை விட்டுட்டு எங்காச்சும் போகப் போறன்." விட்டெறிந்து பேசிய கதிரவனின் சொற்களால் முனிசாமியின் நம்பிக்கை மெல்லக் கரைகிறது. உள்ளம் துடிதுடித்துப் போகிறது.

"ஆமாப்பா, நீ நாலு விஷயத்தையும் படிச்சிட்டே இல்ல. உனக்கு நாட்டு நடப்புகள், மானம், ரோசம், வெட்கம் எல்லாமே புரியும். நான் படிக்காத முட்டாள் பய. எனக்குத்தான் எதுவுமே விளங்காமப் போயிட்டு. காலம் பூரா பிரேதங்களோடேயே வாழ்க்கையைக் கழிச்சிட்டேனா, என் மனசு கூட மரணித்துபோயிட்டு. என்ன செய்யிறது? என் அப்பா, அம்மா என்னைப் படிக்க வைக்கல. அவங்கட பரம்பரைத் தொழிலான வெட்டியான் வேலய எனக்கு விட்டுட்டுப் போயிட்டாங்க. நீயும் என்னப் போல மயானத்தில வாழ்க்கையைக் கழிச்சிடக் கூடாதுன்னுதான் உன்னப் படிக்க வைக்க ஆசைப்பட்டன். ஆனா, என் தொழிலே உன் படிப்புக்கு வேட்டு வைக்குமுன்னு நான் கனவுல கூட நெனக்கல. உணர்ச்சியில்லாத என் மனசால உன் மனசப் புரிஞ்சிக்க முடியாமப் போயிட்டுதுப்பா. நாளைக்கு மட்டும் பொறுத்துக்க... நாளைக்கே நான் உனக்கொரு நல்ல முடிவச் சொல்றன். படிக்க மாட்டன் எண்டு மட்டும் சொல்லிப் புடாதப்பா..."

சொல்லி முடித்தபோது முனிசாமியின் இதயம் கல்லாசியிருந்தது. பாக்கியத்தினால் எதையும் புரிந்துகொள்ள முடியவில்லை.

"என்ன முடிவு சொல்லப் போறாரு..." என்பது அவளுக்குப் புதிராகவே இருந்தது. கணவன் எந்த முடிவை எடுத்தாலும் அதைப் பாக்கியம் நிராகரிக்கப் போவதில்லை. முனிசாமி உருக்கமாகக் கூறிய எந்த வார்த்தையும் கதிரவனின் இதயத்தை உருக்கிவிடவில்லை. மாறாக, 'அப்பா என்ன முடிவு சொல்லப் போகிறாரோ?' என்ற ஏக்கத்துடன் உறங்கிப் போனான்.

பாக்கியத்திற்கு இன்னும் கண்ணீர் நின்றபாடில்லை. முனகலுடன் இருமலும் முனிசாமியை ஆட்கொள்ளப் பரிதவிக்கும் மனதுடன் பாயில் புரள்கிறான். தூக்கம் தொலைந்திருந்தது. பாக்கியத்திற்கும் இந்நிலையே!

"நாளைக்கு என்ன முடிவு சொல்லப் போறீங்க...?"

பாக்கியம் மூக்கைச் சிந்தியவாறே கேட்கிறாள். முனிசாமி எழுந்து உட்கார்ந்துகொண்டு, காதில் செருகியிருந்த குறை பீடித் துண்டைப் பற்ற வைத்துக் கொண்டே,

"பாக்கியம்! நாம எப்பிடியோ வாழ்ந்து முடிச்சிட்டம். நாம செய்யிற தொழிலை தெய்வமா நெனச்சி இந்த வெட்டியான் வேலையும் சந்தோசமா ஒத்துக்கிட்டிருந்தோம். இப்போ அந்தத் தொழிலே நம்ம புள்ளக்கி அவமானத்த ஏற்படுத்தியிருக்கு. அந்தத் தொழில விட்டுட்டா, நாம சோத்துக்கு எங்க போறதுன்னு புள்ளக்கி விளங்குதில்ல. நாம யோசிக்காமப் போயிட்டம். நாலு பேருக்கு மத்தியில பழகுற நம்ம புள்ள, என் அம்மா பாக்கியம். அப்பா வெட்டியான் முனிசாமின்னு சொல்றதுக்கு அவமானப்படுவான்னு. நம்ம புள்ள நல்லாயிருக்கணும்னா அவனக் கொழும்புல உள்ள பள்ளிக் கூடத்தில சேத்துப்புடுவம். அப்பத்தான் அவனோட படிக்கிறவங்களுக்கு கதிரவன்ட அம்மா, அப்பா யாரெண்டு தெரியாமப் போயிரும்"

பாக்கியத்தின் நெஞ்சு உருகிப் போகிறது. வடியும் கண்ணீருடன் கேட்கிறாள்.

"அதுக்கெல்லாம் லச்சக் கணக்கில செலவாகுமே... பணத்துக்கு என்னங்க செய்யிறது?"

"பாக்கியம்... நான் எங்க கூப்பிட்டாலும் நீ என்னோட வர்றதுக்குச் சம்மதிப்பியா?"

"என்ன வார்த்தைங்க சொல்லிப்புட்டீங்க. உங்க மூச்சிலதானே இந்தக் கட்ட உசிர் வாழுது. நீங்க கூப்பிட்டா மறுப்பேனா?"

மனைவியின் பதிலைக் கேட்டதும் முனிசாமி பூரித்துப் போகிறான்.

"அப்ப நாளைக்கே நமக்கு ஒரே சொத்தாயிருக்கிற இந்தக் காணிய வித்துப்புடுவம். ஒரு ஏழெட்டு லச்சம் தேறும். நம்ம கந்தசாமி மூலமா புள்ளயக் கொழும்புக்கு அனுப்பிடுவம்"

பாக்கியம் தலையசைக்கிறாள். கணவனின் பேச்சுக்கு மறுபேச்சுப் பேசி பாக்கியத்திற்குப் பழக்கமில்லை.

ஆண்டாண்டு காலமாக வசித்து வந்த காணியை விற்பதைவிடப் பதினாறு வருடம் ஒன்றாயிருந்த மகனைப் பிரிவதே அவர்களுக்கு வேதனையை அதிகமாக்கிக் கொண்டிருந்தது. கதிரவன் இது எவற்றையும் சிந்திக்கவோ, தான் கொழும்பு சென்று படிக்கப் பணம் எங்கிருந்து வரப் போகிறது என்றோ கவலைப்படவேயில்லை. கொழும்பில் படிப்பது பற்றிய கனவுகளுடன் அவனுடைய இதயம் இறக்கை கட்டிப் பறக்கிறது.

"கதிரவா... கந்தசாமி மாமா வந்துட்டாரு, சீக்கிரம் வாப்பா"

முனிசாமி கூப்பிடவும் கதிரவன் உடுப்புப் பையையும், புத்தகப் பையையும் சுமந்துகொண்டு குதூகலத்துடன் வெளியே வருகிறான். தன் வாழ்க்கைப் பயணத்திற்குத் தன்னையே விதியாக்கிய தகப்பனிடம் கூட, "நான் போகிறேன்" என்று கூடச் சொல்ல அவகாசமில்லாமல் அவசரமாய்ப் போகிறான்.

ஆசையோடு சுதந்திரப் பறவையாய் சிறகடித்துப் போகும் தங்கள் பாச மலர் பிரிவதைத் தாங்காது பாக்கியம் வாய்விட்டு அழுகிறாள். முனிசாமியால் அவளின் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவள் அழுது முடியுமட்டும் தன் மனதைக் கல்லாக்கிக் குந்தியிருக்கிறான்.

"யாரிங்க முனிசாமி?"

"நான் தாங்க..."

"சீக்கிரமா உங்க சாமானையெல்லாம் அப்புறப்படுத்துங்க... நாங்க காணியைத் துப்புரவாக்கணும்..."

இப்போது பாக்கியம் உடைந்த மனதுடன் முனிசாமியிடம் கேட்கிறாள்.

"நாம எங்கங்க போறது?"

"வெட்டியான் வேறெங்க போறது பாக்கியம்; மயானத்துக்குத்தான்..." ■

---

# தாய்மை என்பது



**எஸ்.ரவி, மாத்தளை.**

சுமதிக்கு விடியற் காலையிலிருந்து சரியான வேலை. அவள்தான் மூன்று தங்கைகளுக்கும் தாய் ஸ்தானத்திலிருந்து எல்லாம் செய்து வருகிறாள். இப்போது கடைக்குட்டி தங்கைக்கு வளைகாப்பும் சீமந்தமும்.

ஊரிலிருந்து வந்த மற்ற இரண்டு தங்கைகளும் தங்கள் பிள்ளைகளைக் கவனித்துக் குளிப்பாட்டவும், சோறூட்டவும் நேரம் சரியாகப் போனது. வைபவத்தின் எல்லா வேலைகளும் சுமதியின் மீதுதான் விழுந்தது. அவளை விட்டால் ஆள் கிடையாது. வேலை செய்து செய்து ஓய்வுக்காக உடல் கெஞ்சியது. தலை சுற்றிப் படுத்துவிட மனம் பரபரத்தது.

அம்மா, கடைக்குட்டி தங்கையைப் பெற்று, இவள் கையில் கொடுத்துவிட்டுக் கண்மூடிய போது இவளுக்கு வயது பதினைந்து. அப்போதிருந்து இவள்தான் மூன்று தங்கைகளின வளர்ப்பையும், வயிற்றையும் பார்த்து வருகிறாள். குருவி தலையில் பனங்காயைச் சுமந்தது போல் இவளே வீட்டு நிர்வாகம் முழுவதையும் கவனித்து வந்தாள். பத்தாவது படித்துக்கொண்டிருந்தவளின் படிப்பைப் பாதியில் நிறுத்தினார் தந்தை.

இவளுக்குத் திருமணம் முடிந்த கையோடு இரண்டு தங்கைகளுக்கும் திருமணம் செய்துவைத்தார். அவர்களும் காலாகாலத்தில் குழந்தையும் கையுமாக வந்து நிற்க; இவள் மட்டும் வெற்று மரமாய் நின்றாள்.

கல்யாணமாகிப் பத்து ஆண்டுகள் ஆகியும் தாய்மை அவளைத் தாலாட்டவில்லை. ஏறி இறங்காத மருத்துவ மனைகளில்லை. முன்னேஸ்வரம் முதல் கதிர்காமம் வரை கோவிலுக்குப் போய் வந்தாகிவிட்டது. நேர்ந்துகொள்ளாத தெய்வமில்லை. கோவிலில் மரம் இருந்தால் அதில் தொட்டில் கட்டினாள். ஒருநாள் குழந்தையொன்று மடியில் தவழும் என்று நம்பினாள்.

ஆனால், குழந்தை அவள் வயிற்றிற்குள் உருக்கொள்ளவேயில்லை. கணவனும் மனைவியும் பல இரவுகள் ஒருவரை ஒருவர் தேற்றத் தெரியாமல் தூக்கம் இழந்திருக்கிறார்கள்.

"நான் உனக்குக் குழந்தை... நீ எனக்குக் குழந்தை..." எனச் சொல்லி ஒருவரை ஒருவர் ஏமாற்றப் பார்த்தார்கள்.

அவள் மாமியார் தன் மகனுக்கு இரண்டாவது கல்யாணம் செய்து வைக்க எப்படியெல்லாமோ முயன்று பார்த்தாள். மகன் கொஞ்சமும் மசிந்து கொடுக்காத போது, "நீயாச்சு உன் மனைவியாச்சு..." எனச் சலித்துப் போய் தன் இரண்டாவது மகனுடன் போய்த் தங்கிக் கொண்டாள். இங்கே வருவது இல்லை. இவர்கள் வலிந்து அழைத்தால், "உங்கள் பங்கிற்கு எப்போ என்னைப் பாட்டியாக்குகிறீர்களோ... அப்போ வரேன்" என்கிற பதிலில் இவர்கள் குலைந்து போவார்கள். அவள் கணவன் சரவணனுக்கு மனைவி எதுவும் செய்துகொள்ளக் கூடாதே என்கிற பயம் நிறைய உண்டு.

ஒரு விசேஷம் எனச் சொந்தக்காரர்களின் வீட்டிற்குப் போனால், சுமதியின் கண் பார்வையிலிருந்து தங்கள் குழந்தைகளை மறைத்துக்கொள்ளப் பார்ப்பார்கள். ஏதேனும் ஒரு குழந்தையைச் சுமதி கொஞ்சினால் போச்சு, சுமதியின் கண்ணெதிரிலேயே அவள் காலடி மண்ணெடுத்து அந்தக் குழந்தைக்குச் சுற்றித் திருஷ்டி கழித்தார்கள். அவள் காதுபட, 'யார் கண் பட்டாலும், மலடி கண் படக் கூடாது' என்பார்கள்.

திருமணத்தின் போது எல்லோர் முன்னிலையிலும் தாலி, வாழ்த்து வாங்கச் சுற்றிவரும். சொல்லி வைத்தாற் போல் கைகளை நீட்ட இவள் ஸ்பரிசம் படாமல் கத்தரித்தது போல நகர்ந்து போவார்கள். மஞ்சள் அரிசியும் கொடுக்க மாட்டார்கள். இவள் வாழ்த்தினால் மண மக்களுக்குக் குழந்தை உண்டாகாதாம்.

சுமதியின் கண்கள் பலர் முன்னிலையில் கண்ணீரில் மிதக்கும். அவளைப் பார்க்கச் சகிக்காமல் சரவணன் அவளை அழைத்து வந்து விடுவான். இப்படி அடிக்கடி நடப்பதுண்டு.

இத்தனைக்கும் முதல் தங்கை, இரண்டாவது தங்கை என அவர்கள் பிரசவ நேரத்தில் உடனிருந்து உதவி, குழந்தையைக் கையிலேந்திக் குளிப்பாட்டி, மைதீட்டி, அதன் தேவைகளைக் கவனித்துச் சீராட்டியவளே இவள்தான். முதல் தங்கைக்கு ஒரு ஆண் குழந்தை. இரண்டாவது தங்கைக்கு மூன்று பெண் குழந்தைகள். இப்போது மூன்றாவது தங்கை திருமணமான கையோடு பிள்ளையாண்டிருக்கிறாள். அவளுக்குத் தான் சிறிது நேரத்தில் வளைகாப்பும் சீமந்தமும். அதற்குத்தான் ஓடியோடி வேலை பார்த்துக்கொண்டிருக்கிறாள் சுமதி.

விடிகாலையிலிருந்து வேலை செய்ததால் உடல் களைத்துப்போய், 'போதும் படுத்துக்கொள்வேன்' என்கிறது. அத்தனை களைப்பு, அசதி, உடல் வலி. அவை எல்லாவற்றையும் தள்ளி வைத்து விட்டுத் தான் வளர்த்து ஆளாக்கியவளுக்குத் தன் கையாலேயே பூச் சூட்டி, மை தீட்டி அழகு பார்க்கிறாள்.

வாயும், வயிறுமாய் இருக்கும் தங்கை இவள் தோள் மீது சாய்ந்து, "நீ என் அக்கா இல்லக்கா... என்னோட அம்மா..." என்றபோது சுமதிக்கு உழைப்பின் களைப்பு அனைத்தும் பஞ்சாய் பறந்தோடிவிட்டது. உடலில் ஒருவிதத் தெம்பு பிறந்தது. தங்கையை உட்கார வைத்து விட்டார்கள். ஆளாளுக்கு நலங்கு வைத்து ஆரத்தி எடுத்துத் திருஷ்டி கழித்தார்கள்.

சுமதியும் சுவரோரமாய்ச் சாய்ந்து மகிழ்ச்சியோடு பார்த்துக்கொண்டிருக்கிறாள். அவளுக்கு என்று குழந்தைகள் இல்லாவிட்டால் என்ன? இந்தக் கடைசித் தங்கை அவளுடைய குழந்தை மாதிரித் தானே! அவள்தானே வளர்த்து ஆளாக்கி மணமுடித்து வைத்தாள்.

ஒவ்வொரு பெண்ணாக எழுந்து போய் நலங்கு வைத்துக் குங்குமம் இடுகிறார்கள்.

ஆண்கள் தங்கள் வேலை எதுவுமில்லை என்பது போல் வெளியே ஒதுங்கித் தங்களுக்குள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கூட்டத்தில் நின்றிருக்கும் சரவணனின் கண்கள் ஏனோ அடிக்கடி சுமதியின் மீது தொட்டுச் செல்கின்றன.

"முடியலியா?" என விழிகளினாலே கேட்கிறான். சுமதி சின்னச் சிரிப்புடன் திரும்பிக்கொள்கிறாள். கடைசித் தங்கை களைத்துப்போய் முனகலுடன் நிமிர்ந்து உட்கார்கிறாள். சுமதி உடனே ஓடிப்போய் அவள் காதில், "இன்னும் கொஞ்ச நேரந்தான். சமாளிச்சுக்க... அப்புறம் எழுந்துக்கலாம்" எனக் கிசுகிசுத்தாள்.

கடைசித் தங்கை இவளைத் தாயாய்க் கருதுபவள். அதைக் காதில் வாங்காதது போல அருகேயிருந்த குழந்தையிடம் பேசிச் சிரித்துக்கொண்டிருக்கிறாள். ஒவ்வொரு பெண்ணாகச் சடங்கு செய்யக் கடைசியில் மீதமிருந்தது சுமதி மட்டும்தான்.

"சுமதி அக்காவைச் செய்யச் சொல்லுங்கோ..." யாரோ ஒரு பெண்ணின் குரல் கேட்கிறது.

"சுமதி அக்கா வேண்டாம்..."

"பாவம்... குழந்தை பிறக்காதது அவங்க தப்பா...? அவங்களும் செய்துட்டு..."

"யாரும்மா அது பேசறது. சும்மாயிரு... பெரிசாப் பெத்து வளர்த்தவ கணக்காப் பேச வந்துட்டா... அது அதுக்கு ஒரு தகுதி வேண்டாமா? அது சின்னப் பெண்ணு... பெத்து நல்லபடியா வாழவேண்டாமா?"

"ஆமாம்! மலடி போய் நலங்கு வைச்சா..."

"சொல்ல முடியாது. குழந்தைக்கு ஏதேனும் ஆனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை..."

"மலட்டுப் பிறவிங்க இங்க முன்னால வந்து நிற்கிறதே தப்பு. இதிலே நலங்கு வேறயா...?"

"சுமதியக்கா செய்ய வேண்டாமே..."

"கல்யாணமாகிப் பதினைஞ்சு வருஷமாப் பிள்ளையில்லை. அவங்க வேண்டாம்"

பேசிய நபர்களோடு அவளின் இரண்டு தங்கைகளும் சேர்ந்துகொண்டதுதான் அதிசயம். இவள்தானே அவர்களின் குழந்தைகளை வளர்த்தாள். அதெல்லாம் மறந்துபோயிற்றா? இவளுக்குப் பிள்ளையில்லாத குறை மட்டுமே பூதாகாரமாய்த் தெரிகிறதே... இவர்களா இப்படிப் பேசினார்கள்?

யாரோ சூட்டுக்கோலால் அவள் அடிவயிற்றில் இழுத்தது போல் தவித்துப் போனாள். நாற்காலியில் உட்கார்ந்திருந்த கடைசித் தங்கை, "சுமதியக்கா செய்ய வேண்டாம். ஏன் எல்லோரும் பேசறீங்க? அக்கா செய்யிறது சரியில்லைன்னு எங்க மாமியார் சொன்னாங்க..." என்றாள்.

இறுதியில் அவளது கடைசித் தங்கை சொன்னதைக் கேட்டதும் தவித்துப் போனாள் சுமதி. தனக்குத் திருமணமாகிப் புகுந்த வீட்டிற்குப் போனபோது அந்தத் தங்கையையும் அழைத்துப் போய் வைத்து வளர்த்திருக்கிறாள். கணவன் காத்துக் கொண்டிருக்க, அந்தத் தங்கையின் தேவைக்காகப் பல நேரம் உழைத்திருக்கிறாள். அவள் அப்படிச் சொன்னதும் யாரோ அனலில் பிடித்துத் தள்ளியது போல் துடித்துப் போனாள் சுமதி.

வேறு யார் சொன்னாலும் அவள் இவ்வளவு தூரம் கலங்கியிருக்கமாட்டாள். புட்டிப் பால் புகட்டி, இடுப்புத் துணி மாற்றிச் சுத்தம் செய்து அவளைத் தாயாய் நின்று வளர்த்தவள் சுமதி. குழந்தையாய்த் தங்கையிருக்கையில் ஈ மொய்க்குமோ, கொசு கடிக்குமோ என எத்தனை நாட்கள் தூக்கத்தைத் தொலைத்திருக்கிறாள்.

ஒரு தாய் தன் குழந்தையை வளர்ப்பது விந்தையில்லை. ஆனால், தமக்கை வளர்ப்பதென்பது... அந்தத் தங்கை தூங்க எத்தனை நாள் தாலாட்டுப் பாடியிருக்கிறாள். அப்படிப்பட்ட தங்கைகள் இவளுக்குக் குழந்தை பிறக்காததை, 'மலடி' என்று சொல்லாமல் சொல்லிக் காட்டுகிறார்கள். இதிலும், கடைசித் தங்கையும் சேர்ந்துகொண்டது பலத்த அடியாய் அவள் நெஞ்சில் விழுகிறது. அவள் நினைவுகள் அவளைவிட்டுக் கழன்று கொள்ள, கண்கள் இருண்டு அப்படியே சரிந்தாள் சுமதி.

எல்லோரும் வளையல் அடுக்குவதில் மும்முரமாய் இருக்க, சரவணன்தான் நிகழ்வைப் புரிந்துகொண்டு ஓடிவந்தான். அவளைத் தாங்கி நெஞ்சில் சாய்த்தான். கூட்டமில்லாத இடத்தில் கட்டிலில் படுக்க வைத்தான். முகத்தில் நீர் தெளித்து, "சுமதி... சுமதி... கண் திறந்து பாரம்மா. சுமதி... காலையிலிருந்து ஓடியோடி வேலை செய்தது ஒத்துக்கலைப் போலிருக்கு" என்றான்.

சுமதியின் விழி திறக்கவேயில்லை. பிடுங்கியெறியப்பட்ட கொடி போலத் துவண்டுபோய்க் கிடந்தாள்.

நலங்குக்கு வந்திருந்தவர்களில் ஒரு பெண் டாக்டர் ஓடி வந்து, சுமதியின் நாடியைப் பிடித்துப் பார்க்கிறாள். டாக்டரின் முகத்தில் மலர்ச்சி.

"சார்... நீங்க அப்பாவாகப் போறீங்க... இவங்க வயிற்றில் உங்கள் குழந்தை வளருது..."

அதைக் கேட்ட சரவணனுக்குத் தன் காதுகளை நம்ப முடியவில்லை. மயக்கம் தெளிந்த சுமதிக்கு மகிழ்ச்சியில் அழுகை அழுகையாய் வந்தது. இனி அவளை யாரும் 'மலடி' என்று சொல்ல முடியாதே! ■

# ஒரு கைதியின் கதை

## 18

"இதென்ன கேள்வி? காசு கிடைத்தால் நாளைக்கே என்னை உதறிக் காதம்பரி வேறொருத்தன் பின்னால் போய்விடுவாள். என்றைக்கிருந்தாலும் எனக்கு அபிதாதான் முக்கியம்..."

"அப்படியானால் ஒரே ஒரு சின்ன உதவி செய்யுங்கள். என்னைத் தேடிக் கிருஷ்ணதாஸின் கூட்டம் வரும் போது நான் இங்கே இருக்க விரும்பவில்லை... உங்களைச் சேர்த்து விட்டு நான் பொலிஸிடம் சரணடைய விரும்புகிறேன்... இன்னும் அரை மணிநேரம் கழித்து பொலிஸ் என்னைக் காதம்பரியின் வீட்டில் வந்து சந்திக்கட்டும்... பொலிஸிற்கு உடனே போன் செய்யுங்கள்."

"என்னவென்று?"


"காதம்பரியின் முகவரியை அவர்களிடம் கொடுங்கள். கிருஷ்ணதாஸைத் தாக்கிய குற்றத்திற்காக நான் பொலிஸில் சரணடைய விரும்புவதாகவும் அந்த முகவரிக்கு வரும்படியும் சொல்லுங்கள்... ஆனால் அரை மணி நேரம் கழித்து வரச் சொல்லுங்கள்..."

பரமேஷ்வர் தொலைபேசியை எடுத்து டி.எஸ்.பி. கஜேந்திரனுக்கு போன் செய்தார்.

"அடுத்த போன் கிருஷ்ணதாஸிற்கு பண்ணுங்கள்."

"கிருஷ்ணதாஸிற்கா?"

"ஆமாம்... நான் பொலிஸில் சரணடைய முடிவு செய்து விட்டதாகவும், காதம்பரி வீட்டிற்கு அரை மணி



கழித்து பொலிஸை அங்கே வரச் சொல்லியிருப்பதாகவும் மட்டும் சொல்லி வைத்து விடுங்கள்..."

"உனக்கென்ன பைத்தியமா? கிருஷ்ணதாஸ் கையில் சிக்கினால் உன்னைத் தவிடு பொடியாக்கி விடுவார்..."

"சொன்னதைச் செய்யுங்கள்... உங்கள் மகளை உடனே பார்க்க உங்களுக்கு விருப்பமில்லையா?"

பரமேஷ்வர் டெலிபோனை எடுத்தார்.

கிருஷ்ணதாஸ் முகம் சிவந்திருந்தார்.

பரமேஷ்வர் பேசி முடித்ததும், ரிசீவரைப் பொத்தென்று வைத்தார்.

"ராஸ்கல் என்னை அடித்து விட்டு அசிங்கப்படுத்தி விட்டு பொலிஸில் போய் சரணடையப் போகிறானாம்! விடப் போவதில்லை அவனை..."

"எங்கேயிருக்கிறான் சொல்லுங்கள் அப்பா... நம் ஆட்களை உடனே அனுப்பி அவனைத் தீர்த்து விடச் சொல்கிறேன்..." என்று உறுமினான் அஸ்வின்.

"வேண்டாம்... உன்னை மறுபடி அனுப்பி நான் எந்த ரிஸ்க்கும் எடுக்கப் போவதில்லை... நானே நேரில் போகிறேன். என்னைக் கட்டிப் போடும் தைரியம் அந்தப் பரமேஷ்வருக்கு வருகிறதா பார்ப்போம்!"

"தனியாகவா போகிறீர்கள்?"

"அந்த முட்டாள்தனத்தை நான் செய்யப் போவதில்லை. என் பாதுகாப்புப் படையும் கூட வரும்..."

கிருஷ்ணதாஸ் போனை எடுத்து எண்களை படபட என்று தட்டினார்.

"டி.எஸ்.பி. கஜேந்திரன்? கஜா... நான் கிருஷ்ணதாஸ்... அந்தப் பயல் சரணடையப் போகிறானாமே!"

"ஆமாம்" என்று பதில் வந்தது.

"பொலிஸ் வரும் முன் எனக்கு அவனிடம் கொஞ்சம் கணக்கு பாக்கி இருக்கிறதே!"

"என்ன செய்ய வேண்டும், சொல்லுங்கள்..."

"நான் போன் செய்து பச்சை சிக்னல் கொடுத்த பிறகு பொலிஸ் சந்திரமோகனைத் தேடிப் போகிற மாதிரி பார்த்துக் கொண்டால் போதும்..."

"உங்களுக்கு இதைக் கூட செய்ய மாட்டேனா?"

கிருஷ்ணதாஸ் ரிசீவரை வைத்துவிட்டு கண்ணாடியில் முகம் பார்த்தார். பிளாஸ்திரிகளைப் பார்த்ததும் அவர் இதயம் முறுக்கேறியது.

சந்திரமோகனின் முகத்தைத் தாறுமாறாகக் கிழித்தால்தான் அவர் மனம் சமாதானம் ஆகும் என்று தோன்றியது.

பெல்ட்டில் கூர்மையான கத்தியைச் செருகிக் கொண்டார். தன் ரிவால்வரை எடுத்துக் கொண்டார். தன் பாதுகாப்புப் படைத் தளபதிக்கு இண்டர்காமில் உத்தரவு கொடுத்தார்.

காரை நிறுத்தினான், சந்திரமோகன்.

பின் இருக்கையில் உட்கார்ந்திருந்த பரமேஷ்வரைத் திரும்பிப் பார்த்தவன்,

"உங்கள் மகள் இருக்கும் இடத்திற்கு வந்து விட்டோம்..." என்றான்.

"அப்படியானால் என் கண்கட்டை அவிழ்க்கலாமா?" என்று பரபரத்தார் பரமேஷ்வர்.

"ஒரு நிமிஷம்... அதற்கு முன் உங்கள் கைகளை நான் அவிழ்த்து விட வேண்டும்?"

சந்திரமோகன் பின் கதவு திறந்து அவர் அருகில் அமர்ந்தான்.

பரமேஷ்வர் துடிப்புடன் தன் கண்களைக் கட்டியிருந்த கறுப்புத் துணியை அவசரமாக விலக்கினார்.

இருட்டிலிருந்து வெளிச்சத்துக்குப் பார்வை பழகியதும் திடுக்கென்றிருந்தது.

"ஏய்! இங்கே ஏன் அழைத்து வந்தாய்? இது காதம்பரியின் வீடு!"

"ஆமாம்... அதனால்தான் உங்கள் கண்களைக் கட்டி அழைத்து வர வேண்டியிருந்தது.... இங்கேதான் அபிதா இருக்கிறாள்" என்று புன்னகைத்தான் சந்திரமோகன்.

"அ..பி..தா... இங்கே இருக்கிறாளா? என்ன சொல்கிறாய்? அவளிடம் காதம்பரியைப் பற்றி சொல்லிவிட்டாயா? காதம்பரியும் உனக்கு உடந்தையா?"

"நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள்."

பரமேஷ்வர் உடல் குறுகினார். உள்ளம் கூசினார். அந்தத் தோட்டத்தில் காலடி வைக்க அவமானமாய் உணர்ந்தார். அபிதாவை இங்கேயா சந்திக்கப் போகிறார்?

ஆனால் வேறு வழி?

இறங்கினார். சந்திரமோகன் அழைப்பு மணியை இரண்டு முறை அழுத்தினான்.

கதவு உடனே திறந்தது.

திறந்தவள் அபிதா!

அவளைப் பார்த்ததும் பரமேஷ்வரின் கண்கள் கலங்கின. "கண்ணம்மா" என்று அவளை அணைத்துக் கொள்ளப் பாய்ந்தார்.

அபிதா சரேல் என்று பின்னால் நகர்ந்து கொண்டாள்.

அவள் கண்களில் தெரிந்த அருவருப்பைப் பார்த்ததும், பரமேஷ்வரின் நெஞ்சில் நெருப்பு வைத்தாற் போலிருந்தது.

"அபிதா!" என்றார், திடுக்கிடலோடு.

"உள்ளே போவோம்" என்றான் சந்திரமோகன். வேறு வழியின்றி உள்ளே நுழைந்தார்.

சோபாவில் ஒரு ஓரமாக முடங்கி உட்கார்ந்திருந்த காதம்பரி அவரை நிமிர்ந்து பார்த்து உடனே தன் தலையைக் குனிந்து கொண்டாள்.

"அபிதா!" பரமேஷ்வரின் குரல் நடுங்கியது. "இவன் என்னைப் பற்றி ஏதாவது சொன்னானா? அப்படிச் சொல்லியிருந்தாலும் அதையெல்லாம் நம்பாதே!

"எதை நம்பக் கூடாது?" என்றாள் அபிதா, சற்று சூடான குரலில்.

பரமேஷ்வர் குறுகினார். இத்தனை நேரம் மகளைப் பார்க்க வேண்டும் என்று இருந்த துடிப்பும், அவளைப் பார்த்ததும் பொங்கிப் பிரவகித்த மகிழ்ச்சியும் புஸ்ஸென்று அடங்கி விட்டன. கண்களில் ஆத்திரம் பொங்க அவர் சந்திரமோகனைத் திரும்பிப் பார்த்தார்.

"என் மகளை என்னிடமிருந்து பிரிக்க என்ன சதி செய்தாய் சந்திரமோகன்?"

"சந்தர் என்ன செய்வான்? நீங்கள் தானே என்னைப் பிரித்து எறிந்து விட்டீர்கள்! என் வயசு இருக்குமா இந்தப் பெண்ணுக்கு?"

"இவளுக்கென்ன அபிதா? இவள்

எழுதுவது
**சுபா**

பெயர் காதம்பரி. என் வக்கீல் தொழிலில் இவள் ஒரு க்ளையண்ட் அவ்வளவுதான்."

"இவள் உங்களுக்கு க்ளையண்ட்டா? இவளுக்கு நீங்கள் க்ளையண்ட்டா?"

"அபிதா!"

"அபிதா காஸெட்டைப் பார்த்து விட்டாள்...." என்றான் சந்திரமோகன் அமைதியாக.

"அபிதா! இவன் காட்டியது போலி கேஸட். என்னிடம் கூட காட்டினான். நம்பாதே! காதம்பரியும் இவனும் சேர்ந்து எனக்கு எதிராக ஏதோ சதி செய்கிறார்கள். இன்றைய கம்ப்யூட்டர்களை வைத்துக் கொண்டு எந்த முகத்துடன் வேண்டுமானாலும் எந்த முகத்தையும் சேர்க்க முடியும் என்பது உனக்குத் தெரியும்! என் முகத்தை வைத்துக் கொண்டு இவர்கள் செய்துள்ள தில்லு முல்லு காஸெட் அது!"

"காஸெட்டை நான் எங்கே பார்த்தேன் என்று நான் சொல்லவில்லையே டாடி..."

"இங்கேயா?"

(கைதியின் கதை தொடரும்)

# ஆறு மனமே ஆறு!

## மணமாகாமல் குழந்தை-3

கமலாவிடம், "உங்கள் கணவர் எந்த இடம்?" என்று நான் கேட்டதும், அவள் "ஓ..." என்று பலத்த சத்தமெடுத்து அழத் தொடங்கினாள். வாய்விட்டுச் சத்தமெழுப்பி அழுவதும், தமது பிரச்சனைகளை விருப்பமான, நம்பிக்கையுள்ளவர்களுக்கு மனம் விட்டுச் சொல்வதும், கவலைகளினாலும், துன்பங்களினாலும் ஏற்பட்ட மனச் சுமையைக் குறைக்கும் என்பதால், அவள் தானாக அழுது ஓய்ம்வரை காத்திருந்தேன். மெல்ல மெல்ல அவளின் அழுகை குறைந்தது.



"கமலா! நான் உங்களிடம் ஏதாவது தவறாகக் கேட்டுவிட்டேனா?"

"இல்லை..." என்று தலையசைத்தாள்.

"நான் கேட்டது உங்களுக்கு மனக் கஷ்டத்தை ஏற்படுத்திவிட்டது"

கமலா தனது கண்களைத் துடைத்துக்கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

"உங்களால் தொடர்ந்து பேச முடியும்தானே..." என்று நான் கேட்டேன்.

"ஆம்! எனக்குத் திருமணமாகவில்லை. அதனால், என் கணவர் என்று சொல்ல யாருமில்லை"

"அப்படியென்றால்... உங்கள் மகன்...?"

"அதுதான் என் வாழ்வில் முதலாவது சூறாவளி" என்று சற்று நிதானித்தவள், தொடர்ந்தாள்.

"நான் மண்டபம் அகதி முகாமிலே, அக்காவின் குடும்பத்துடன் வாழ்ந்துகொண்டிருந்தேன். சகோதரியின் கணவரின் உழைப்பிலேயே ஒரு வருடம் எவ்வித பிரச்சனையுமின்றிக் கழிந்தது. அக்கா முதலாவது குழந்தைப் பேறிற்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மூன்று நாட்களுக்குப் பின் குழந்தை கிடைத்தது. அக்காவும் குழந்தையும், குழந்தை கிடைத்ததன் பின் மூன்று நாட்கள் ஆஸ்பத்திரியிலேயே இருக்க வேண்டி ஏற்பட்டது. இந்த ஆறு நாட்களும் நானே சமைத்து, அக்காவுக்கு உணவு எடுத்துச் சென்றேன். அக்காவின் கணவருக்கும் சாப்பாடு பரிமாறினேன். அடுத்த நாள் அக்காவும், குழந்தையும் வீட்டுக்கு வருவதாக அக்கா தெரிவித்தார். அன்று இரவு, அக்காவின் கணவருக்குச் சாப்பாடு கொடுத்து, நானும் சாப்பிட்டு விட்டுப் படுத்திருந்தேன்" கமலா நீண்ட பெருமூச்சொன்றை விட்டாள்.

"அக்காவின் கணவர் நித்திரையிலிருந்த என் வாயைப் பொத்தியபடி என்னை அசையவிடாமல் மறுகையால் இறுக்கியபடி, என்னை...என் மீது பலாத்காரமாக உடலுறவு கொண்டார். போராடிப் பார்த்தேன். என்னால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. சத்தம் போட்டால் வெளியே தெரிந்து அவமானமென்று அடக்கிக்கொண்டேன்"

கமலாவின் கண்கள் சிவந்து, ஆத்திரமாகக் காணப்பட்டாள்.

"பிறகு..."

"அடுத்த நாள் அக்காவும், குழந்தையும் வீட்டுக்கு வந்தனர். பயமும் வேதனையும் என்னை வாட்டி வதைத்தது. இரவு நடந்தவற்றை அக்காவிடம் கூறினால், அக்காவின் குடும்பத்திற்குள் பிரச்சனை வரும் எனப் பயந்து அக்காவிடம் சொல்லவில்லை. அக்காவின் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும், குழந்தையைப் பராமரிப்பதிலும் நாட்கள் நகர்ந்தன.

எனக்கு மாதவிலக்கு வரவேண்டிய காலத்திற்கு வரவில்லை. என் நெஞ்சிலே இடி விழுந்தது. அக்காவின் கணவருக்கு அதனைத் தெரிவித்தேன். ஒரு மாத்திரை வாங்கிக் கொடுத்தார். சரிவரவில்லை. அன்னாசிக்காய், பப்பாசிக்காய் என

**எஸ்.பி.லெம்பட்**

அறிந்த பலவற்றைச் சாப்பிட்டுப் பார்த்தேன். ஒன்றும் சரிவரவில்லை. இரண்டு மாதம்... வாந்தி, மயக்கம், சோர்வு ஏற்படும் போதெல்லாம் யாருக்கும் தெரியாமல் ஒருவாறு சமாளித்துக்கொண்டேன்" நீண்ட பெருமூச்சொன்றை விட்டாள்.

"ஐந்தாவது மாதம்... வயிறு பருத்துக்கொண்டு வருவதை மறைக்க முடியவில்லை. அக்கா என் நடவடிக்கைகளை அவதானித்துவிட்டு, "என்ன நடந்தது...?" என்று பலமுறை கேட்டாள். அழுதேன். அக்கா எவ்வளவோ முயன்றும் நான் சொல்லவில்லை. அக்கா கோபமடைந்து என்னை ஏசினாள், திட்டினாள், அடித்தாள், சித்திரவதை செய்தாள். இதற்கு யார் காரணமென்று உண்மையைச் சொல்லாவிட்டால் பொலிஸில கொண்டுபோய்த்தான் உண்மையை எடுப்பன் என்று மிரட்டினாள். எந்த முடிவும் எடுக்க முடியாமல் தடுமாறிய நான் மதுரைக்குப் போகும் ரயிலில் ஏறி, எனது சிநேகிதி இருந்த முகாமுக்குச் சென்றேன்.

அவளுக்கும் நான் உண்மையைச் சொல்லவில்லை. அவள் "புருஷன் எங்கே...?" என்று கேட்டதற்கு, அவர் சிலோனுக்குப் போய்விட்டார். வந்துவிடுவார் என்று கூறிச் சமாளித்துக்கொண்டேன்".

"ஒரு முகாமைவிட்டு வேறொரு முகாமுக்கு மாறிப் போவதில் பதிவுப் பிரச்சனைகள், காவற்துறைப் பிரச்சனைகள், உணவுப் பிரச்சனைகள் ஏற்பட்டிருக்குமே..." என்றேன் நான்.

"இல்லை... எனக்கு அப்படி எந்தப் பிரச்சனையுமே வரவில்லை" என்றாள் விரக்தியாக.

"எப்படி...?" ஆச்சரியத்தோடு கேட்டேன் நான்.

"என் வாழ்க்கையே வேதனையாகிவிட்டதால், இப்படித்தான் வாழ வேண்டுமென்றிருந்த நான், எப்படியும் வாழலாம் என்று முடிவு செய்தேன்" என்றாள்.

அவள் மதுரையில் எப்படி வாழ்ந்தாள்? தொடர்ந்து வரும்...

# கூழுக்கு அலையும் கூட்டணி

## மீசைக்கு அழலாமோ?....

அமுதருக்கு 75 வது பிறந்தநாள்! ஒரு காலத்தில் அவர் பேசாத மேடையில்லை! போகாத கிராமம் இல்லை! தந்தை செல்வாவிற்குத் தளபதியாக இருந்து தமிழ் பேசும் மக்களிடையே தேசிய உணர்வை ஊட்டி வளர்த்தவர் அமுதர்!

அமுதருக்கு விழா எடுப்பதில் வேறுபட்ட கருத்தில்லை! ஒரு இனத்தின் விடுதலைக்காகக் குரல் கொடுத்த ஒருவனைப்பற்றி ஒரு சிறு கூட்டம் கூடிக் கதைத்துவிட்டுப் போனதுதான் வேதனை தரும் நிகழ்வு!

அவர் வாழ்ந்த மண்ணில் அவருக்காக எதையும் செய்வதற்குக் கையாலாகாதவர்கள் நடத்திக்காட்டுகிறோம் பார் என்று லண்டனுக்குப் பறந்து சென்றனர். ஒரு முப்பது அல்லது நாற்பது பேரைத்தான் எதிர்பார்க்கிறோம்! விழா நடந்தது என்று செய்தி வந்தால் மட்டும் போதும்! இவ்வாறு விழா நடைபெற முன்னரே சங்கரியார் சொல்லி விட்டார்.

விழாவிற்கு முதல்நாள், விழாவில் எவரும் கலந்துகொள்ள வேண்டாம் என்று கோரி அனாமதேய துண்டுப்பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டது. துண்டுப்பிரசுரத்தின் சூத்திரதாரிகள் புலிகளாகத்தான் இருக்கும் என்று அங்கிருந்த கூட்டணி வட்டாரங்களே தங்களுக்குள் கிசுகிசுத்துக்கொண்டனர். உற்சாகம் குன்றிய நிலையில் விழாவில்கலந்து கொண்டனர் கூட்டணிப்பிரமுகர்கள். கூட்டணியினரின் எதிர்பார்ப்புகளுக்கு மாறாக நூற்றிற்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டனர். அவர்களில் பெரும்பாலானோர் அமுதருக்கு விசுவாசமான இயக்கங்களின் முன்னாள் போராளிகளும் சில புத்தி ஜீவிகளும்தான்.

மாவை தமிழரசுக் கட்சியின் பழைய புராணத்தைப் பாடித் தள்ள, சங்கரி கூட்டணியின் சிலுசிலுப்புப் புராணத்தைப் பாடினார். இருவரும் ஒவ்வொரு பக்கமாக இழுபட்ட நிகழ்வினை சபையோர்கள் வெளிப்படையாகவே புரிந்துவிடனர். பேசி முடிந்து வெளியே வந்த சங்கரியிடம் ஒரு இளைஞன் கேட்டான், "ஐயா! திசைக்கொன்றாக இங்கு வானொலிகள் இயங்குகின்றன. அவைகளை நீங்கள் ஒன்று சேர்க்கமுடியாதா?..." "கட்சிகள் ஒற்றுமையாக இருந்தால்தானே தம்பி வானொலிகள் ஒன்றாகும்" என்று சங்கரி பதில் கொடுத்தார். தமிழ் தேசியக்கூட்டமைப்பினால் தமிழினம் ஒன்றுபட்டு விட்டது என்று கூச்சலிட்டு வரும் சங்கரி எதை வைத்து இப்படிக் கூறினார் என்ற கேள்வி அங்கு எழுந்தது. கடல்கடந்து சென்றும் தனக்கும், மாவைக்கும் இடையில் நடந்த உள்வீட்டு மேடைச்சண்டையைச் சொன்னாரா?... அல்லது கூட்டமைப்புக் கட்சிகளுக்கிடையிலான குத்து வெட்டுக்களைச் சொன்னாரா?

நாய்க்கு நடுக்கடலிலும் நக்குத் தண்ணிதான் என்பது போல் மாவையும், சங்கரியாரும் நீயா? நானா? என்று மல்லுக்கட்டி நிற்க, அமுதரின் பாரியார் திருமதி மங்கையற்கரசி மட்டும் கொஞ்சம் சூடேறிக் கருத்துச்சொன்னார். "எனது கணவருக்கு 'பிளேன்' சோடாதான் பிடிக்கும். புலிகளின் தலைவர் பிரபாகரனை எனது கணவர் சந்ததிக்கச் செல்லும் போது அண்ணை வந்திருக்கிறார் பிளேன் சோடா கொடுங்கள் என்று அவர் உத்தர விடுவார். இப்படியானவர்கள் ஏன் எனது கணவரைச் சுட்டார்கள் என்று விளங்கவில்லை. நீலன் திருச்செல்வம், சறோஜினி யோகேஸ்வரன் போன்றவர்கள் தமிழ் மக்களுக்கு என்ன துரோகம் செய்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை." இவ்வாறு மனம் நொந்து பேசினார் மங்கையற்கரசி.

இறந்த தினம் கொண்டாட வக்கில்லை. பிறந்த தினம் கொண்டாட வந்து விட்டார்கள் என்ற கூட்டணியின் ஆதரவாளர்கள் சிலரது முணுமுணுப்புகளுக்கு மத்தியில் விழா நடந்தேறி விட்டது. எப்படி முடியும்? புலிகளைப் பொறுத்தவரை நடந்தது நடந்ததுதான். அமுதருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு அவரைத் தியாகியாக்கும் செயலாகிவிடும். இனத்திற்கு உரிமை கிடைக்கிறதோ, இல்லையோ? தமக்கு மட்டும் புலிகளின் அங்கீகாரம் கிடைத்தால் போதும் என்ற அளவில் கூட்டணியினர் இருக்கின்றனர். காரணம் புலிகள் மீதுள்ள பாசமோ, பற்றுதலோ அல்ல. பதவி நாற்காலிதான்.! பதவியை விட அமுதர் என்ன பெரிதோ என்ற எண்ணங்களே அவர்களிடம் மேலோங்கியுள்ளது. பிறந்த நாள் நிகழ்விற்கே பெரியளவில் சனம் திரள்வதைப் புலிகள் விரும்பவில்லை என்று சங்கரியார் போன இடத்தில் வாய் திறந்து கூறியிருக்கிறார்.

புலிகளோடு உறவும் தேவை! அமுதருக்கு விழாவும் தேவை! தோளில் ஏற விட்டால் செவியையும் கடிப்பார்கள். பாத்திரம் அறிந்துதான் கூட்டணிக்குப் பிச்சை போட வேண்டும் என்பது சரிதான்! கூழுக்கு அலைந்து கொண்டு மீசைக்கும் அழுகின்றவரை........

**ஊடறுப்பான்**

# சம்பளப் பிரச்சினைக்கு ஐக்கியப்படாத தலைமைங்க

## உரிமைங்கள எப்பிடி வென்றெடுப்பாங்க...?

தொழிலாளர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கைக்காக ஐக்கியப்படாத தலைமைகள் உரிமைகளை வென்றெடுப்பதற்காக ஐக்கியப்படுமா?

கடந்த மாதங்களில் தொழிலாளர்களின் சம்பள உயர்வுப் போராட்டத்தில் தொழிற்சங்கத் தலைமைகள் பத்திரிகைகளில் அறிக்கைப் போராட்டத்தையே நடத்தின.

சிலர் தொழிலாளர்களுக்கு வெற்றி என்கிறார்கள். சிலர் தொழிலாளர்களுக்குத் துரோகம் இழைத்துவிட்டதாகக் கூறுகிறார்கள். மேல் கொத்மலை நீர்த் தேக்கத் திட்டம் சம்பந்தமான பிரச்சினையிலும் கூட ஒரே அரசில் அங்கம் வகிக்கும் இரு மலையக அமைச்சர்களும் வெவ்வேறு கருத்துக்களையே கொண்டிருக்கின்றனர். மக்களோ இரண்டு தோணியில் கால் வைத்தது போல் புரியாமல் தவிக்கிறார்கள். தலைமைகள் மக்களுக்காகத் தீர்வு காண்கிறார்களா? அல்லது தலைமைகளுக்காகத் தீர்வை மக்கள் ஏற்றுக் கொள்கிறார்களா?

உதாரணமாக இங்கு ஒன்றைக் குறிப்பிட வேண்டும். இது கற்பனையல்ல நிஜம். பெருந்தோட்டப் பகுதிகளில் இறைச்சிக்காக மாட்டைக் கொள்வனவு செய்யும் வியாபாரிகள் தங்களுடைய புரோக்கர்களை மாட்டு உரிமையாளர்களிடம் அனுப்பி அதற்கு ஒரு விலையை நிர்ணயித்துவிடுவர். அதன் பின்பு அந்த புரோக்கர் அந்தப் பக்கமே செல்ல மாட்டார்.

அந்த மாட்டை வாங்க வருவோர் அதிக விலை என்று கூறி வாங்காமல் விடுவார்கள். கடைசியாக விற்க முடியாமல் இருக்கும் அந்த மாட்டை முன்னர் விலையை நிர்ணயித்த வியாபாரியின் வேறொரு புரோக்கர் அங்கு சென்று அதே மாட்டைக் குறைந்த விலைக்கு வாங்கி விடுவார்.

அதேபோல்தான் தொழிலாளர்களின் சம்பளப் போராட்டத்தின் நிலையும். ஏலம் போடும் அளவுக்குத் தொழிலாளர்களின் சம்பளம் 141, 142, 152, 160, 180. 200 ரூபாயாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணத்தில் அறிக்கைப் போராட்டம் நடத்தியதை நாம் அறியாதவர்கள் அல்ல. கடைசியில் 147 ரூபாவாவது தொழிலாளர்களுக்குக் கிடைத்தது பெரிய விடயமாக இருந்தாலும் முதலாளிமார் சம்மேளனமும், தொழிற்சங்கங்களும் கையெழுத்திடும் ஒப்பந்தத்திலேயே தங்கியிருக்கின்றன.

தொழிலாளிகளோ எத்தனை ரூபா சம்பள உயர்வுக்காகப் போராடுவது என்ற தெளிவில்லாமல் இருக்கின்றார்கள். எந்தத் தொழிலாளியும் அதிக பட்சமான சம்பளத்தை வாங்க விரும்பாமல் விடுவார்களா? அப்படி இருக்கும் போது முதலாளிமாரின் தீர்மானத்திற்கு வந்து விடுவது நல்லதல்ல. இதற்கு எப்போதுமே கிளிப்பிள்ளை சொல்வதைப் போன்று தலைவர்கள் சொல்வதைக் கேட்டுப்பழகிப் போன தொழிலாளர்கள் இனிமேலாவது சுயமாகச் சிந்திக்க வேண்டும். தங்கள் சுயமான, தெளிவான, ஐக்கியமான முடிவுகளின் மூலமாகத் தொழிற்சங்கத் தலைமைகளுக்கு நெருக்கடியைக் கொடுக்க வேண்டும். இது இவ்வாறிருக்க பெருந் தோட்டத் தொழில் துறை அமைச்சரோ அதற்கு ஒருபடி மேலே போய் 141 ரூபா போதும் என்று முடிவு எடுத்துவிட்டார். அரசாங்கம் இந்தச் சம்பள உயர்வு விடயத்தில் தலையிடாது என்ற அறிக்கையையும் வெளியிட்டார்.

இதே வேளை யதார்த்தத்துக்கு ஒவ்வாத போராட்டத்தை முன்னெடுப்பது தற்போதைய நிலையில் கம்பனிகளுக்குச் சாதகமாக அமைந்துவிடக்கூடாது என்பதில் தொழிலாளர்கள் நிதானமாக செயற்படுவதும் அவசியம்.

எப்பொழுதுமே தொழிலாளர்களின் பிரச்சினை தீர்ந்துவிடக் கூடாது என்பதற்காக பெருந் தோட்டத்தின் ஒவ்வொரு கம்பனிகளும் தனித்தனியே தங்கள் முடிவுகளை முரணாகவே வெளியிடும். காலம் காலமாக தொழிற் சங்கங்களும் தொழில்துறை நிர்வாகங்களும் பிரச்சினைகளை தங்களுக்கே சாதகமாக்கிக் கொள்வதில் தெளிவாக இருக்கிறார்கள். அதைவிட தொழிற் சங்கங்களிடையேயான போட்டி நிலைமை முதலாளிமார் சம்மேளனத்துக்கு வாய்ப்பாகவும், தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கான தீர்மானித்த தீர்வாகவும் அமைந்து விட்டது.

இவ்வாறு ஐக்கியப்படாத தலைமைகள் தற்போது தாய்லாந்தில் நடைபெற இருக்கும் இனப்பிரச்சனை சம்பந்தப்பட்ட புலிகள்-அரசு பேச்சுவார்த்தையில் தமிழர்கள் சார்பாகப் புலிகளும், முஸ்லீம்கள் சார்பில் ஹக்கீமும் கலந்து கொள்வதாக இருக்கின்ற இவ் வேளையில் மலையக மக்கள் சார்பாக யார் கலந்து கொள்வது என்பதில் எவ்வாறான கருத்தொற்றுமையைக் கொள்வார்கள்? வடக்கு, கிழக்கு, தெற்கு, மலையகம் என்று தனித் தனியாக பிரச்சினைகளைப் பார்க்க கூடாது என்றும், தாய்லாந்துப் பேச்சு வார்த்தையை நாம் நழுவ விடக்கூடாது, அரசாங்கத்துடன் பேசித்தீர்ப்பது பாமரத்தனமான சிந்தனையாகும் எனவும் மலையக அமைச்சர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ள இந் நிலையில் இன்னொரு அமைச்சரோ தாய்லாந்தில் மலையக மக்கள் சம்பந்தமாகப் பேச வேண்டிய அவசியம் இல்லை என்கிறார்.

தற்போது ஒரு சில பா.உ. சேர்ந்து இந்திய வம்சாவளி பா.உ. குழு என்று உருவாக்கியிருக்கிறார்கள்.


இவ்வாறே எதிர்வரும் 9ம் திகதி அரசாங்கத்தால் மேற்கொள்ளவிருப்பதாகக் கூறப்படும் மக்கள் சக்தி இயக்கப் பேரணியில் இத் தொழிற்சங்கங்கள் மக்களைத் திரட்டிக் கொழும்புக்குக் கொண்டு வருவதில் ஏட்டிக்குப் போட்டியாக பலத்தைக் காட்ட முயல்கின்றன.

மலையகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து கொண்டுவரப்படும் மக்கள் கூட்டத்தை தனித்துவ ஊர்வலங்கள் மூலம் வெளி உலகுக்குக் காட்ட முற்படும் தலைவர்கள் பற்றி இன்னுமா மக்கள் தெளிவில்லாமல் இருக்கின்றார்கள்? தொடரும் நிலைமைகள் மலையக மக்களுக்கு விடிவைப் பெற்றுக் கொடுக்குமா? அடிப்படையில் உண்மையான விடயங்கள் என்ன என்பதை மக்களே தீர்மானியுங்கள். தேர்தலில் தீர்மானிக்காதீர்கள். தங்கள் தலைவர்களின் துரோகத் தனங்களுக்கு அந்தந்தப் பிரதேசங்களிலேயே முற்றுப் புள்ளி வைத்து ஐக்கியப்படுங்கள்.

மலையக மக்கள் சக்தி கடந்த காலங்களிலெல்லாம் ஏதாவதொரு பெரும்பான்மைக் கட்சிக்கு, ஆட்சியிலுள்ள அரசாங்கங்களுக்கு முண்டு கொடுக்கப் பயன்பட்டு வந்ததேயல்லாமல், தமக்காக, மலையக மக்களின் உரிமைகள், தொழிற்சங்க உரிமைகள், ஆகியவற்றை ஈட்டிக் கொள்ளப் பயன்படுத்தப்படவில்லை. தற்போதும் அரசாங்கத்தின் புஜ பலத்துக்கு ஒரு பக்கத் துணையாகவே மலையக மக்கள் திரளைப் பயன்படுத்த விளைகிறார்கள். அதேவேளை மலையக மக்களின் சம்பளப் பிரச்சனை குறித்து அரசாங்கம் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. பார்க்காதது மட்டுமன்றி தாம் இப் பிரச்சனையில் தலையிட மாட்டோமென்று விலகி நின்று வேடிக்கை பார்த்தது. அத்தோடு பெருந்தோட்டத் துறைக்கான அமைச்சரோ, மிகச் சாதாரணமாக, முதலாளிகள் நிர்ணயித்த 142 ரூபா சம்பளத்தையே தொழிலாளர்களுக்கு திருத்திகரமாகப் போதுமானதென வக்காலத்து வாங்கியிருந்தார். ஒரு தொழிற்சங்கத் தலைவர் கேட்டதுபோல,அவர் முதலில் 142 ரூபா

**மலையூரான்**

சம்பளத்தில் தனது பிள்ளைகளைப் படிப்பித்து, வீட்டைப் பராமரித்து குடும்பத்தை நடத்திக் காட்டிவிட்டு, அது தொழிலாளிக்குப் போதுமா இல்லையா எனக் கூறட்டும். எது எப்படியானாலும், மீண்டும் மலையக மக்கள் சக்தி அரசாங்கத்திற்குத் தேவைப்படுகிறது. எமது தலைவர்கள் அதனைத் தாரை வார்க்கத் தயார். ஆனால், அரசாங்கம் கேட்டவுடன் தமது விசுவாசத்தைக் காட்டத் தயாராகும் இவர்கள் எப்போது நாம் கேட்பதற்கு இவ் அரசாங்கங்களைச் சம்மதிக்க வைக்கப் போகிறார்கள். எமது பிரச்சனை தாய்லாந்திலும் தீர்க்கப்படப் போவதில்லை. இங்கும் தீர்க்கப்படப் போவதில்லை. பிரச்சனையை ஏன் தீர்க்க வேண்டும். தீர்த்து விட்டால் எம் தலைவர்களுக்கு அரசியலே இல்லாது போய்விடுமல்லவா?



# காற்றுவாக்கில்... 13

### வடக்கு நோக்கி 'ரூபவாஹினி'

"வானலைகளின் சமாதானப் பாலமாகும் இலங்கையின் முதன்மைத் தொலைக்காட்சிச் சேவை மீண்டும் யாழ்ப்பாணத்தில்" என்ற அரைப் பக்க பத்திரிகை விளம்பரத்துடன், 'ரூபவாஹினி' இப்பொழுது வட பகுதிக்குச் சென்றுள்ளது. அது 'சத்திய வாஹினி'யாக வேண்டும் என்று ஊடகத்துறை அமைச்சர் வாழ்த்துத் தெரிவித்துள்ளார். 1982 'ரூபவாஹினி' ஆரம்பிக்கப்பட்டது முதல் பீதுருதாலகல, (வவுனியா) மடுக்கந்தை, கொக்காவில் மூலம் வட பகுதிக்கு 'ரூபவாஹினி'யின் ஒளிபரப்புக்கள் சென்றடைந்தன. பின்னர், 2 ம் திகதி நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தமிழ் அறிவிப்பாளர் குறிப்பிட்டவாறு மடுக்கந்தைக் கோபுரம் "பழுதடைந்த" பின்னர், சில ஆண்டுகளாக நிகழ்ச்சிகள் தடைப்பட்டன. பின்னர், 1996 ல் மேற்கொள்ளப்பட்ட முயற்சியில் பீதுருதாலகல, (வவுனியா) மடுக்கந்தை, ஆனையிறவு, பலாலி மூலமாக நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டன. ஆனையிறவுக் கோபுரம் "பழுதடைந்த" பின்னர் மீண்டும் 2000 ல் அது தடைப்பட்டிருந்தது. இப்பொழுது, அதாவது 02.09.2002 முதல் பீதுருதாலகல, 'வவுனியா' மடுக்கந்தை, மன்னார் (தொலைத் தொடர்புக் கோபுரம்) மூலமாக நிகழ்ச்சிகளை வடக்கு நோக்கி ஒளிபரப்ப ஆரம்பித்திருக்கிறார்கள். இது உண்மையில் பாராட்டப்பட வேண்டியவிடயம்தான். தென்னிந்தியச் சினிமாப் படங்களையும், பாடல்களையும் நம்பியிருக்கும் "வாஹினி"களை முந்தியடித்துக்கொண்டு 'ரூபவாஹினி' வடக்கு நோக்கிச் சென்றிருப்பது வரவேற்க வேண்டியதே... அதேவேளையில், நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரையில் 'ரூபவாஹினி' கவனமெடுக்க வேண்டியது முக்கியமாகும். கொழும்பிலுள்ள கலையகத்தில் தயாரிக்கப்படும் நிகழ்ச்சிகள் மக்கள் மத்தியில் இப்பொழுதெல்லாம் எடுபடுவது குறைவு. மக்கள் தம்மைப் பற்றிய, அன்றாட வாழ்வியலைப் பற்றிய அம்சங்களையே விரும்புவர். எனவே, வடபகுதிக்குச் சென்று ஒளிப்பதிவுகள் செய்து அவற்றை ஒளிபரப்ப ஆவன செய்ய வேண்டும். வட பகுதி அவலங்களைத் தென்பகுதி மக்களும் அறியக்கூடிய வாறு நிகழ்ச்சிகள் இடம்பெற வேண்டும். அங்குள்ள மக்களின் கலை, கலாசார விழுமியங்களை எடுத்துக்காட்டும் நிகழ்ச்சிகளை ஒளிபரப்ப வேண்டும். பாதுகாப்புக் காரணங்களைக் காட்டிப் பூச்சாண்டி காட்டிய காலம் மாறிக்கொண்டு வரும் இவ் வேளையில் நாட்டின் மக்கள் அனைவரையும் சமமாகக் கருதிச் செயற்பட்டால், அன்று அறிவிப்பாளர் குறிப்பிட்ட "தேசிய தொலைக்காட்சிச் சேவை"யாக இது மிளிரும் என்பதை மட்டும் இப்போதைக்குக் 'காற்றாடி' குறிப்பிட விரும்புகிறது.

### இவ்வளவுதானா?

இந் நாட்டுத் தொலைக்காட்சிச் சேவைகள் வழங்கும் தமிழ் நிகழ்ச்சிகளின் விபரங்கள் வாராந்திரிகளில் வெளிவருகின்றன. ஆராய்ந்து பார்த்ததில் 100 க்கு 100 திறைசேரிக்குச் சொந்தமான ஐ.ரி.என். மிகக் கவனமாகத் திட்டமிட்டு வழங்கும் தமிழ் நிகழ்ச்சிகள் இவைதான்.

* தினமும் மாலை 5.45 - 6.00 வரை தமிழில் செய்திகள்
* சனிக்கிழமைகளில் பகல் 1 மணிக்குத் தமிழ்த் திரைப்படம்

புதிய நிர்வாகத்தினரிடம் தமிழ் இரசிகர்கள் இதைவிடவும் வேறு எதையும் கேட்கலாமா? இன ஐக்கியத்திற்கு இவர்களின் 'பங்களிப்பு' இவ்வளவுதான்! அதாவது, 1 வீதமே!

### சொந்தங்களைத் தேடி...

இப்படி ஒரு நிகழ்ச்சி இலங்கை வானொலி தென்றலில் பி.ப. 2 முதல் 3 மணிவரையும், இரவு 8 முதல் 9 மணிவரையும் ஒலிபரப்பாகிவருகிறது. வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்குப் போக்குவரத்து மற்றும் தொடர்புகள் அற்ற நிலையில் சில ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்ச்சி மூலம் தமது இடங்களிலிருந்து வேறிடங்களில் உள்ள சொந்தங்களுக்குச் செய்தி அனுப்புவதில் கரிசனை காட்டப்பட்டது. போக்குவரத்து நிலைமைகள் சீரடைந்து வரும் இவ் வேளையில், இந் நிகழ்ச்சி தேவைதானா என்பது வேறு விடயம். சென்ற வாரம் இரவு ஒலிபரப்பில், ஓர் அறிவிப்பாளர் செய்தி ஒன்றினை வட பகுதியில் உள்ள 'சொந்த'த்திற்குத் தெரிவித்தார். *அதை மீண்டும் ஒரு தடவை கூறினார்.* இதில் என்ன விசேஷம்? என்று பின்னர் விசாரித்துப் பார்த்ததில் உண்மை விளங்கியது.

**காற்றாடி**

அதாவது சக அறிவிப்பாளர் ஒருவரின் வீட்டில் பணிபுரியும் பணிப் பெண் ஊருக்குப் போய் நீண்ட நாட்களாக வரவில்லையாம். அவரை உடன் (வருமாறு) தொடர்புகொள்ளுமாறு (அறிவிப்பாளர் பாஷை இது) கூறப்பட்டதுதானாம் அச் செய்தி. துஷ்பிரயோகத்துக்கு மறுபெயர் தானா சொந்தங்களைத் தேடி...!

### வடக்கு நோக்கி வானொலி?

அரச ரூபவாஹினி, வடக்கு நோக்கிச் செல்வதற்கு மும்முரமாக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமானால், அரச வானொலி மட்டும் நிகழ்ச்சிகளை வடக்கு நோக்கி ஏன் எடுத்துச் செல்லக் கூடாது? - இது ஒரு வாசகரின் கேள்வி. வவுனியா அருகே ஈரற்பெரியகுளத்தில் அமைக்கப்பட்டுள்ள ஓர் ஒலிபரப்பி மூலம் மத்திய அலைவரிசையில் நிகழ்ச்சிகள் வடக்கு நோக்கி ஒலிபரப்பாகி வருகின்றன என்கிறார்கள். ஆனால், தெளிவில்லை. இருந்தும் இல்லாத ஒரு நிலை. இதைக் கருத்திற் கொண்டு, வவுனியாவில் உள்ள பண்பலை ஒலிபரப்பியை யாழ் நகரில் பொருத்தி நிலைமையைச் சரி செய்யலாம் என்று யோசனை தெரிவிக்கப்பட்டபோது, அந்த ஒலிபரப்பியை வேறிடத்திற்கு எடுத்துச் செல்லக் கூடாதெனத் தடை விதிக்கப்பட்டுள்ளதாம். எனவே, மாற்று வழிபற்றி அதிகாரத் தரப்பினர் யோசித்து வருகிறார்களாம். நிலைமை சீராகுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்!

### 650 ஊழியர்கள் மட்டுமே!

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைச் சீரமைக்கும் நோக்குடன் நிபுணர்கள் குழுவொன்று அறிக்கை தயாரித்திருப்பதாகக் கேள்வி. அதில் ஒரு சிபார்சு மிக முக்கியமானது - ஊழியர்களின் தொகையினை 1250 ல் இருந்து 650 ஆகக் குறைத்தல். இதை எப்படிச் செயற்படுத்துவது என்று அதிகாரிகள் தடுமாறுகின்றனராம். வரும் வாரங்களில் திடுக்கிடும் செய்திகள் சில வெளிவரலாம்!

# ஸ்போர்ட்ஸ்

## கிரிக்கெட்டை ஆட்டுவிக்கும் அனுசரணையாளர்கள்

ஐ.சி.சி. உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பமாக இன்னமும் ஒரு வாரகாலம் மாத்திரமே எஞ்சியிருக்கும் நிலையில் இந்திய அணியின் நட்சத்திர வீரர்களான சச்சின் டெண்டுல்கர், சௌரவ் கங்குலி போன்றோர் கொழும்புக்கான தமது வருகையை உறுதி செய்யவில்லை.

விளையாட்டு வீரர்கள் அனுசரணை நிறுவனங்களுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தங்களின் சில அம்சங்களை 60 நாட்களுக்கு இடைநிறுத்தி வைக்க வேண்டும் எனச் சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் கோரியிருப்பதே தற்போதைய சர்ச்சைக்குக் காரணமாகும்.

இந்த மினி உலகக் கிண்ணப் போட்டியை நடத்த பெப்ஸி நிறுவனம் சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலுக்கு அனுசரணை வழங்குகின்றது.

ஆனால், பெப்ஸி நிறுவனத்துடன் போட்டி வியாபாரத்தில் ஈடுபடும் பொருட்களுக்கான விளம்பரங்களைத் தமது உடையிலோ, மட்டையிலோ பொறித்துக் கொண்டு விளையாடுவதைத் தவிர்க்க வேண்டும். இந்த நிபந்தனைக்கு வீரர்களை இணங்கச் செய்ய வேண்டியது ஐ.சி.சி.யின் பொறுப்பு. இந்த முன் நிபந்தனைகளின் அடிப்படையிலேயே ஐ.சி.சி.க்கு போட்டியை நடத்த பெப்ஸி நிறுவனம் நிதி உதவி செய்யும்.

சகல அணிகளிலும் உள்ள முன்னணி வீரர்கள் உள்ளூர் குடிபான உற்பத்தி நிறுவனங்களுடனோ அல்லது கொக்காகோலா போன்ற சர்வதேச நிறுவனங்களுடனோ விளம்பர ஒப்பந்தங்களைச் செய்து கொண்டுள்ளனர். அவற்றை இடைநிறுத்திவிட்டு ஐ.சி.சி. போட்டிகளில் கலந்து கொண்டால் போட்டி நடைபெறும் காலகட்டத்தில் தாம் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கும் நிறுவனங்களிடமிருந்து பணம், பரிசுப் பொருட்கள் போன்றன கிடைக்காமல் போகும் என்ற கவலையே கிரிக்கெட் வீரர்களின் தயக்கத்திற்குக் காரணம்.

நாட்டு நலன் கருதி முன்னணி வீரர்கள் இந்தப் போட்டித் தொடரில் பங்கு கொள்ள வேண்டும் என்று இந்தியாவில் பரவலான கோரிக்கைகள் எழுந்துள்ளன.

போட்டிகளுக்கென ஐ.சி.சியினால் வழங்கப்படும் பணத்தின் 30 சதவீதத்தைத் தமக்குத் தர வேண்டும் என்ற வீரர்களின் நிபந்தனையை ஏற்றதன் பின் இலங்கை வீரர்களும், இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையும் உடன்பாட்டுக்கு வந்திருக்கிறது.

அனுசரணையாளர்கள் வழங்கும் பணத்துக்காகக் கிரிக்கெட் போட்டியில் பங்குகொள்ளப் பேரம் பேசுபவர்கள், சூதாட்டக்காரர்களுடன் பணத்திற்காகப் போட்டிகளைப் பேரம் பேசமாட்டார்கள் என்று என்ன நிச்சயம்? என விமர்சகர்கள் கேள்வி எழுப்புகின்றனர். ■

# இலக்கிய நயம்

தருவது முழடியல்யன்

## அழகுப் புகழ்ச்சி அரிவையர்க்கு இன்பம்

தனியே அமர்ந்திருந்த கௌசல்யா, குத்திட்ட முழங்காலில் தன் முகத்தை வைத்திருந்தாள். கூந்தல் ஏறத்தாழ அவளை முழுவதுமாக மூடியிருந்தது. தூரத்துப் பார்வையில் ஒரு சிறு கறுப்புக் குன்றாகவே தெரிந்தாள். நிலவொளியில் பளபளத்துக் கொண்டிருந்த அந்தச் சிறு வட்டமுகம், அருகில் சென்று பார்ப்பவர்களுக்கே தெரியும்; அந்தக் கண்களில் திரண்டிருந்த நீர்த்திரையையும் கூட. கண்களிலிருந்து இறங்கிய கண்ணீர்த் துளி ஒன்று அவள் முழங்காலுக்கும் மோவாய்க்கும் இடையிலிருந்த புறங்கையின் மீது வீழ்ந்து சிதறியது. திடுக்கிட்டுக் கையைத் துடைத்தபடி சுற்று முற்றும் பார்த்தாள். அவள் உள்ளத்தைப் போலவே வெறிதாய்க் கிடந்தது சுற்றுப்புறம்! விரல்களால் விழிகளையும் துடைத்துக் கொண்டாள். வேறு யோசனை எதையேனும் மனதுக்குள் கொண்டுவர முயற்சித்தாள். தாயின் மடி விட்டிறங்காக் குழந்தை போல மனம் அடம்பிடித்தது. நிமிர்ந்து பார்த்தாள். வானில் சந்திரனும் தனிமையிலிருந்தான். தன் கதிர்களை வீசி அவள் தனிமையை அவன் விசாரிப்பதாகத் தோன்றியது. தன் தனிமையை மறந்து பளீரெனச் சிரித்துக் கொண்டிருப்பதாகத் தோன்றிய நிலவைப் பார்த்த போது, கௌசல்யாவுக்குப் பாரி மகளிரின் ஞாபகம் வந்தது. தந்தையோடும் சுற்றத்தோடும் சுதந்திரமாக இருந்து பார்த்த வெண்ணிலவைத் தனியே பார்க்க நேர்ந்த போது வெடித்த அவர்களது துயரம் நினைக்கும் போதெல்லாம் விம்ம வைப்பது.

சம்பவன் திரும்பி வருவான் என்ற நம்பிக்கை இருக்கும் போதே என்னால் இந்தத் தனிமை தாங்கிக் கொள்ள முடியாததாயிருக்கிறதே... தந்தை இனித் திரும்ப வரவே மாட்டார் என்றறிந்த பாரி மகளிரின் தனிமைத் துயர் எத்துணை கொடியதாயிருந்திருக்கும் என்று எண்ணிப் பார்த்தாள். சம்பவன் இல்லாத் துயரம் எனக்கு ஏன் இவ்வளவு பெரிதாக இருக்கிறது என்று யோசித்தாள். திரும்பவும் சம்பவனிடமே சென்று, மனம் நங்கூரமிட்டிருப்பதை உணர்ந்து தன்னைச் சலித்துக் கொண்டாள். நேற்று இதே இடத்தில் தன்னோடு அவனிருந்தான் என்பது அந்த நிலவுக்கும் தெரியும் என்று நினைத்தாள்.

சம்பவன் அவள் முகத்தைத் தன் கரங்களில் ஏந்தியிருந்தான். கண்களையே ஊடுருவி உள்ளே நுழைபவன் போலப் பார்த்தான். "எந்தத் தேசத்தில் இருக்கும்போதும் இந்தக் கண்கள் என்னைத் தொந்தரவு செய்யுமே..." என்றான்.

"அப்போ பார்க்க வேண்டாம்" என்றாள் முகத்தைத் திருப்பிக் கொண்டு.

"இரவுகள் தோறும் இந்தக் கூந்தலின் நினைவு என்னைப் பாடாய்ப் படுத்தப் போகிறது" என்றான் சம்பவன், அவளது அடர்ந்த கூந்தலைக் கைகளில் ஏந்திப் பிடித்தபடி.

கௌசல்யா மீண்டும் திரும்பினாள்.

"அவ்வளவுதானா... வேறு வர்ணனைகள் இல்லையா...?" என்றாள் முகத்தை உர்ரென்று வைத்தபடி.

"ஏன் இல்லை? தொட்டவுடன் வழுக்கி நீளும் இந்தத் தோள்கள், முடிவில் பிரமன் இங்கே வைத்துவிட்ட இந்தக் காந்தள் மலர்கள்,



இதோ என்னைத் தடுக்கி வீழ்த்தும் இடைச் சரிவு, கீழே..."

"போதும் போதும்" என்று அவன் வாயைப் பொத்தினாள் கௌசல்யா.

"விட்டால் எனதிந்த உடலைப் பற்றியே ஒரு நாள் முழுவதும் பேசிக் கொண்டிருப்பீர்கள்.... நாளை புறப்பட்டு முதலில் எங்கே போகிறீர்கள்? எப்போ திரும்புவீர்கள்? நாளைக்கே போகத்தான் வேண்டுமா? இன்னும் நாலு நாள் கழித்துப் புறப்படலாமே..." என்று தொடர்ந்தும் மூச்சுவிடாமல் பேசிக்கொண்டு போனவளை இடைமறித்தான் சம்பவன்.

"உள்ளங்களை விடு. உன் உடல் என்னை மயக்கி நிலை தடுமாற வைப்பது போல், என் உடல் உன்னை மயக்குவதில்லையா, உண்மையைச் சொல்!" என்றான்.

அவள் அவனைச் சற்று நேரம் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு சொன்னாள்.

"கூடியிருக்கும் இந்தக் கிளர்ச்சியான தருணங்களில் உன் உடம்பின் மீது எனக்கு மயக்கமும், மோகாவேசமும் ஏற்படுவது உண்மைதான். ஆனால், உங்களைப் போல சதா சர்வ காலமும் உடம்பை வர்ணித்துக் கொண்டிருக்கத் தோன்றுவதில்லை..."

"சரி, சதா சர்வகாலமும் இல்லை.... என் உடலைப் பார்க்கிற போதெல்லாமாவது உனக்குக் கிளர்ச்சி உண்டாகுமா, இல்லையா... மறைக்காமல் சொல்!"

"ச்சீ.... இல்லை, எனக்கு அப்படியெல்லாம் உண்டாவதில்லை..."

"அப்போ எங்களுக்கு மட்டும்தானா பெண்களின் உடலில் இத்தனை கவர்ச்சி ஏற்படுகிறது? இதென்ன படைப்பு விநோதம்?"

"விநோதமுமில்லை ஒரு மண்ணாங்கட்டியுமில்லை. இப்படி வர்ணித்து வர்ணித்தே நீங்களெல்லாம் இந்த மாதிரிப் பேய் பிடித்து அலைபவராகி விட்டீர்கள்..." என்று சிரித்தாள் கௌசல்யா.

"சிரிக்காதே! நீ சிரிப்பது கூட என்னை என்னமோ செய்கிறது"

கௌசல்யா அவன் தலையைச் சாய்த்துத் தன் நெஞ்சில் வைத்துக் கொண்டாள். விரல்களால் அவன் காதுக்குப் பின்னுள்ள தலை முடியை அளைந்தபடி சொன்னாள்." எங்களுக்கு ஆண்களை வர்ணிக்க வேண்டும் போல் தோன்றாவிட்டாலும், நீங்கள் எங்களை வர்ணிப்பது ரொம்பப் பிடிக்கும்."

"வர்ணிப்பது மட்டும்தானா?" என்று உதடுகளை அவள் காதருகே கொண்டு போய்க் கேட்டான் சம்பவன்.

"ச்சீ" என்றபடி தன் கன்னத்தால் அவன் உதடுகளை அழுத்தி மூடினாள் கௌசல்யா.

திடீரென்று சுய நினைவுக்கு வந்தவளாக ஏங்கினாள் கௌசல்யா. "அப்படியென்ன பொருள் வேண்டிக் கிடக்கிறது நமக்கு. அதற்காகக் காட்டிலும் வெயிலிலும் போய் அலைய வேண்டுமா? என்னை இப்படித் தனியே தவிக்க வைத்து விட்டு...!" பெருமூச்சு விட்டபடி தன் அங்கங்களைப் பார்த்தாள். அவன் ரசித்துச் சிலாகித்துப் பேசிய அந்த இடங்கள் ஒவ்வொன்றும் அவளைப் பார்த்து நகைத்தன.

கண்ணும் தோளும்
தண் நறும் கதுப்பும்
திதலை அல்குலும்
பல பாராட்டி நெருநலும்
இவணர் மன்னே இன்றே
. . . . . . . . . . . . . .
உவர் எழு களரி
ஓமை அம்காட்டு
வெயில் வீற்று இருந்த
வெம்பலை அருஞ்சுரம்
ஏகுவர் என்ப தாமே
தம் வயின் இரந்தோர்
மாற்றல் ஆற்றா இல்லின்
வாழ்க்கை வல்லா தோரே.

(நற்றிணை 84: 1-3, 8-12)

## சிந்தியா பதில்கள்

நினைத்து நினைத்துச் சிரிக்க வைக்கும் ஜோக்குகளைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ஜே. லக்கி, பெரியகல்லாறு.

ஒரு நல்ல ஜோக்குக்கு நாம் சிரிப்பது ஒரு விதமான திடீர் கண்டுபிடிப்பால், அதிர்ச்சியால்தான். சில ஜோக்குகளை மீண்டும் மீண்டும் கண்டு பிடித்துக் கொண்டிருக்கிறீர்களாக இருக்கும்.

❖❖

அடுத்தடுத்த வாரம் தாய்லாந்தில் நடக்கப் போகும் பேச்சுவார்த்தைக்குப் பிறகு என்ன நிகழும்?

எம்.குணசீலி, கொழும்பு-13.

மக்களின் கவனத்தையெல்லாம் ஜனாதிபதியுடனான மோதலில் குவிக்க வேண்டியிருக்கும்.

❖❖

ஆமிர்டேஜ் வருகை எதைக் காட்டுகிறது?

எம்.ஐ. முஸம்மில், புத்தளம்

இலங்கை அரசின் நிர்க்கதி; இந்தியாவின் மௌனம்; அமெரிக்காவின் வாய்ப்பு!

❖❖

கொலையும் ஒரு விளையாட்டா?

மொஹமட் அஸ்ரப், நிககொள்ள.

"கொலையும் ஒரு கலை" என்பதாக மந்திரிகுமாரி படத்தில் கருணாநிதி வசனம் எழுதினார். விளையாட்டாகவும் தான் ஆகிவிட்டது.

❖❖

தமிழில் எழுதும் நவீன எழுத்தாளர்களின் சில கட்டுரைகளே புரியவில்லையே?

மு.விமல், பூண்டுலோயா.

இதே பிரச்சனையில் ஒருவர் இணைய வலைத்தளத்தில் விளம்பரமே போட்டிருக்கிறார். அத்தகைய தமிழ்க் கட்டுரைகளை வாசித்துப் புரிந்து கொண்டு அதை மீண்டும் தமிழில் மொழிபெயர்த்துத் தருவதற்கு மொழி பெயர்ப்பாளர் வேண்டும் என்று கேட்டிருக்கிறார். விண்ணப்பிப்பவர்களுக்குத் தேவையான தகுதிகளாகப் பின் வருவனவற்றைக் குறிப்பிட்டிருக்கிறார்:

- கமா கமாவாகப்போட்டு ஒரே சொற்றொடராக வரும் பந்தியை உடைத்துப் புரிந்துகொள்ளும் திறனுள்ளவராக இருக்க வேண்டும்.
- ஏற்கனவே இருக்கும் தமிழ் வார்த்தைகளை விட்டுவிட்டு புதிதாகக் கண்டுபிடிக்கப்படும் அதே பொருளுள்ள தமிழ் வார்த்தைகள் பற்றித் தெரிந்தவராக இருக்க வேண்டும்.
- 'கருத்தியல்கள்', 'அடையாளம்', 'முன்வைத்தல்', 'சட்டகம்', 'கதையாடல்கள்', 'பாங்கிற்கான மொத்த உரு', 'பேசப்படும் பாங்கிற்கான அடிப்படை', 'வடிவம் கொள்தல்','வரலாற்றுப் புரிதல்கள்', 'உரையாடல் களம்', 'சொல்லாடல்', 'பின்நவீனத்துவம்', 'புரிந்துணர்தல்' பிரச்சனைப்பாடு' இன்னபிற வார்த்தைகள் தேவையில்லாமல் வரும் போது கண்டுகொள்ளாமல் இருக்க வேண்டும்.
- தலையைச் சுற்றி மூக்கைத் தொடும் கலையில் வல்லவராக இருக்க வேண்டும்.


❖❖

அர்ஜுனின் ஏழுமலை எப்படி?

பி.விக்னேஸ்வரன், ஹட்டன்.

தெலுங்கிலிருந்து வந்த 'சங்கராபரணம்', 'சலங்கை ஒலி' போன்ற படங்களை ரசித்திருக்கிறேன். ஆனால், பெரும்பான்மைத் தெலுங்கு ரசிகர்களுக்காக எடுக்கப்பட்ட படங்களைத் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. விஜயசாந்தி, ராஜசேகர் படங்களோடு பிரகாஷ் ராஜுக்கு தேசிய விருது கிடைக்கக் காரணமாயிருந்த 'அந்தப்புரம்' படத்தையும் எனக்கு ரசிக்க முடியவில்லை.

❖❖



அர்ஜுன்

பாரதிராஜா என்ன செய்கிறார்?

எஸ்.பாமரன், கண்டி.

நல்ல படங்களைத் தந்த கலைஞன், தன் மகனுக்காகத் தமிழ் ரசிகர்களிடம் கோபம் கொண்டு விட்டார் போல் தோன்றுகிறது.

❖❖

சிந்தியா, புதிய நண்பர்களைச் சந்திக்கும்போது முதலில் என்ன பேசுவீர்கள்?

கே.இர்பானா இஸ்மத், ஏறாவூர்-02.

என்னிடமுள்ள கெட்ட பழக்கங்களில் இதுவுமொன்று. புதிய நண்பரிடம் நானாகப் பேச்சைத் தொடங்க மிகுந்த சங்கடப்படுவேன். அவராக ஆரம்பித்து விட்டால் பிறகு வளவளக்கத் தயாராய் விடுவேன்.

❖❖

சமாதானத்தைக் கொண்டு வந்து விடுவேன் என்று பிரதமர் சூளுரைத்திருக்கிறாரே....?

பா.தியாகநாதன், செம்புகவத்தை.

மாலின்ட் என்னும் பேரரசன் நாக்சேன் என்ற துறவியைத் தன் அரசவைக்கு வருமாறு சொல்லியனுப்பினான். துறவி வந்தார். அவரை எதிர் கொண்டழைத்த பேரரசன், "நாக்சேன் அவர்களே, உங்களை வரவேற்கிறேன்" என்று கைகளை விரித்தபடி கூறினார். துறவி சிரித்தபடி, "நாக்சேன் என்று எதை அழைக்கிறாய்? அப்படி யாரும் இங்கில்லை" என்றார். தடுமாறிய பேரரசன், "நீங்கள் புதிர் போட்டுப் பேசுகிறீர்கள்.... என் முன்னால் நிற்பவர் நாக்சேன் அவர்கள்தானே?" என்று கேட்டான். துறவி பின்னால் திரும்பிப் பார்த்து "இதுதானே நான் வந்த தேர்?" என்று கேட்டார். "ஆம். அதுதான்!" துறவி தேரிலிருந்து குதிரைகளை அவிழ்த்தார். அந்தக் குதிரைகளைக் காட்டி "இதுதான் நான் வந்த தேரா?" என்று கேட்டார். அதற்குப் பேரரசன், "குதிரைகள் எப்படித் தேராக முடியும்?" என்றான்.

துறவி, குதிரைகள் பூட்டியிருந்த நுகத்தடியைக் கழற்றினார். "இவை தான் தேரா?" என்று கேட்டார்.

"இல்லை. இவை நுகத் தடிகள். தேரில்லை!" பின்னர் அதைப் போலவே துறவி தேரின் சில்லுகள், கூரை என்று ஒவ்வொரு பகுதியையும் பிரித்துக் காட்டி, "இதுதான் தேரா?" என்று கேட்க, பேரரசன் 'இல்லை', 'இல்லை' என்று பதிலளித்தான். துறவி சலித்துப் போனவராகக் காட்டிக் கொண்டு, "எதுவுமே தேர் இல்லை என்கிறீர்கள். அப்படியானால் உங்களது தேர் இப்போது எங்கே?" என்று கேட்டார். பேரரசன் தடுமாறியதைக் கவனித்து, தொடர்ந்து பேசிய துறவி, "தேர் என்பது ஒன்று திரட்டப்பட்டது. சில பொருள்களைச் சேர்த்ததுதான் தேர். தனியாக தேர் என்று எதுவும் கிடையாது. அதுபோலத்தான், என் உடம்பு, இதயம், மூளை, என் ஆணவம் இவற்றில் எதை நான் என்கிறீர்கள்?" என்று கேட்டார். நம் பிரதமரும் சமாதானம் என்று எதைச் சொல்கிறார் என்பது தெரிய வேண்டும். நமக்குத் தெரிய வேண்டியது, அவர் என்ன அதிகாரங்களைப் பகிர்ந்து தரத் தயாராக இருக்கிறார் என்பதே!

❖❖

த.வி.கூ.வின் முன்னாள் பொதுச் செயலாளர் அமிர்தலிங்கம் அவர்களோடு தனக்கு முரண்பாடும் இருந்ததாக இன்றைய செயலாளர் கூறியிருக்கிறாரே?

வி. ரூபன், வவுனியா.

வேறென்ன சொல்லச் சொல்கிறீர்கள். அவரது பாதைதான் தனது பாதையும் என்று சொன்னால், அவர் போனது போலத்தானே இவரும் போக வேண்டும். ■

அழகாபுரி நாட்டின் சட்டப்படி எங்காவது புதையல் கிடைத்தால் அதுபற்றி அரசருக்கு அறிவிப்பதுடன், அந்தப் புதையலில் கிடைத்த திரவியங்களில் சரிபாதி அரசருக்குக் கொடுக்கப்பட வேண்டும். அதன்படி நீதிபரன் செட்டியார் தனது நான்கு புதல்வர்களுக்கும் விட்டுச் சென்ற பொக்கிஷத்தில் சரிபாதியை வண்டியில் ஏற்றிக் கொண்டு போய் விக்கிரமாதித்த மன்னரிடம் கொடுத்தனர். அத்துடன் அவர்களு டைய வீட்டில் அவர்கள் சிறுவர்களாக இருக்கும்போது மாட்டுப் பட்டிக்குப் பொறுப்பாக இருந்த பணியாளனையும் அவர்களுடன் அரண்மனைக்கு அழைத்துச் சென்றனர்.

அழகாபுரி நாடு விக்கிரமாதித்த மன்னரின் ஆட்சிக்குட்பட்டது என்பதனால் அவரிடமே புதையல் பொருட்களை

# மன்னாதி மன்னன் 120

ஒப்படைக்கச் செட்டியாரின் புதல்வர்கள் போயிருந்தனர். நீதிபரன் செட்டியாருக்குச் சொந்தமான பசுக்களைப் பல வருடங்களுக்கு முன்னர் திருடியவன் என்பதனால் அவனுக்குரிய தீர்ப்பினை வழங்கவும் மன்னரிடம் அப்பணியாளனையும் அழைத்துச் சென்றனர்.

மன்னர் அந்தப் பணியாளனை அழைத்து விசாரித்துவிட்டு, அவன் இத்தனை காலமான பின்னரும் தனது தவறை ஒப்புக்கொண்டமையினால், அவனிடமிருந்த பசுக்களில் இரண்டாயிரத்தை மட்டும் செட்டியாரின் புதல்வர்கள் நால்வருக்கும் பகிர்ந்தளித்து விட்டு, எஞ்சிய இரண்டாயிரம் பசுக்களையும் அவனையே வைத்துக் கொள்ளும்படியும் பணித்தார்.

தங்களுக்குக் கிடைத்த புதையலில் அரைவாசித் திரவியங்களையும் நேர்மையான முறையில் அரசருக்குக் கொண்டு வந்து கொடுத்தமைக்காக செட்டியாரின் நான்கு புதல்வர்களையும் மன்னர் பாராட்டினார். அவர்களுடைய நேர்மையை மெச்சித் தனது திறைசேரியிலிருந்து ஏராளமான திரவியங்களையும் அவர்களுக்கு வழங்கியதுடன், அவர்கள் கொண்டுவந்த பொருட்களை அவர்களிடமே திருப்பிக் கொடுத்து வாழ்த்தி அனுப்பி வைத்தார், மன்னர் விக்கிரமாதித்தன்.

அரியணையின் பதினெட்டாம் படியில் காவலுக்காக நின்றிருந்த பரிமள வல்லிப் பதுமை இக்கதையைக் கூறி முடித்ததும் போஜமன்னர் அங்கிருந்து வெளியேறித் தனது அரண்மனையை அடைந்தார்.

அடுத்த நாள் அதிகாலையில் முறைப்படி காலைக் கடன்களை முடித்துக் கொண்டு அரியணை வைக்கப்பட்டிருந்த மண்டபத்தைச் சென்றடைந்தார். அரியணைக்குரிய பூஜைகள் முடிவடைந்ததும் புரோகிதர்களையும் பரிவாரங்களையும் அனுப்பி விட்டு அரியணையின் படிகளில் ஏறத் தொடங்கினார். போஜ

## ஓயாது எரியும் எண்ணெய்க் கொப்பரை

மன்னர் பத்தொன்பதாவது படிக்கட்டில் காலடி எடுத்து வைத்ததும் அப் படிக்குக் காவலுக்காக நின்றிருந்த சற்குண வல்லிப் பதுமை மன்னரை மறித்தது. "போஜ மன்னரே, இதுநாள் வரை எங்கள் மன்னாதி மன்னன் விக்கிரமாதித்த பூபதியின் சகல ஆற்றல்களையும், வீரப்பிரதாபங்களையும், பரோபகார சிந்தையினையும் விளக்கும் கதைகளை எமது சகோதரிகள் கூறக் கேட்டீர்கள். எமது மன்னர் விக்கிரமாதித்த மன்னரின் நீதிநெறி தவறாத ஆட்சி முறையையும் ஏனைய குணாதிசயங்களையும் அக்கதைகளின் மூலம் அறிந்திருப்பீர்கள். அவ்வாறிருந்தும் மேற்கொண்டும் உமது பேரவாவினால் அரியணையில் ஏறி அமர

## இராஜகுமாரன்

வேண்டும் என்று கருதிவிட்டீர்கள். எமது மாமன்னர் பற்றிய மற்றுமொரு கதையை நான் கூறுகிறேன், அதனையும் கேட்ட பின்னர் தக்க முடிவுக்கு வாருங்கள்" என்ற சற்குணவல்லிப் பதுமை கதை கூற அரம்பித்தது.

உஜ்ஜயினி மாகாளி பட்டணத்தில் விக்கிரமாதித்த மன்னரிடம் சூரசேனன் என்ற வேதியன் பணிபுரிந்து வந்தான். அவன் ஒரு பிரமச்சாரி. பாரத நாட்டிலுள்ள புனித ஸ்தலங்களுக்குச் சென்று கங்கை, யமுனை, காவேரி போன்ற புண்ணிய நதிகளில் தீர்த்தமாடி வரவிரும்புவதாக மன்னரிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டான்.

சூரசேனன் பல ஊர்களையும் சுற்றிப் பார்த்து விட்டு சிங்கபுரி என்ற நகரை அடைந்தான். அவ்வூரின் நடுவில் அமைந்திருந்த கோவிலின் முன்புறத்தில் பெரியதொரு கொப்பரையில் எண்ணெய் கொதித்துக் கொண்டிருப்பதற்கான அடையாளங்களை அவதானித்தான். அந்தக் கொப்பரையின் எண்ணெய் குறைந்து விடாமலும், அடுப்பில் போடப்படும் நெருப்பு அணைந்து விடாமலும் இருப்பதனை மேற்பார்வை செய்ய சில ஏவலாளர்கள் எப்பொழுதும் அதனைக் காவல் செய்து வருவதையும் கண்டா சூரசேனன். அவர்களிடம் சென்று, கொப்பரையில் எண்ணெய் இடைவிடாமல் கொதித்துக் கொண்டிருப்பதற்கான காரணத்தைக் கேட்டான். அவர்கள் கூறிய கதை இதுதான்:

"சிங்கபுரி நாட்டை ஆளும் மன்னனுக்குப் பேரழகு வாய்ந்த வீரலெட்சுமி என்ற மகள் இருக்கிறாள். அவள் பருவ வயதை அடைந்ததும், அவளுக்கு ஏற்ற கணவனைத் தேர்ந்தெடுக்க மன்னர் தீர்மானித்தபோது மகள் வீரலட்சுமி ஒரு நிபந்தனை விதித்தாள். "நகரின் மத்தியிலுள்ள கோவில் முன்றலில் ஒரு பெரிய கொப்பரையில் எண்ணெய் நிரப்பி இரவு-பகல் முழுவதும் எரியவிட வேண்டும். கொதிக்கும் எண்ணெயில் குதித்து உயிருடன் திரும்பி வரும் அரச குமாரனையே நான் திருமணம் செய்வேன்," என்பதுதான் அந்த நிபந்தனையாகும்.

இளவரசியின் பேரழகில் மயங்கிய பல அரச குமாரர்கள் அவளுடைய நிபந்தனைக்கு உட்பட்டுத் துணிந்து கொதிக்கும் எண்ணெய்க் கொப்பரைக்குள் பாய்ந்து மடிந்து போயினர்."

இவ்வாறு சூரசேனனிடம் எண்ணெய்க் கொப்பரைக் காவலர்கள் சொன்னார்கள். இவை போன்ற பலதரப்பட்ட அதிசயங்களையும் புதினங்களையும் தனது தீர்த்த யாத்திரையின் போது கண்டும் கேட்டும் அறிந்து கொண்டு சூரசேனன் உஜ்ஜயினி மாகாளி பட்டணம் திரும்பினான்.

தான் தரிசித்த கோவில் பிரசாதங்களுடன் அடுத்த நாள் அரண்மனை சென்ற சூரசேனன் மன்னர் விக்கிரமாதித்தனை வணங்கித் தான் கொண்டு வந்திருக்கும் பிரசாதங்களையும் கொடுத்தான். மனம் மகிழ்ந்த மன்னர், சூரசேனன் சென்றிருந்த இடங்களில் கண்ட அதிசயங்களைக் கூறுமாறு கேட்டபோது, சிங்கபுரியின் கோவில் முன்றலில் இடைவிடாது எரிந்து கொண்டிருக்கும் எண்ணெய்க் கொப்பரையுடன் தொடர்புடைய கதைகளை மன்னரிடம் சூரசேனன் விவரித்தான்.

(மன்னன் வருவான்...)

## காதில பூ கந்தசாமி

### நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை *-காதில பூ கந்தசாமி-*

இந்த முறை உங்களுக்கு ஒரு சுவாரசியமான சங்கதி வைச்சிருக்கிறன். படிக்கிறதுக்கில்லை, கேக்கிறதுக்கு! என்ன, நான் எழுதிறத எப்பிடிக் கேக்கலாமெண்டு யோசிக்கிறியளோ? எழுத்து சமாச்சாரமில்லை இது. பேச்சு!

அது வந்துபாருங்கோ, எங்கட வீராதி வீர வீரப்பன் விட்டிட்டுப் போன கேஸட் என்ர கைக்கு வந்திருக்கு. எப்பிடியெண்டிறியளோ,...? வீரப்பனேதான் எனக்கு அதக் கழுகு மெயிலில அனுப்பி வைச்சவன். இனிக் கழுகு மெயிலெண்டால் என்னவெண்டும் உங்களுக்கு விளக்கம் சொல்ல வேணுமாக்கும். காட்டுக்க எங்கயிருக்கு ஈ மெயில்? அவன் கடிச்சுத் துப்பிற மான், மரைகளத் தின்ன வாற கழுகுகள்தான் அவனுக்கு நெருக்கம். அப்பிடியே ஒண்டு ரெண்டப் பழக்கம் பிடிச்சு, முந்தின காலத்தில அரசர்மார் புறா விடு தூது, அன்னம் விடுதூது அனுப்பிறதுபோல, இவன் கிரிமினல் றேஞ்சில கழுகு விடு தூதா அனுப்பி வைச்சிருக்கிறான், கழுகின்ர காலில கேஸட்டக் கட்டி.

கா.பூ கந்தசாமிக்கு எப்பிடி காட்டில இருக்கிற வீரப்பன் அவ்வளவு நெருக்கமானாரெண்டு திங்க் பண்ணிறியள். போன தடவை நடிகர் ராஜ்குமார் கடத்தலில நானும் எங்கட நெடுமாறனையாவோட பேச்சுவார்த்தை நடத்த பக்கத்துணைக்கெண்டு போய் வந்தனான். அப்ப பிடிச்ச பழக்கம். ராஜ்குமார் விஷயத்தில செய்த மிஸ்ரேக்க இப்பவும் விடக்கூடாதெண்டிட்டுத்தான் மறக்காமல் இந்த முறை நாகப்பாவைக் கடத்தேக்க குடுத்த அதே கேஸட்டில எனக்கும் ஒரு கொப்பிய அப்பிடியே அனுப்பிவைச்சிருக்கிறான்.

நான் நினைச்சது சரியாப்போச்சு. வீரப்பன் அனுப்பின கேஸட்டில இருந்த விஷயங்களை முழுசா மூடி மறைச்சு இருட்டடிப்புச் செய்து போட்டினம். நல்ல காலத்துக்கு என்ர கைக்கு இன்னொரு கொப்பி கிடைச்சது. அதை இப்ப என்ர அபிமான கேசகர்களுக்கு ( வாசிப்பவர்கள் வாசகர்களெண்டால் கேக்கிறவையள் கேசகர்கள் தானே...?) இத்தால் போட்டுக் காட்டுகிறான். தெரிவிப்பது நாங்கள்! தீர்மானிப்பது நீங்கள்!

கூ....ஊ, உர்.., கீக்..கீக்.., ம்போ..., இர்.., கீச்.., குக்குக்கூ..... ( காட்டு மிருகங்களின்ர சத்தம், கேஸட்டில பதிவாகியிருக்குது, றியலிஸ்ட்டிக்க மெயின்டென் பண்ணுறதுக்காக அப்பிடியே விட்டிருக்கிறன்.)

ம், ஹம்! ( வீரப்பன் செருமிக் கொள்கிறான். )

நான்தான் வீரப்பன் பேசறே..! இன்னா, எல்லாரு கன்னா பின்னான்னு முழுசிகிட்டு இருக்கறாப்போல இருக்கு. சத்தம் போடாம ஒழுங்கா கேட்டுக்குங்க. நா ஒருதரம்தா சொல்லுவே. நீங்க வேண்ணா இந்தக் கேஸட்ட நூறு தரம் போட்டுக் கேட்டுக்குங்க. எல்லாம் ஒரே மாதிரித்தா இருக்கும் ஏம் பேச்சு.

இந்த வீரப்பன புடிக்கிறே புடிக்கிறேன்னு எத்தின பேரு இத்தினி வருஷமா பினாத்திக்கிட்டு இருக்காங்க. முடிஞ்சிதா? எத்தினி மொதலமைச்சரைக் கண்டுபுட்டா இந்த வீரப்பே! எத்தினி அதிரடிப்படைங்க, காட்டிலாக்கா அதிகாரிங்க, ஸ்பெஷல் பொலிசுக்காரங்களோட கண்ணுக்க விரலை வுட்டு ஆட்டியிருக்கே. என்னைப் புடிக்கிற வேலையை வுட்டுப்புட்டு, இப்ப நாம புடிச்ச ஆள ஏம் புடிச்சே எதுக்குப் புடிச்சேங்கறத கேட்டுக்குங்க.

இந்தாப் பாருங்க, ஒங்க அரசாங்கமும் இந்தப் பேமானிப் பத்திரிகைக் காரங்களுமா என்னைப்போயி ஏதோ, கடத்தல்காரே, கொள்ளைக்காரே, கொலைகாரேன்னு ஜனங்களுக்குப் பூச்சாண்டிக் கதை கட்டி வைச்சிருக்காங்க. அதெல்லா சுத்தப் பொய்யி, நா, இந்த நாட்டுக்கு நல்லது பண்ண வந்தவேங்கறத பப்ளிக்கா எடுத்துக் காட்டுறதுதா ஏம் மொதல் நோக்கோ. இந்தா ஏங் கெண்டிஷனுங்கள சொல்றே, பாத்துக்க.

தமிழ் நாட்டு ஜனங்களுக்கு காவேரி ஆத்தத் தெசை திருப்பறேன்னே எத்தனை காலத்துக்கு தண்ணிகாட்டிக்கினு வாறிங்க. தண்ணிதா வேணுன்னா, ஏங் காவேரியைப் பாத்துக் கொட்டாவி விட்டுக்கினு நிக்கறே. இந்தா, இந்து சமுத்திரத்திலதா எம்புட்டுத் தண்ணி கெடக்கு. அதை அப்பிடியே தமிழ்நாட்டுக்குத் தெசை திருப்பு.

இங்கிட்டு அதென்னா, சத்துணவுத் திட்டமுன்னு காய்ஞ்ச ரொட்டித் துண்டோட சுத்தப் பம்மாத்துக் காட்டிகினு நிக்கறே. வறிய ஜனங்க, வரட்சியால பாதிக்கப்பட்டவங்க, ஹரிஜனங்க, ஸ்கூலு பிள்ளைங்க, அகதி முகாமுல வாடுற இலங்கத் தமுழங்களுக்கெல்லா மான் கறி, மரைக் கறியோட மூணுவேளை சோறு போடு!

வெத்துப் பேச்சுக்காகவே சிறைப்பிடிக்கப்பட்டிருக்கிற நம்ம தோஸ்து நெடுமாறனை ஒடனடியா விடுதலை செஞ்சு, தாய்லாந்தில நடக்கப்போற இலங்கைப் பேச்சுவார்த்தைக்கு இந்தியப் பிரதிநிதியா அனுப்பு.

இலங்கைக்குப் போடப்போற பாலத்து வழியா சந்தனங் கடத்தறதுக்கு, யானைத் தந்தோ எடுத்தாறதுக்கு நம்மாக்களுக்கு அனுமதி வழங்கு.

இந்தாப்பாரு, இலங்கயில இன்னா ஓ வீட்டு சீதாப் பிராட்டியையா கடத்திகினு போயி வைச்சிருக்கா? அவனக் கொண்ணா, இவனக் கொண்ணாங்கற கதைய வுட்டுப்புட்டு இப்ப நா கொண்ணாங்கறத ஒழுங்கா கொடுக்கற அலுவலப் பாரு.

நமக்குன்னு இன்னா பெரிசா வேண்டியிருக்கு? இந்த சந்தனக் கடத்தலே சீவியமுன்னாயிட்டுதா, அதுக்கு வேண்ணா ஒரு ஒத்தாசைக்கு நாப்பது லாரி, ஏழெட்டு ட்ராக்கு, நாலைஞ்சு புல்டோசரு, மத்தது அது என்னா நம்ம யானைமாதிரி தும்பிக்கை ஒண்ண வைச்சிகிட்டு மண்ணை அள்ளிக் கொட்டுமே, கட்டப்பில்லரோ ஏதோ ஒண்ணு - அதுலபாத்து ஒரு ஐஞ்சாறை அனுப்பிவைபி. அதோட நல்ல கூரான கோடரியாப் பாத்து எம்புட்டு முடியுமோ அம்புட்டு... ஒரு ஆயிரம் ரெண்டாயிரமுன்னு லாரிக்குள்ள போட்டுடு.

எல்லாத்துக்கும் மேல, நாலுபேருக்கு நல்லது பண்ணுற நம்ம சந்தனக் கடத்தல் தொழில சட்டரீதியாக்கி, நாப்பது கோடி சனங்களுக்கு கெடுதல் பண்ணிக்கிட்டிருக்குதே அந்த மகா பாதகத் தொழிலு, அதுதா அரசியலு அதை சட்டவிரோதமுன்னு பிரகடனப் படுத்திடு.

அப்பதா நா இந்தாளத் திருப்பித் தருவே. அடுத்த கேஸட்டு அனுப்பும்வரை,

வாழ்த்தரிய வாழ்த்துக்கள் கூறி விடைபெற்றுக் கொள்வது, உங்கள் அன்புக்குரிய ச. க. வீரப்பன்!

யாவும் கலப்படமற்ற கற்பனை


## இந்தவாரம் உங்கள் பலன்

08.09.2002 தொடங்கி 14.09.2002வரை

### சோதிட மாமணி தில்லை


### கிரக நிலை

சிங்கம் - சூரியன், செவ்வாய் கன்னி-புதன் துலாம்- வெள்ளி, விருட்சிகம்-கேது. இடபம்- இராகு. மிதுனம் - சனி, கர்க்கடகம்-வியாழன், சந்திரன் கன்னி, துலாம், விருட்சிகம், தனு இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.




**மேடம்**

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) மனமகிழ்ச்சி, சுப காரிய நன்மை, பெரியோர் உதவி, பண வரவு உண்டு. உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளினால் நன்மையுறுவர். மாணவர்களுக்குக் கல்வி உயர்ச்சி உண்டு. விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 1.




**இடபம்**

(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) கௌரவம், புதிய முயற்சி பலிதம், அன்னியர் உதவி, வார இறுதியில் வீண் செலவுண்டு. உத்தியோக ரீதியாக நன்மைகள் ஏற்படும். மாணவர்களுக்குக் கல்வி மந்தம் நீங்கும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல: 6.




**மிதுனம்**

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்கும். பொருள் வரவு, காரியானுகூலம், உத்தியோகத்தில் திடீர் மாற்றங்களைச் சிலர் அடைவர். மாணவர்களுக்குக் கல்வி உயர்ச்சி தரும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 5.




**கர்க்கடகம்**

(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) இன சன விரோதம். செலவு மிகுதி, மறைமுக எதிர்ப்பு, தூர இடப் பயணம் உண்டு. உத்தியோக ரீதியாகச் சிலர் மறைமுக எதிர்ப்புக்களுக்கு ஆளாகுவர். மாணவர்களுக்குக் கல்வியில் மந்த நிலை தோன்றும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வியாழன்.
அதிஸ்ட இல.: 4.




**சிங்கம்**

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) தொழிலில் உயர்ச்சி. கௌரவம், தேகாரோக்கிய நன்மை. பொருள் வரவு மந்த நிலை. உத்தியோக ரீதியாக வார இறுதியில் நன்மை கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் ஊக்கமெடுக்க வேண்டும். விவசாயிகள், வியாபாரிகள் எதையும் திட்டமிட்டுச் செய்வது நன்மை தரும்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 7.




**கன்னி**

(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) முயற்சிகள் பலிதம். பணவரவு நன்மை. வெளியிடப் பயணம் உண்டு. உத்தியோக ரீதியாகச் சிலர் இடமாற்றங்களைப் பெறுவர். மாணவர்களுக்குக் கல்வியில் உயர்வு உண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 5.




**துலாம்**

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்) தொழில் கஷ்டம், காரியத் தடை, பண வரவு குன்றும். வெளியிட வாசம் உண்டு. உத்தியோகத்தர்கள் வீண் கஷ்டங்களுக்கு ஆளாகுவர். மாணவர்கள் எதிலும் விழிப்புடன் நடந்துகொள்ளவும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல.: 6.




**விருட்சிகம்**

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) பெரியோர் உதவி, கௌரவம், பணவரவு மேன்மை, உயர்ந்த நிலை, உத்தியோக ரீதியாக முன்னேற்றம் உண்டு. மாணவர்களுக்குக் கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 3.




**தனு**

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) தொழில் மேன்மை. தேகாரோக்கியம் பாதிப்பு. செலவு மிகுதி. வெளியிடப் பயணமுண்டு. உத்தியோக ரீதியாகச் சிலருக்குத் தொல்லைகள் நேரும். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனம் எடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: வியாழன்.
அதிஸ்ட இல.: 4.




**மகரம்**

(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழில் விருத்தி. மறைமுக எதிர்ப்புக்கள் நீங்கும். பண வரவு, பெரியோர் உதவி உண்டாகும். உத்தியோக ரீதியாக வார இறுதியில் பிரச்சனைகள் தோன்றும். மாணவர்களுக்குக் கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளில் கவனம் தேவை.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 2.



**கும்பம்**

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) மனக் கலக்கம். செலவு மிகுதி, அன்னியர் பகை. வீண் குறைகேட்க நேரிடும். உத்தியோகத்தில் சிலருக்கு மேலதிகாரிகளால் தொல்லைகள் உண்டாகும். மாணவர்கள் கல்வியில் குழப்பத்திற்கு ஆளாகுவர். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல.: 7.



**மீனம்**

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) மனக்குறை நீங்கும். முயற்சிகளில் வெற்றியுண்டாகும். பணவரவு சிறந்து விளங்கும். உத்தியோகத்தில் சிலர் வீண் பிரச்சனைகளுக்கு ஆளாகுவர். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனமெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வியாழன்.
அதிஸ்ட இல.: 1.





# டைட்டானிக் பாட்டி



தற்போது தனது 90 ஆவது வயதில் வாழும் இந்தப் பாட்டி, தான் பிறந்த 9 ஆவது வாரத்தில் மிகப் பெரும் உயிராபத்தொன்றில் இருந்து மீண்டவர். டைட்டானிக் கப்பலில் பயணம் செய்த இவர் அன்று அதிஷ்டவசமாக உயிர்தப்பி 90 ஆண்டுகள் வாழ்ந்து விட்டார். மில்வினா டீன் என்ற இந்த பிரிட்டிஷ் அம்மணி தனது தாய், தந்தை மற்றும் 18 மாத சகோதரனுடன் தன் முதல் பயணத்திலேயே மூழ்கிப் போன டைட்டானிக் கப்பலின் 3 ஆவது வகுப்பில் பயணம் செய்தார். அத்திலாந்திக் சமுத்திரத்தில் பனிப்பாறை ஒன்றுடன் மோதி டைட்டானிக் மூழ்கத் தொடங்கியதும் சிறிய உயிர்காக்கும் படகுகளில் முதலில் குழந்தைகளும்பெண்களுமே ஏற்றப்பட்டனர். 9 மாதக் குழந்தையாக இருந்த இவர், தாய், சகோதரன் சகிதம் உயிர் தப்பினார். இவரது தந்தைக்கு அந்த அதிர்ஷ்டம் வாய்க்கவில்லை. டைட்டானிக் கப்பலில் 3 ஆவது வகுப்பு பயணிகளில் குறைந்த எண்ணிக்கையானவர்களே காப்பாற்றப் பட்டனர். அதிலிருந்த 79 குழந்தைகளில் 27 குழந்தைகள் மட்டுமே உயிர் தப்பின. கப்பலில் மொத்தமாக இருந்த 109 குழந்தைகளில் 57 மட்டுமே மீண்டன.

டைட்டானிக் திரைப்படத்தில் கப்பலின் அடியிலிருந்து கண்டுபிடிக்கப்படும் ஒரு ஓவியத்தைப் பகிரங்கப்படுத்தும் போதுதான் அதிலிருப்பது தான் தான் எனக் கூறிக்கொண்டு ஒரு மூதாட்டி ஆராய்ச்சியாவர்களிடம் சென்று நடந்த சம்பவத்தை விபரிப்பதாகவே படத்தின் கதை அமைகின்றது. அந்தச் சித்திரம், மூதாட்டி, காதல், பாடல் எல்லாம் கற்பனைதான். 1912ஆம் ஆண்டு டைட்டானிக் என்ற மிகப் பெரிய, சொகுசுக் கப்பல் தனது முதல் பயணத்தில் விபத்துக்குள்ளானது. அதில் பயணம் செய்தவர்களில் 1517 பேர் பனிப்பாறைகள் மிதக்கும் அத்திலாந்திக் சமுத்திரத்தில் மூழ்கிப் பலியானார்கள்.






# தக்காளித் தாக்குதல்

தக்காளிப் பழங்களால் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ளும் இந்த அட்டகாசமான விளையாட்டு ஸ்பெயின் நாட்டில் ஆண்டு தோறும் நடைபெறுகின்றது. உணவுப் பொருளொன்றை பரஸ்பரம் வீசி விளையாடும் விளையாட்டு விழா என்ற அடிப்படையில் உலகிலேயே மிகப் பெரிய மோதல் இதுதான். டொமாடினா என்றழைக்கப்படும் இந்த விழா ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் மாதத்தில் கடைசிப் புதன்கிழமைகளில் போனோல் என்ற இடத்தில் நடைபெறுகின்றது. 1999 ம் ஆண்டு நடைபெற்ற இந்த தக்காளி விழாவில் 25 ஆயிரம் பேர் கலந்து கொண்டு ஒரு மணித்தியாலத்திற்குள் 120 தொன் தக்காளிப் பழங்களை பரஸ்பரம் வீசி எறிந்துள்ளனர். விழா முடிவடைந்ததும் நகர வீதியில் தக்காளிச் சாறு ஆறு போல் ஓடும். நகராட்சி அதிகாரிகள் வந்து உடனடியாகச் சுத்தம் செய்வார்கள் 1944 ம் ஆண்டு இந்த வீதி வழியாகச் சென்று கொண்டிருந்த தக்காளி லொறி ஒன்று விபத்தில் சிக்கிய போது அதிலிருந்த தக்காளிப் பழங்களை அருகில் உள்ளவர்கள் வீசி விளையாடியதன் மூலம் இந்த அபூர்வ விழா ஆரம்பமானதாகக் கூறப்படுகின்றது.



# பிறந்தநாள் வாழ்த்து



செல்வி தாரண்யா 12.11.2002
செல்வன் சர்மிலன் 12.09.2002

நெல்லியடியைச் சேர்ந்த திரு.திருமதி [illegible] தம்பதியினரின் செல்வப் புதல்வி தாரண்யா தனது மூன்றாவது பிறந்த நாளை 12.11.2002 இலும் செல்வப் புதல்வன் சர்மிலன் தனது முதலாவது பிறந்தநாளை 12.09.2002 இலும் [illegible] தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்கள். இவர்களை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, [illegible] [illegible]

தகவல்: அப்பா - [illegible]

# பாதுகாப்பு

தண்ணீருக்குள் அழுதால் தெரியாதென்பார்கள். துப்பினாலும் அப்படித்தான். ஆனால், தாய்லாந்தை அண்மித்த கடலில் வாழும் ஒரு வகை மீன் தனது குழாய் வடிவான வாய்க்குள் இருந்து ஒருவகைத் திரவத்தை வேகமாக வீசும் தன்மையையே தன்னுடைய பாதுகாப்பு ஆயுதமாக வைத்திருக்கிறது. கறுப்பு, மஞ்சள் நிறங்களையுடைய (டொக்லோஸ் ஜெகியுலேட்டர்) மீனினம் அதன் குஞ்சுகளை ஆபத்தான சில சிறிய கடல்வாழ் உயிரினங்களிடமிருந்து காக்கத் தனது வாயைப் பயன்படுத்துகின்றது. இவற்றினால் 5 அடி தூரத்திற்கு வேகமாக இந்தத் திரவத்தை உமிழ முடியும். ஒரு தாக்குதல் முயற்சி தவறினால் சடுதியாக அதே போல் மீண்டும் ஒரு முறை அந்தத் திரவத்தை ஒன்று திரட்டி உமிழும் ஆற்றல் இந்த மீன்களுக்கு உண்டு.



வட அத்லாந்திக் சமுத்திரத்தில் வாழும் ஒரு வகை மீனினம் ஆபத்து நேரும்போது கண்களால் இரத்தத்தை வீசி எறியும் ஆற்றலைக் கொண்டுள்ளது.

# 1வது பிறந்தநாள் வாழ்த்து 03.09.2002



செல்வி. ப.அபிஷா

ஏழாலை மத்தியைச் சேர்ந்த பசீரதன் - ஸ்ரீநந்தினி தம்பதிகளின் செல்லப் புதல்வி அபிஷா தனது முதலாவது பிறந்தநாளை 03.09.2002 அன்று கனிவில் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரது அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா லண்டன், அம்மம்மா இலங்கை, அப்பப்பா, அப்பம்மா இலங்கை, ஜெர்மன் மாமா, ஞானகி அத்தை லண்டன், ஜெனிவ் மாமா ஜேர்மனி, சத்தியேந்திரன் மாமா, [illegible]

தகவல்:- திருமதி மீனாட்சி சண்முகநாதன் (கொழும்பு)



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 9A ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் செப். 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.